கல்கி

KALKI 4.11.90 ரூ. 2.50



சமாதான வீரருக்கு நோபெல் பரிசு!


புதிய
மோத்தி ஸாண்டல் சோப்பு
MOTI
உங்களுக்காக . . .
உங்கள் மேனி
எழிலுக்காக
மோத்தியில் நிறைந்
திருக்கு-சந்தன குணம்
மோத்தியில் மணக்குது
சந்தனம்... சந்தனம்.
மேனி
எழிலின்
பிரதிபலிப்பு
டாடா தயாரிப்பு
CLARION/B/T/47/203 TML



* மரக் கன்றுகள் நடும் கல்லூரி மாணவ, மாணவியருடன் நானா.

ஐ லவ் பாம்பே!


ஒரு கோடியை எட்டிய மக்கள் பெருக்கம்; தொழிலகங்கள் வெளியிடும் விஷவாயுக்கள்; ஒரு லட்சத்துக்கும் அதிகமான மோட்டார் வாகனங்கள் விடும் கரிப் புகை; ஒரு தீவு என்பதால் வளர வகையில்லாத இடநெருக்கடி — இவற்றால் அல்லல் படும் பம்பாய்க்கு விடிவு காலமே இல்லையா?

''இருக்கிறது'' என்கிறார் பம்பாயின் ஷெரீஃப் நானா சுதாசாமா. இதற்காக இவர் வழங்கும் தாரக மந்திரம்தான் ''ஐ லவ் பாம்பே!''.

''நமது நகருக்கு நசிவு காலம் வந்து விட்டது; அழிவு நேரம் நெருங்கி விட்டது என்று நாம் ஏன் எதிர்மறையாக எண்ண வேண்டும்? 'என் நகரம் இது! நான் இதை மிகவும் நேசிக்கிறேன். இதற்கு என்னால் இயன்றதைச் செய்தால் இது ஓர் அழகு நகரமாக மாறும்!' என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும்; செயல்படவும் வேண்டும்'' என்கிறார் நானா.

'ஐ லவ் பாம்பே' என்ற தமது இயக்கத்திற்காக முதலில் பள்ளி, கல்லூரிகளைத்தான் அணுகினார் சுதாசாமா. கட்டடக் கலை நுணுக்கக் கல்லூரி மாணவர்கள் தங்கள் விழாவுக்கு இவரை அழைத்தபோது, இவர் விதித்த நிபந்தனை: 'உங்கள் கல்லூரிக் கட்டடத்தை நன்கு வெள்ளையடித்து, அதைச் சுற்றிலும் சில மரங்களை நட்டால் தான் நான் வருவேன்.' இதற்கு அன்புடன் மாணவர்கள் இசைய, அதையே எல்லாப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், பொது வேண்டுகோளாக விடுத்தார் நானா. அவர்களை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க, 'ஐ லவ் பாம்பே' என்று அச்சிட்ட டி ஷர்ட்டுகளை இலவசமாகக் கொடுத்தார். பள்ளிகளும், கல்லூரிகளும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டு சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்த ஆரம்பித்தன. இவர்களோடு மாநகராட்சி, மாநில அரசு நிர்வாகங்களும் ஒத்துழைப்புத்தர, ஒரே ஞாயிறன்று காலை இரண்டு மணி நேரத்தில் இருபதாயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன!

பம்பாய் நகரின் பெருங்குறையாக வுள்ளது அதன் குப்பங்களின் அசுத்தம். இவற்றின் குப்பைகளை உடனுக்குடன் அகற்றினால்தான் பம்பாய் அழகு பெறும் என்று நினைத்தார் நானா. இதற்கான திட்டத்திற்கு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா பெரிதும் உதவ, மக்களுக்கு நூற்றுக் கணக்கில் பாலிதீன் பைகளை இனாமாகக் கொடுத்து, அவற்றில் குப்பைகளைக் கட்டி எறியும் பழகத்தை ஏற்படுத்தினார். ''ஒவ்வொரு பிளாஸ்டிக் பையும் முப்பது பைசா தான். ஒரு குடும்பம் மாதம் ஒன்பது ரூபாய் செலவழித்தால் தன் சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள முடியும்.



• புதிய அழகான குப்பைத் தொட்டி.

இப்படி பாலிதீன் பைகளைப் பயன் படுத்துவதால் குப்பைகள் பறந்து பரவாது. அவற்றை அள்ளிப் போடுவதும் சுலபம். நடுத்தரக் குடும்பங்கள் தாங்களே இதைச் செய்ய முடியும். ஏழைகளுக்குத்தான் பாலிதீன் பைகளை இனாமாக வழங்குகிறோம்'' என்கிறார் நானா.

குப்பைக்குப் பைகள் கொடுத்ததோடல்லாமல் சில தனியார் நிறுவனங்களின் உதவியுடன் ஆங்காங்கே பளிச் சென்ற மஞ்சள் நிறத்தில் பெரிய பெரிய பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளையும் நிறுவியுள்ளார் நானா. இதுவும் நல்ல பலன் அளித்து வருகிறது.

நகரில் பொதுமக்கள் உபயோகத்திற்கான கழிப்பகங்கள் போதிய அளவு இல்லாததால், மக்கள் ஆங்காங்கே அசுத்தப்படுத்தும் பழக்கத்திற்கு ஆளாகிறார்கள் என்பதையறிந்த நானா, மக்கள் புழங்கும் மையப் பகுதியில் மாநகராட்சி, மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் 'சுலப்' என்று அழைக்கப்படும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட பொதுக் கழிப்பகங்களைத் திறக்கச் செய்தார். தாதர், ஆஷியாட் பஸ் ஸ்டாப், ஹாஜி அலிப் பகுதி, ஒர்லி கடலோரப் பகுதி இவற்றில் கட்டப்பட்டுள்ள நவீனக் கழிப்பறைகள் மக்களால் பெரிதும் பயன்படுத்தப் படுவதுடன் அவற்றின் சுற்றுப் புறமும் சுத்தமாக வைக்கப் பட்டுள்ளன.

ஒரு நகரின் பிரதான கட்டடங்கள் ஒளிவிளக்குகளால் அழகு செய்யப் பட்டால் அதுவே தனிக் கவர்ச்சி என்பது இவர் கருத்து. அரசாங்கமும், சில தனியார் நிறுவனங்களும் சரித்திரப் புகழ் பெற்ற கார்ப்பரேஷன் கட்டடம், வி. டி. ரயில்வே ஸ்டேஷன், டவுன் ஹால், ஃப்ளோரா ஃபௌண்டன், பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராஜாபாய் டவர்ஸ், சௌபாத்தி கடற்கரை இவற்றை இவரது தூண்டுதலால் அலங்கார விளக்குகளால் அலங்கரிக்க, இன்று நகரமே புதுச்சோபை பெற்றுத் திகழ்கிறது! ''மக்கள் தங்கள் பொதுக் கட்டடங்களை இன்று பெருமையோடு நோக்குகிறார்கள். நம் நகரம் அழகானது என்ற எண்ணம் அவர்களிடையே வேரூன்றி விட்டது'' என்கிறார் நானா.

நம் ஊரில் போகிபண்டிகையின் போது சிறுவர்கள் நெருப்பு மூட்டி கும்மாளமடிப்பது போல் வடக்கே ஹோலி பண்டிகையின் போது செய்வார்கள். இச்சமயத்தில் ஏராளமான மரக்கிளைகள் ஒடிக்கப்பட்டு தீக்கிரையாகும். இதைக் கண்டு வருந்திய நானா ஒரு உத்தி செய்தார். முக்கிய பண்டிகைகளான தீபாவளி, நவராத்திரி, ஹோலி போன்றவற்றை ஆயிரக் கணக்கானோர் பங்கு பெறும் 'சர்வ ஜன உத்சவங்களாகக் கொண்டாட வழிவகுத்தார். ''உலர்ந்த இலைகளையும், காய்ந்த சருகுகளையும், பட்டைகளையும் வைத்து நாங்கள் கலந்து மூட்டும் ஹோலித்தீ கோலாகலத்தில் அனைவரும் கலந்து கொள்வதால் அவர்கள் தனித்தனியாகப் பச்சை மரங்களை வெட்டி நெருப்பூட்டுவது குறைந்து விட்டது. இதன் மூலம் பல மரங்கள் காப்பாற்றப் பட்டன!'' என்கிறார்.

ஒரு நகரம் புதுப்பொலிவு பெற வேண்டுமென்றால், புறத்தூய்மை மட்டும் போதாது. அகத் தூய்மையும் வேண்டும். மக்கள் ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டிருக்கிறார் நானா. ''இதனாலேயே போதைப் பொருட்களை ஒழிப்பதில் அதிகக் கவனம் செலுத்துகிறோம். இதில் அரசாங்கம் மட்டுமின்றி பல பொது நிறுவனங்களும் ஒத்துழைப்புத் தருகின்றன. சுனில் தத், ஷப்னா ஆஸ்மி, ரந்தீர் கபூர் போன்ற நடிக நடிகையரும் ஆங்காங்கே கூட்டங்கள் கூட்டிப் போதை மருந்துகளின் தீமைகளை எடுத்துச் சொல்கிறார்கள்'' என்று பெருமையோடு கூறுகிறார் நானா.

''மக்களை உற்சாகப்படுத்துவதற்காகத் தம் செலவிலேயே, 'கிரீன் பாம்பே, க்ளீன் பாம்பே', 'ஐ லவ் பாம்பே' போன்ற சுவரொட்டிகளையும், ஸ்டிக்கர்களையும் நானா விநியோகிக்கிறார். வெறும் அலங்காரமாகவே இருந்த ஷெரீஃப் பதவியை ஓர் ஆக்க பூர்வமான பதவியாக்கி ஒரு இயக்கத்தையே தோற்றுவித்த நானாவின் பதவிக் காலம் முடிந்தாலும் பம்பாய் அவரை விடத் தயாராயில்லை. இந்த நூற்றாண்டிலேயே முதன் முறையாக இரண்டாவது ஆண்டும் ஷெரீஃப் பதவி வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார்!

— ராஜீவி நரசிம்மன்.

யோசனை தெரிவித்த வாசகர்: எஸ். காந்திராஜ், 6 B/3, போஸ் தெரு, 4 வது சந்து, செல்லூர், ராஜு ஆசாரி பிளாக், மதுரை — 2.

ரஷ்யாவில் ராமகிருஷ்ண மடம்



* சுவாமி தபஸ்யானந்தா

"ராமகிருஷ்ண மடத்தில் ஓர் இந்து தான் துறவியாக வேண்டும் என்பதில்லை..."

'**மா**ஸ்கோவில் ராமகிருஷ்ண மடத்தின் கிளை ஒன்று நிறுவப்படும் என்று செய்தி வெளியாகியிருக்கிறது. அதன் பின்னணித் தகவல்களை அறிந்து வெயிடுங்களேன்' என்று வாசகர் நெல்லை குரலோன் வழங்கிய யோசனையை ஏற்றுக் கொண்டு மயிலை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி தபஸ்யானந்தாவைச் சந்தித்தோம்.

சுவாமிகள் சொன்னார்:

"**இ**ரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பாகவே இதுபற்றிப் பேச்சு எழுந்தது. காரணம், கல்கத்தாவிலுள்ள ராமகிருஷ்ணா இன்ஸ்ட்டியூட் ஆஃப் கல்ச்சர் அமைப்பின் செயலர் சுவாமி லோகேசுவரானந்தா மூன்று, நான்கு முறை சோவியத் யூனியனுக்குப் போய்ச் சொற்பொழிவாற்றி விட்டு வந்தார். அங்கே அவர் சந்தித்த பல ருஷ்யர்களும், வேதாந்தக் கருத்துக்களை அறிந்து கொள்ளுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். பிறகு ஒரு குழு மாஸ்கோவிலிருந்து வந்து, தாங்கள் இந்த விஷயத்தில் தீவிரமாக இருப்பதை எடுத்துச் சொன்னார்கள். அதன் பிறகே ராமகிருஷ்ண மடத்தின் கிளை ஒன்றை அங்கே நிறுவலாம் என்ற யோசனை வலுப்பட்டது.

"ஆறு மாதம், ஒரு வருடம் வரை, கிளை நிர்வாகத்தில் பேலூர் மடத்திலிருந்து யாரேனும் ஒருவர் சென்று பயிற்சி கொடுக்க முடியும். அதாவது ருஷ்யர்களே தங்கள் கிளையின் நிர்வாகத்தை மேற்கொள்ளுவது வரை. பிறகு மற்ற இடங்களில் உள்ளது போல, அந்த நாட்டுக்காரர்களே அதை நிர்வகிப்பார்கள்.

"இது ஒன்றும் புதிது அல்ல. இராக்கில் உள்ள ராமகிருஷ்ண மடத்தை நிர்வகிப்பவர் ஒரு முஸ்லிம்தான். இங்கிலாந்து, அமெரிக்காவின் பல மாநிலங்கள், ஜப்பானில் டோக்கியோ, என்று கிறிஸ்துவர்களும், புத்தமதத்தினரும்தான் சுவாமிகளாக இருந்து நிர்வகித்து வருகிறார்கள்.

"அதற்காக அவர்கள் மதம் மாறிவிடுவதில்லை. ஓர் இந்துதான் ராமகிருஷ்ண மடத் துறவியாக இருக்க வேண்டுமென்பதில்லை. அவர்கள் 'வேதாந்திகள்' என்றே குறிப்பிடப்படுகிறார்கள்.

"உலகின் பல பாகங்களிலிருந்தும் ராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் துவங்க வேண்டுகோள்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. சமீபத்தில் பிரேசில் நாட்டிலிருந்து கூட வந்திருக்கிறது.

"மாஸ்கோவில் தகுந்த இடம் இன்னும் முடிவாகவில்லை. முடிவானதும், அங்கே பணிகளைத் துவக்க அந்நாட்டுச் சூழலையும் அங்கேயுள்ள சிந்தனைகளையும் நன்கு உணர்ந்த சந்நியாசி ஒருவர் அனுப்பிவைக்கப்படுவார்.

"சோவியத் யூனியனில், சமீப காலமாக அதன் அதிபரால் கொண்டுவரப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரமும், மதச் சுதந்திரமும் இதற்கு வழி செய்திருக்கின்றன என்றும் சொல்லலாம்."

சந்திப்பு: **சித்தார்த்.**



சமாதான வீரருக்கு நோபெல் பரிசு!

சோவியத் யூனியனின் அதிபரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான மிகையில் கோர்பசேவ் அவர்களுக்கு உலக சமாதானத்துக்கான நோபெல் பரிசு வழங்கி கௌரவித்திருப்பது இந்த யுக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கால உலக அரசியல் வரலாற்றை ஆழ்ந்து பயின்று வருபவர்களுக்கு இந்த நற்செய்தி வியத்தகு நம்பிக்கைகளை உருவாக்குவதாகும்.



* தம் மனைவியுடன் கோர்பசேவ்...

பொய், சூது, தீமையெல்லாம் அரணியத்தில் பாம்புகள் போல் மலிந்து வளர்ந்து மண்டிக் கிடந்த அந்த ருஷ்ய நாட்டில், உலகையே குலுக்கி விழிப்புறச் செய்த ஒரு யுகமாற்றம், எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்தது! மாறுபட்ட சமுதாய அமைப்புள்ள நாடுகளுக்கெல்லாம், அங்குள்ள ஆளும் வர்க்கங்களுக்கெல்லாம் சோவியத் யூனியன் தோன்றிய நாள் தொட்டு ஒரு சவாலாய், ஓர் அச்சுறுத்தலாய் நாளடைவில் பெருகிவரும் ஒரு பேரபாயமாய்த் துலங்கியது. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பாசிஸத்தின் மீது நேச நாடுகள் கொண்ட வெற்றியின் பெரும் பங்கு, பேரிழப்பு அனைத்தும் சோவியத் யூனியனுக்கே உரியது. பாசிஸம் ஒழிந்த பிறகு, கம்யூனிஸத்தின் சார்பாக, உலக வல்லரசு

ஜெயகாந்தன்

களில் ஒன்றாக சோவியத் யூனியன் உயர்ந்தது.

உலகின் பொது எதிரியாக விளங்கிய பாசிஸத்தை வென்ற பிறகும் கூட உலக மக்களுக்கு நிரந்தர சமாதானம் உத்தரவாதமாகவில்லை. மாறாக, இன்னும் ஓர் உலக யுத்தத்தை நிகழ்த்துவதற்காக வல்லரசுகள் மேலும்மேலும் முஸ்தீபுகளில் முனைந்திருந்தன.

சோவியத் ருஷ்யாவின் தலைமையில் அதனைச் சார்ந்த சோஷலிச நாடுகள் 'வார்ஸா ஒப்பந்த நாடுகள்' என்ற ஒரு கூட்டணியை நிறுவி, அமெரிக்காவின் தலைமையில் அமைந்த **NATO** கூட்டணிக்கு எதிராக எதிர்நடவடிக்கை எடுத்தது சரியான காரியமென்றே உலக சமாதான விரும்பிகளால் கூட வாதிக்கப்பட்டது.

இடைவிடாத கெடுபிடி போர் நெருக்கடி, ஒருவர் எல்லையில் ஒருவர் ஊடுருவி உளவு பார்த்தல், ஆயுதம் தாங்கிய ஏஜெண்டுகளை உலகெங்கிலும் ஊடுருவச் செய்தல், போட்டி போட்டுக்கொண்டு பூமிக்கோளத்தையே பூண்டற்றுப் போகச் செய்து விடும் நாசகார அணு ஆயுத ரசாயன போர்த்தளவாடங்களைப் பெருக்குதல், நாடுகள் ஒன்றையொன்று குறிபார்த்துக் கண்டம் விட்டுக் கண்டம் தாவும் ஏவுகணைகளை நிறுத்துதல், ஆயுதம் தாங்கிய தங்கள் ராணுவத்தை அனுப்பி, இன்னொரு நாட்டு அரசைக் கவிழ்த்தல், விண்வெளியையும் விட்டு வைக்காத நட்சத்திரப் போர் அச்சுறுத்தல் ஆகிய வல்லரசுகளின் போட்டிச் செயல்களில் சோவியத் யூனியனும் பங்கு பெற்றது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் உலகத்தின் நிலைமை அறிவாளிகளும் விஞ்ஞானிகளும் மனிதாபிமானிகளும் அஞ்சத் தகுந்த அபாயத்தின் எல்லையைத் தொட்டு நின்றது.

கம்யூனிஸத்தின் பெயராலும் முதலாளித்துவத்தின் பெயராலும் போட்டியிட்டுக் கொண்டு இந்தப் பூமண்டலத்தையும் இதில் வாழும் கோடானு கோடி மானுடர்களையும் இன்னபிற மிருகங்களையும் பறவைகளையும் தாவரங்கள், செடி கொடிகள், புல் பூண்டு அனைத்து ஜீவராசிகளையும் வேரற்று அழித்து விடக் கூடிய உரிமையை இந்த வல்லரசுகளுக்கு யார் தந்தது? — என்று எண்ணற்ற நாடுகள் குமைந்து குமுறின. கோஷ்டி சேரா நாடுகளின் இந்தக் குமுறல்களை சோவியத் யூனியன் எப்போதும் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது இப்போது நினைவு கூரத்தக்கது ஆகும். எனினும் அண்மைக் காலம் வரை உலகையே அச்சுறுத்திய அந்த மூன்றாம் உலகப் போருக்கான நெருக்கடி அகன்று விடவில்லை.

கம்யூனிஸம், சோஷலிஸம், உலக சமாதானம் என்பனவற்றையெல்லாம் ஒரு புறம் பிரசார முழக்கம் செய்து கொண்டு, மறுபுறம் ஏகாதிபத்திய வல்லரசுகளின் செயல்களைக் காரணம் காட்டி, அதே வழியில் ஆயுதப் பெருக்கத்தில் ஈடுபடும் சோவியத் யூனியனை, 'இதுவும் ஒரு வல்லரசுதானே, இதுவும் ஒரு புதுவித ஏகாதிபத்தியம்தானே' என்று பலரும் குற்றம் சாட்டியதுண்டு.

சோவியத் யூனியனின் அனைத்துத் தவறுகளுக்கும் ஸ்டாலினிஸம்தான் காரணம் என்று விமர்சித்த, ஸ்டாலினுக்குப் பின்னர் வந்த தலைமையும் இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபட முடியவில்லை. ஒரு முறை அன்றைய சோவியத் பெருந்தலைவராக இருந்த பிரஷ்னேவ், அமெரிக்காவை இன்னும் சில மாதங்களில் சோவியத்



யூனியன் தாக்கி அழிக்கும் என்று கூட வன்மம் உரைத்ததுண்டு. அது போலவே அமெரிக்க முன்னாள் அதிபர் ரேகன் ஒருமுறை, 'இன்னும் சில மணி நேரங்களில், நமது ஏவுகணைகள் மாஸ்கோ நகரைத் தாக்கும்' என்று விபரீதமாக விளையாட்டு மொழி பேசியதுண்டு.

அதர்மம் பெருகும் பொழுது நான் அவதரிப்பேன் என்ற கீதையின் வாக்குக்கு ஏற்ப ஓர் உலக யுத்தத்துக்கான அதர்ம நடவடிக்கைகள் அனைத்தும் பெருகி நின்ற வேளையில் மிகையில் கோர்பசேவ் என்ற ஒரு திருநாமமும் அதோடு பிரிக்க முடியாதபடி இணைந்ததாக 'பெரிஸ்த்ரோய்க்கா' 'கிளாஸ்நாஸ்ட்' என்ற ருஷ்யச் சொற்களும் உலகெங்கும் ஒலிக்கத் தொடங்கின.

பெரிஸ்த்ரோய்க்கா என்பதற்கு 'சமுதாய மறுசீரமைப்பு' என்றும் கிளாஸ்நாஸ்ட் என்பதற்கு 'ஒளிவு மறைவின்மை — அதாவது சத்திய நெறி' என்றும் பொருள் கொள்வது தகும்.

கோர்பசேவ் தலைமையில் பிரகடனம் செய்யப்பட்ட இந்தக் கொள்கையும் நெறியும் சோவியத் யூனியனுக்கும் அதனைச் சார்ந்த நாடுகளுக்கும் மட்டுமல்லாமல் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் கூட ஒரு புதிய வெளிச்சத்தை வழங்கி விட்டது!

அதன் விளைவாக உலகெங்கிலும் உள்ள சமாதான விரும்பிகளுக்கும் ஜனநாயகவாதிகளுக்கும் ஒரு புதிய நம்பிக்கை கிட்டியது.

மிகையில் கோர்பசேவ் சோவியத் நாட்டின் தலைமைப் பொறுப்பு ஏற்றதும் கோஷ்டி சேரா நாடுகளின் நடுநாயகமான பாரதம் முன்மொழிந்த 'டெல்லி பிரகடன'த்தை அங்கீகாரம் செய்து, மற்ற வல்லரசுகளில் சோவியத் யூனியனும் ஒன்று அல்ல என்பதை நிரூபித்தார்.

பகை நாடுகளோடு நகைமுகம் காட்டி, நேசக்கரத்தைக் கண்டம் விட்டுக் கண்டம் நீட்டிக் கைகுலுக்கினார் கோர்பசேவ்.

ஆயுதப் பெருக்கப் பொருளாதாரத்தால் அலைக்கழிந்து போன சோவியத் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்குத் தொலைநோக்குடன் பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார். பிற வல்லரசுகளின் யுத்த முயற்சிகளை முற்றிலும் புறக்கணித்து ஒருதலைப்பட்சமாக அணு ஆயுத சோதனைகளை நிறுத்துவது, குறைப்பது, முற்றிலும் ஒழிப்பது என்ற மூன்று கட்டத் திட்டத்தை முன்மொழிந்து செயல்படுத்தினார்.

தகழியின் கோபம்!



இதுவரை செருப்பு அணியாத, 78 வயதான தகழி, வாதநோய்ப் படுக்கையிலும் ஒரே பிடிவாதமாய், தமது புதிய நாவல் ஒன்றை எழுதிக் கொண்டு, இல்லை... இல்லை கூறிக்கொண்டு இருக்கிறார். கையால் எழுத இயலாததால் அவர் கூற அவரது டிரைவர் எழுத, இதுவரை எட்டு அத்தியாயங்கள் பூர்த்தியாகியுள்ளதாகக் கூறினார்.

"இதை செக்ஸ் என்று கூறியவன் கன்னத்தில் அறைந்தால் என்ன?" — தகழி கேட்ட கேள்வி இது. விஷயம் என்ன?

1984 — ஆம் ஆண்டுக்கான ஞானபீடப் பரிசு பெற்றது தகழி சிவசங்கரபிள்ளையின் 'கயர்' நாவல். இது டி.வி. தொடராக்கப்பட்டுள்ளது. இதைக் கண்ட டி.வி. ரெவ்யூ கமிட்டி, இதில் 'செக்ஸ்' இருப்பதால் ஒளிபரப்பாகும் நேரத்தில் முக்கியத்துவம் கொடுக்க மறுத்துள்ளது. இதைக் கேள்விப்பட்டதும்தான் 'தகழி' மேற்சொன்னவாறு கொதித்தார்.

டி.வி.க்காரர்கள் கண்டுபிடித்த "செக்ஸ்" என்னவென்று பார்ப்போமா?

கயர் நாவலில் கல்யாணியம்மா என்ற கதாபாத்திரம் கல்யாணத்திற்கு முன்பே கர்ப்பமடைகிறாள். கர்ப்பிணியான கல்யாணியம்மாவைத் தாய் மாமன் கம்பால் தாக்க வந்த போது, மரண பீதியில் செய்வதறியாமல் தான் கட்டியிருந்த 'முண்டு'வை அவிழ்த்து விட்டு ஓடிப் பிழைக்கிறாள். இதுதான் விஷயம்.

சிவசங்கரபிள்ளை தற்சமயம் கடுமையான வாத நோய் காரணமாகப் படுக்கையில் இருக்கிறார்.


— போடி சிவாஜி.

படம்: சிவராம் பைஜூர்.

பங்கு மார்க்கெட்டில்

நஷ்ட நிலை ஏற்படாமல்

இலாபம் பெறுவது எப்படி



குறைந்த இடர்நிலையில் மூலதன மதிப்புயர்வினை அடைய வேண்டும். இந்த ஜ்யோதி அளிக்கும் பாதுகாப்பு மற்றும் உறுதியினை நாடுங்கள். ஒரு ஒப்பற்ற வளரும் மற்றும் உறுதியான வருவாயினை அளிக்கும் திட்டம். கூடுதலாக போனஸ் கூட.

திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- இந்தியன் பாங்க் மியூச்சுவல் ஃபண்டின் மற்றொரு வெற்றி பெறும் திட்டம் இந்த ஜ்யோதி. இந்த ரத்ன மற்றும் சுவர்ண புஷ்பா என்ற இரு திட்டங்களை உங்களுக்கு வழங்கியவர்களிடமிருந்து.
- பாதுகாப்பை முற்றிலும் பெற்றது. அதிகப்படியான வருவாயினை உறுதி செய்கிறது. முதலாம் ஆண்டில் 12.75%லிருந்து 7வது வருடத்தில் 15.25% ஆக அதிகரிக்கிறது.
- கூடுதலாக போனஸ்.
- பங்கீடு அளிக்கப்படுவது உறுதி.
- ஒரு வருடம் கழித்து பம்பாய் மற்றும் இதர ஸ்டாக் எக்ஸ்சேன்ஜுகளில் அட்டவணைப்படல் வசதி.
- 15 நவம்பர் 1990க்கு முன்பு முதலீடு செய்பவர்களுக்கு தனிச்சலுகை.

இந்தியன் பாங்கின் எல்லா கிளைகளிலும் விண்ணப்ப படிவங்கள் கிடைக்கின்றன மற்றும் ஏற்கப்படுகின்றன.

இந்தியன் பாங்க்
பரஸ்பர நிதி
உங்கள் செல்வச் செழிப்பின் சிற்பி

IND JYOTHI
7 வருட வளரும் வருமான நிதி
இந்த் ஜ்யோதி
உங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்கும்

வழங்கீடு துவங்கிவிட்டது



டிரைவர்: அடுத்த பஸ் எத்தனை மணிக்குன்னு கேட்டுட்டு எதுக்கு இதுல ஏறினீங்க?

பயணி: இல்லே... இது பிரேக் டவுன் ஆனா எத்தனை நேரம் காத்திருக்கணும்னு தெரிஞ்சுக்கத்தான்!

— ஆர். ரத்தினசாமி.

உலகெங்கிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோவியத் ஏவுகணைகளை படிப்படியாகத் தொடங்கி, முற்றிலுமாக அகற்றிய முழுப் பெருமை கோர்பசேவையே சாரும். இந்தச் செயல் உலகப் பொருளாதாரத்திலேயே ஒரு வரவேற்கத்தக்க மாற்றத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. வல்லரசுகள் ஆயுதப் பெருக்கத்துக்காகக் கொட்டி அழிக்கும் கோடானு கோடி செல்வத்தை மீட்டு ஆப்பிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளில் வறுமையிலும் நோயிலும் அழிகிற கோடானு கோடி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற திட்டத்தை உச்ச மகாநாட்டுப் பேச்சிலே முன்மொழிந்தவர் கோர்பசேவ்.

கம்யூனிஸம் ஒரு சர்வாதிகாரம் என்று விளங்கிய கறையைத் தன் திருக்கரத்தால் துடைத்த மிகச் சிறந்த கம்யூனிஸ்ட் என்று தம்மை நிரூபித்துக் கொண்ட முதல்வர் இவரே. இவர் காலத்தில் கம்யூனிஸ வரலாற்றில் இதுவரை படிந்த மாயைகளெல்லாம் தெளிந்து, 'மனிதநேய கம்யூனிஸம்' மலரும் என்பது திண்ணம்.

சோவியத் சமுதாயத்திலும் சோஷலிஸ நாடுகளிலும் புதிய ஜனநாயகத்தை மலரச் செய்த கதிரவன் மிகையில் கோர்பசேவ். நாற்பத்தைந்து ஆண்டுகளாக ஜெர்மனியைப் பிரித்து வைத்திருந்த கொடுமை இடிபட்ட சுவராகவே தகர்ந்து வீழ்ந்தது இவர் காலத்தில்தான்!

புத்தர், அசோகர், மகாத்மா காந்தி போன்ற இந்திய மகான்கள் வகுத்த அன்பு நெறியில் வையம் தழைக்கப் பாடுபடும் அருள் நயந்த சன்மார்க்கர் ஒருவரை உலகுக்குக் கம்யூனிஸ இயக்கமே வழங்கி இருக்கிறது என்று காண்பதில் இந்தியர்களாகிய நமக்கு இமாலயப் பெருமிதம் ஏற்படுகிறது.

மிகையில் கோர்பசேவுக்குக் கிடைத்த விருது, இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் சகல ஜீவராசிகளின் ஆத்மபூர்வமான பாராட்டாகும். சத்திய சோதனைக்குக் கிடைத்த விருது என்று இதனைச் சரித்திரம் பாராட்டும்.

சாந்தியும் சத்தியமும் நிலவும் ஒரு புதிய உலகத்தைப் பற்றிய மாபெரும் நம்பிக்கையின் அடையாளமே கோர்பசேவுக்குத் தரப்பட்ட நோபெல் சமாதானப் பரிசு ஆகும்.

'எல்லோரும் அமரநிலை எய்தும் நன்மார்க்கத்தை இந்தியா உலகுக்கு அளிக்கும்' எனும் லோகக்ஷேமத்தையே தனது லட்சியமாகக் கருதும் பாரதம் சோவியத் யூனியனின் முதல் நண்பன் என்கிற முறையில் மிகையில் கோர்பசேவுக்குக் கிடைத்த இந்த விருதுக்காகப் பெருமிதம் கொள்கிறது.



தள்ளுபடி வியாபாரம் லாபமின்றி நடக்காது!

''அண்ட சராசரத்திலும், அகில லோகத்திலும் இல்லாத விலை குறைப்பு!''

என்று பெரிய பேனர் வரவேற்றது ஒரு பாண்டி பஜார் கடையில். அதன் பக்கத்திலே இன்னும் சில அறிவிப்புகள்:

''தகர்க்கப்பட்ட விலையில் விற்பனை; தவற விடாதீர்கள்!''

''தீபாவளிச் சிறப்புத் தள்ளுபடி 50%''

உண்மை என்ன?

''குறைந்த விலையும், அதிக வியாபாரமும் ஒன்றோடொன்று நேரிடையாய்த் தொடர்பு கொண்டவை. விலைகுறைந்தால் நல்ல பிசினஸ் நடக்கும். நிறைய பிசினஸ் என்றால், விலையைக் குறைத்து நிர்ணயிக்க முடியும்'' என்று வியாபார அடிப்படையை விவரித்த ஒரு கடைக்காரர் தொடர்ந்து சொன்னார்: ''எந்த சீசனிலும் ஐந்து அல்லது அதிகமாய்ப் போனால் பத்து சதவிதம் தள்ளுபடி தர முடியும். இதற்கும் அதிகமாய்த் தள்ளுபடி தரப்படுகிறது என்றால், விலையைத் தாற்காலிகமாய் உயர்த்தி, அதிலிருந்து நிறையத் தள்ளுபடி அளிக்கிறார்கள் என்பதுதான் உண்மை!''

கோ-ஆப்டெக்ஸ் போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் அளிக்கும் விழாக் காலத் தள்ளுபடிகள் நிஜமாகவே விலைக் குறைப்புத்தான். அவர்களுக்கு மட்டும் இது எப்படி சாத்தியம் என்கிறீர்களா? கோ-ஆப்டெக்ஸ், காதி கிராப்ட் போன்றவை தரும் தள்ளுபடியால் அவற்றுக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் ஈடு செய்து விடும்.

இதே போல் சில பெரிய உற்பத்தி நிறுவனங்கள், மொத்த, சில்லறை வியாபாரிகளுக்கு சீசன் சமயத்தில் விலை குறைத்துக் கொடுப்பதும் உண்டு. அதைக் கடைக்காரர்கள் தள்ளுபடி என்ற பெயரில் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கச் செய்வார்கள். இதுவும் 'சீசன் டயத்தில், அதிக விற்பனை; அதனால் விலைக் குறைப்பு சாத்தியம்' என்ற அடிப்படையில் இயங்குவதுதான்.


இதற்கு நேர் மாறாக, 'ஆஃப் சீசன் தள்ளுபடி'யும் உண்டு! சீசன் அல்லாத காலத்தில் அளவோடு வழங்கப்படும் இந்தத் தள்ளுபடி, ஓரளவுக்கு உண்மையான தள்ளுபடிதான். இது மந்தமான சீசனில் வியாபார அபிவிருத்தி நோக்கத்தில் தரப்படுவது. சீசன் டயத்தில் இந்த நஷ்டம் ஈடுகட்டப்படும். ஜவுளியில் மட்டுமின்றி வேறு பல விஷயங்களுக்கும் தள்ளுபடி ஜுரம் பரவி விட்டது. இன்று, ஜனவரி முதல் தேதி தள்ளுபடி வியாபாரம் என்பது சமீபகாலத்தில் பிரசித்தி பெற்று வருகிறது. ''உற்பத்தியாளர்களிடம், ஜனவரி முதல் தேதி விற்பனைக்காகப் பிரத்தியேக டிஸ்கவுண்ட் வாங்கி அதை வாடிக்கையாளர்களுக்கு அளிக்கிறோம்; அப்போது, லாபத்தின் அளவையும் சிறிது குறைத்துக் கொள்வோம். வியாபாரத்தின் அளவு பலமடங்கு இருக்கும் என்பதால் ஒன்றுக்கொன்று சரிக்கட்டிக் கொண்டு போகும். மொத்தத்தில் நிறுவனத்தின் வருடாந்திர லாபம் குறையாது'' என்றார் ஒரு நிர்வாகி.

இவை தவிர, ஏகப்பட்ட சலுகை விலையில் ரெடிமேட் துணிமணி வியாபாரம் திடீர் திடீரென்று பரபரப்பான விளம்பரத்தோடு நடக்கும். இவை, இரண்டு நாள், நாலு நாள் தோன்றி மறையும் சந்தைக் கடைகள்; இவை விற்பனை செய்பவை பெரும்பாலும் 'ஸெகண்ட்ஸ்' சரக்குகள். அதாவது, தையலில் தவறுகள் ஏற்பட்டு விட்டால் அந்த ஆடை நிராகரிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள் இவற்றை 'ஸெகண்ட்ஸ்' சரக்கு என்று அடிமட்ட விலைக்கு விற்று விடுவார்கள். இவற்றை வாங்கி வரும் வியாபாரிகள் 'இந்த சந்தர்ப்பம் போனால் வராது' என்பது போல் விளம்பரம் செய்து, மக்களுக்குத் தாற்காலிகக் கடைகள் நிறுவி விற்பார்கள்.

ஆக மொத்தம், 'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது போல, 'தள்ளுபடி வியாபாரம் லாபமின்றி நடக்காது!'

— மௌஷ்மி.

யோசனை தெரிவித்த வாசகர்: திருமதி எஸ். ஜெயந்தி, 17, சோமு செட்டித் தெரு, 5-வது சந்து, இராயபுரம், சென்னை — 13


இப்புற விழு!
அத்வானி
வி.பி.சிங்
ஆதரவு வாபஸ்
— செய்தி
ஹையா! தேர்தல் வந்துகிட்டே இருக்கு...
ராஜீவ்
வோட்டின் சிதறலால் ஆதாயம்
அய்யய்யோ! தேர்தல் வந்துரும் போலிருக்கே!
கருணாநிதி
ராஜீவ்
சந்திரசேகர்
தேவிலால்
பிரதமர் பதவி
ஜெயலலிதா
வாழப்பாடி
முதல்வர் பதவி



கல்கி

1990 நவம்பர் 4
மலர் : 49 இதழ் : 14
பிரமோதூத ஐப்பசி 18



ராஜீவ் காட்டிலே மழை!

நந்தவனத்தில் ஓர் ஆண்டி — அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி — அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!

நமது அரசியல் பெருந்தலைவர்களை எண்ணினால் மேற்படி பாடல்தான் நினைவுக்கு வருகிறது. தேசிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் நாட்டுக்கு நல்ல காலம் பிறந்து விட்டதாக நினைத்து மகிழ்ந்தோம். பிரதமரும் நமது எதிர்பார்ப்புக்கு ஏற்பத்தான் சிறப்பாகப் பணி புரிந்து வந்தார். போஃபோர்ஸ் ஊழல் ஆய்வைத் துரிதப்படுத்தியது, மக்களின் நல்லெண்ணத்தைப் பெறப் பஞ்சாபுக்கு விஜயம் செய்தது போன்ற பல அம்சங்கள் நம்பிக்கையைத் தோற்றுவித்தன. தமக்கு ஆதரவு அளித்து வந்த கட்சிகளான பி.ஜே.பி., கம்யூனிஸ்டுகள் ஆகியோரின் கருத்துக்களை அறிந்து செயல்படுகிறவராக விளங்கினார் வி. பி. சிங். இது ஆட்சி நிலைக்க உதவியது மட்டுமல்ல, நிதானப் போக்குடன் சீரிய சிந்தனைகள் செயலுருவம் பெறவும் வழிவகுத்தன. ஆனால் எல்லாமே அற்ப சந்தோஷமாக முடிந்து போயின. சீர்குலைவை ஆரம்பித்து வைத்தார் தேவிலால். எத்தனைச் செத்தனை பெருந்தன்மையுடன் தாம் ஒதுங்கிக் கொண்டு வி. பி. சிங்கைப் பதவியில் அமர்த்தினாரோ, அத்தனைக்கத்தனை அற்பபுத்தியுடன் நடந்து கொண்டு தொல்லை கொடுக்க ஆரம்பித்தார். ஹரியானா மாநில அரசியலில் தமது மகன்களை நல்வழிப்படுத்துவதற்குப் பதில், மத்திய அமைச்சரவையில் சகமந்திரிகள் மீது சேறு பூசிக் குரூரத் திருப்தி அடைந்தார். மந்திரிசபையிலிருந்து அவரை விலக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைப் பிரதமருக்கு உண்டாக்கினார். இதன் பின்னணியில் சந்திரசேகரின் திருவிளையாடல் என்றால், உறங்கிக் கிடந்த மண்டல் அறிக்கையை நன்கு யோசியாமல் அவசரப்பட்டுப் பிரதமர் அமுல் படுத்த ஆரம்பித்ததன் பின்னணியில் கருணாநிதியின் கைங்கர்யம். வட இந்தியா முழுவதும் கிளர்ச்சிகள் சீறிப் பரவ, பிரதமர் பரிதாபத்துக்குரியவரானார்.

போதாக்குறைக்கு பி. ஜே. பி. யின் மதச் சார்பும் அதில் தீவிரவாதப் போக்கும். அதன் செயல் வடிவமான ரதயாத்திரையைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட, அத்வானி கைதாக, பி. ஜே. பி., மத்திய அரசுக்குத் தான் அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டது. பிரதமரின் பேச்சை டி. வி. அல்லது ரேடியோவில் கேட்ட எவரும் மனம் நெகிழ்ந்திருப்பார்கள். அதிலே உருக்கமும், சத்தியமும், யதார்த்த நோக்கும் எதிரொலித்தன. ஆனால் பி. ஜே. பி. தலைவர்கள், ஒரு காதில் மதச் சார்பையும், மற்றொரு காதில் தீவிரவாதப் போக்கையும் பஞ்சாக அடைத்துக் கொண்டிருக்கும் போது நியாயத்துக்குச் செவிமடுக்கவா போகிறார்கள்?

பி. ஜே. பி. தன் ஆதரவை வாபஸ் பெற்றுவிட்டாலும் தே. மு. அரசுக்கு மெஜாரிட்டி இருப்பதாகக் கூறுகிறார் வி. பி. சிங். ஜனாதிபதி அவரை நாடாளுமன்றத்தைச் சந்தித்து, மெஜாரிட்டியை நிரூபிக்குமாறு கோருவார் என்றே நம்பலாம். ஆரம்பத்தில் கிடைக்கக் கூடிய அனுதாபம் காரணமாக மெஜாரிட்டியை நிரூபிக்க முடிந்தாலும் பிரதமர் அதிக காலம் தாக்குப் பிடிக்க இயலாது. ஆட்சி கவிழ்ந்தால், அடுத்து, அதிகபட்ச உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற முறையில் ராஜீவுக்கு அமைச்சரவை அமைக்க ஒரு வாய்ப்பு தரப்படலாம். அதை அவர் ஏற்க மறுத்து, தேர்தலுக்கு வழிவகுப்பார் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஓராண்டு கூட முழுசாக ஆகவில்லை; அதற்குள் மறுதேர்தல் வரக்கூடும் என்ற நிலை தோன்றிவிட்டது. நமது அரசியல் தலைவர்களின் பொறுப்பற்ற தன்மை, அப்பாவி மக்களுக்குப் பெரும் சுமை. மறுதேர்தலுக்கு ஆகும் வீண் செலவுகளை மக்கள்தான் தாங்க வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, எவ்வளவு மனக்கஷ்டம்? தேவையற்ற, ஒன்றுமில்லாத விஷயங்களுக்காக நடக்கும் சண்டமாருதப் பூசல்களால் நாட்டின் முன்னேற்றம் தடைப்பட, அதனால் மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு போன்ற பல துன்பங்கள் அதிகரிக்கின்றன.

ராஜீவ் மனசுக்குள் மகிழ்ந்து கொண்டிருப்பார். வோட்டுக்கள் மீண்டும் பிரிய, மைனாரிட்டி வோட்டில் நாடாளுமன்றத்தில் மெஜாரிட்டி பலம் பெறும் வாய்ப்பு காங்கிரஸுக்கு மீண்டும் நெருங்குகிறது அல்லவா?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

ஏசுவுக்கே என் சொத்து!

●● சின்சினாட்டி மருத்துவ நூல் நிலையத்தின் நூலகர், அந்தப் புத்தகத்தைத் திருப்பித் தர வந்தவரை ஒரு மாதிரியாய்ப் பார்த்தார். காரணம், புத்தகத்தைத் திருப்பித் தர வேண்டிய தேதி, 1823ம் ஆண்டில் ஒரு நாள். வாங்கிக் கொண்டு போனவரின் கொள்ளுப் பேரன், பத்திரமாய் திருப்பிக் கொண்டு வந்திருந்தான். கணக்குப் பார்த்த போது 2646 டாலர் அபராதத் தொகை கட்ட வேண்டியிருந்தது. கொள்ளுப் பேரனின் பொறுப்புணர்வைப் பாராட்டும் விதமாக அபராதத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது.



●● டோனி ஸ்டெல்லாடோ, தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்த போது, எதிரே பதற்றத்துடன் ஒரு பெண்மணி ஓடி வந்தாள். சற்றுத் தூரத்தில், புகை சூழ்ந்திருந்த கட்டடம் ஒன்றைக் காட்டி, ''அந்தக் கட்டடத்தின் மூன்றாம் மாடியில், நெருப்பில் என் குழந்தை சிக்கிக் கொண்டு விட்டது. தயவு செய்து அதைக் காப்பாற்றுங்கள்'' என்று கெஞ்சினாள். பரிதாபப்பட்ட டோனி, ஓடிப் போய்க் கட்டடத்தில் ஏறி, நெருப்பைப் பொருட்படுத்தாது, தேடிப் பார்த்தான். குழந்தை கண்ணில் படவில்லை. திரும்ப இறங்கி வந்த சமயத்தில் தீயில் அகப்பட்டுக் கொண்டு, பலமான காயங்கள். மயக்கமடைந்து விழுந்த டோனியைக் காப்பாற்றி, ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். ஒரு வாரம் கழித்து, டாக்டர், ''ஒரு பூனைக்காகவா இத்தனை ரிஸ்க் எடுத்துக் கொண்டீர்கள்?'' என்று கேட்ட போதுதான் டோனிக்குத் தெரிய வந்தது. அந்தப் பெண்மணி 'குழந்தை' என்று குறிப்பிட்டது



அவளுடைய் பூனையான ''பேபி''யை என்று!

●● வில்லியம் கர்சன் என்பவர் ஒரு பந்தயக் குதிரை ஜாக்கி. ஒரு நாள் மற்றக் குதிரைகள் பின்னால் ஓடி வர, கர்சன் முதலில் போய்க் கொண்டிருந்த போது, சற்றே தலையைத் திருப்ப ஒரு குதிரை தமக்கு வெகு சமீபத்தில் வந்து கொண்டிருப்பதைத் தரையில் விழுந்த நிழலை வைத்துக் கண்டு பிடித்து விட்டார்! அவ்வளவுதான்! குதிரையை முடுக்கி விட, அது மேலும் வேகமாகப் பாய்ந்தோடியது. நிறைய இடைவெளியில் பெரும் வெற்றி பெற்றது கர்சன் தான். அப்புறம்தான் தெரிந்தது, கர்சன் குதிரையின் வேகத்தை அதிகரிக்கும் முன்பு அவர் பார்த்த நிழல், தன்னுடையதும், தாம் ஓட்டிய குதிரையுடையதும்தான் என்று!





●● இதாலியைச் சேர்ந்த கார்லோ காம்பா, 1913ல் வேலை தேடி அமெரிக்காவுக்கு வந்தான். சான் பிரான்ஸிஸ்கோ ரயில்வே ஸ்டேஷனில் ஷூ பாலீஷ் போடுகிற வேலை செய்தான். கடுமையாய் உழைத்தான். சிகரெட், மது, மங்கை என்று எந்தப் பழக்கமும் கிடையாது. இயன்ற மட்டில் சேமித்து அதைப் புத்திசாலித்தனமான முறைகளில் முதலீடு செய்து, பணத்தைப் பலமடங்காய்ப் பெருக்கினான். இதற்கிடையில் இதாலியில் அவனுடைய சகோதரன், குடும்பப் பொதுச் சொத்தான வீட்டை விற்று விட்ட விஷயம் தெரிய வந்தது. ஆனால் கார்லோவுக்குச் சேர வேண்டிய பங்கைச் சகோதரன் அனுப்பி வைக்கவில்லை. 1982ல் கார்லோ மரணமடைவதற்கு முன் ஐந்து லட்சம் டாலர் சம்பாதித்திருந்தான். உயில் எப்படி எழுதினான் தெரியுமா? ''என் சொத்தில் ஐந்து டாலர் தவிர மற்றதையெல்லாம் எனது சொந்த ஊரில் சர்ச் ஒன்று கட்டுவதற்கு நன்கொடையாய் அளிக்கிறேன். ஐந்து டாலரை என் சகோதரனுக்கு அளிக்கிறேன். மது வாங்கிக் குடித்துக் கொள்ளட்டும்!''



●● 1910ம் ஆண்டு போலந்தை ஆண்ட மன்னனின் இளவரசி ராட்ஸேவில் தன் ரதத்தில் ஒரு சிங்கத்தையும், ஒரு சிறுத்தையையும் கட்டி இழுக்க வைத்தாள்!

●● 1979ல் இறந்து போன பிரிட்டிஷ்காரர் ஒருவர், தமது இரண்டரை லட்சம் டாலர் சொத்து யாருக்குப் போய்ச் சேர வேண்டுமென்று உயில் எழுதி வைத்தார், தெரியுமா? ஏசு கிறிஸ்து! அவருக்குச் சொத்து போய்ச் சேர ஒரு கண்டிஷனும் போட்டார்: '2000 ஆண்டுக்குள் ஏசு இவ்வுலகில் மறுபடி பிறக்க வேண்டும்!'

●● லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தின் இசைத் தட்டு நிறுவனம் ஒன்று, ''தி பெஸ்ட் ஆஃப் மார்செல் மார்சியூ'' என்று ஒரு இசைத் தட்டை வெளியிட்டது. ஒவ்வொரு பக்கமும் இருபது நிமிடம் அவருடைய நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்து ரசிகர்களின் கைத் தட்டலும் அதிலே இடம்பெற்றிருந்தன. இதிலே ஆச்சரியம் என்ன தெரியுமா? மார்செல் மார்சியூ ஒரு mime (மைம்) கலைஞர். தமது நிகழ்ச்சியின் போது ஒரு வார்த்தை கூட வாய் திறந்து பேச மாட்டார்!



●● சாமுவேல் ஜான்சன் என்ற இலக்கியவாதிக்கு, முன்பின் அறிமுகமில்லாத ஓர் எழுத்தாளர், தாம் எழுதியவற்றின் கையெழுத்துப் பிரதியொன்றை அனுப்பி வைத்து, அவருடைய கருத்தையும் கேட்டிருந்தார். ஜான்ஸன் எழுதிய பதில்: ''உங்கள் கையெழுத்துப் பிரதி சுவையாகவும், ஒரிஜினலாகவும் இருக்கிறது. சுவையாய் இருப்பவை ஒரிஜினல் அல்ல; ஒரிஜினல் பகுதி சுவையாய் இல்லை.''

'இப்படியெல்லாம் கூட நடக்குமா?' என்று ஆச்சரியப்படத் தக்க வகையில் நடந்த சம்பவங்களைத் தொகுத்து, ''It can't be true'' என்ற தலைப்பில் ஒரு சுவாரஸ்யமான புத்தகம். அதிலிருந்து சில வற்றைத் தேர்ந்தெடுத்தவர்:

— எஸ். சந்திரமௌளி



* கோபுரக் கலசங்களுடன் வெளிப்புறத் தோற்றம்.

இன்று ஓர் ஆலவிருட்சமாக வேர் பிடிக்கத் தொடங்கியிருக்கிறது.

தினசரி பல் மருத்துவம், கண் மருத்துவம் உள்ளிட்ட பல துறைகளிலும் மருத்துவ உதவி வழங்குகிற அமைப்பாக உருக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு துறையிலும் குறிப்பிட்ட நாட்களில் வல்லுநர்கள் வருகிறார்கள். பத்து ரூபாய்க் கட்டணத்தில் ஒரு மாதம் முழுவதும் இந்த வல்லுனர்களின் ஆலோசனையைப் பெறலாம்.

ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்திப் பதிவு செய்து கொண்டால் ஆண்டு முழுவதும் இங்கு மருத்துவ உதவி பெறலாம். தினமும் பராமரிப்புச் செலவுக்கு என்று, வருகிற நோயாளிகளிடம் இரண்டு ரூபாய் மட்டும் பெற்றுக் கொள்கிறார்கள். மருந்து மாத்திரைகள், ஊசி, எக்ஸ்ரே போன்றவற்

வருந்த இடம் தராத மருத்துவமனை!

பொதுவாக, மருத்துவமனைகளின் நிலை கண்டு நாம் வருந்தவே வேண்டியிருக்கிறது. ஏழைகளுக்கு உதவ வேண்டிய அரசு ஆஸ்பத்திரிகளில் ஒரே ஊழல்; அசுத்தம்; நோயாளிகள் படும் அவதி சொல்லத் தரமன்று. வசதியான தனியார் மருத்துவமனைகளோ எக்கச்சக்கமாகப் பணம் வாங்குவதால் ஏழைகள் என்ன, மத்தியதர வகுப்பினருக்குக் கூட எட்டாத நிலையில் உள்ளன. இந்த இரு துருவங்களுக்கு இடையில் ஏழைகளுக்கும் உதவி, சுத்தமாகவும் பராமரிக்கப்பட்டு, நோயாளிகளையும் நன்கு கவனிக்கிற மருத்துவமனை ஒன்று உள்ளது என்றால் நம்புவதே கஷ்டம்தான்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் 'பத்துப் பைசா ஆஸ்பத்திரி' என்று அழைக்கப்படும் விதமாகத் தாம்பரத்தில் மிக எளிய முறையில் உருவான ''ஹிந்து மிஷன் ஆஸ்பத்திரி

* விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு இலவச சிகிச்சை.





* மருத்துவ தேவதை தன்வந்திரியின் உருவம்

* கிராமப்புற மருத்துவப் பணியில் ஹிந்து மிஷன்.



றுக்கு அடக்கச் செலவு அளவிலான தொகையையே பெற்றுக் கொள்கிறார்கள்.

இதுவும் தவிர, 'இவர் மிகவும் ஏழை, ஆதரவற்றவர்' என்று குறிப்பிட்ட டாக்டர் திருப்தியுற்றால் போதும், இலவச மருத்துவ உதவி கிடைக்கிறது. இவ்விதமாகப் பத்து சதவீதம் பேர் பயனடைகிறார்கள்.

வழக்கமான மருத்துவமனைகளிலிருந்து இந்த ஆஸ்பத்திரியை வேறுபடுத்துவது வெளிப்புறகோபுரக் கலசத் தோற்றம் மட்டு மல்ல; சுத்தமாகப் பராமரிக்கப்படுவதும் தான்.

நுழை வாயிலில் காக்கும் கடவுள் விநாயகப் பெருமானின் திருவுருவை வண்ண மலர் அலங்காரத்தோடு மரத்தடியில் பார்க்கும் போதே நமக்கு இனம்புரியாத நம்பிக்கை பிறந்து விடுகிறது. வாசல் தெளித்துக் கோல மிட்டு மங்கலப்படுத்துகிறார்கள். காலையில் மூன்று மணி நேரமும் மாலையில் மூன்று மணி நேரமும் மெலிதான இசையை ஒலி பரப்பிச் சூழ்நிலையை இனிமையாக்குகிறார் கள். சுவரோவியங்களில் மருத்துவ தேவதை கள் அழகூட்டுகிறார்கள்.

காஞ்சிப் பெரியவர் ஜெயேந்திர ஸ்வாமிகள் ஏற்பாட்டில் உருவான "ஆரோக்கியசேவா நிதி" ஒரு நிரந்தரமான உதவித் தொகையை அளிக்கிறது. இதுவரை தொண்ணூறு நன்கொடையாளர்கள், இரண்டாயிரம் ரூபாய் வீதம் வைப்புத் தொகை வழங்கியிருக்கிறார்கள்.

கிரைஸ்ட் கிங் கான்வென்டின் சிஸ்டர் ஜெர்மேன் என்பவர் இங்கு ஒரு காடராக்ட் சர்ஜரி செய்து கொண்டார். அதன் நினைவாக இந்த நிதிக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார். இப்படியே மதச் சுவர் களைக் கடந்து, பொதுவான சமுதாய நல அமைப்பு என்கிற நோக்கில் பலரும் உதவ முன்வருகிறார்கள் என்பது ஓர் ஆரோக்கிய மான செய்தி.

வசதி படைத்த வேறு சிலர் இதன் நற் பணிகளை அறிந்து இருபதாயிரம், நாற்பதா யிரம் என்றெல்லாமும் நன்கொடைகள் கொடுத்திருக்கிறார்கள்.

இப்போது இருபது படுக்கைகளும், இரண்டு ஆபரேஷன் தியேட்டர்களும், ஓர் ஆம்புலன்ஸ் வண்டியும் உள்ளன.

நூறு படுக்கைகள் கொண்ட 'முதல்' தர மருத்துவமனையாக இதை உயர்த்தும் குறிக் கோளில் ஹிந்து மிஷன் மருத்துவமனை படிப்படியாக முன்னேறுகிறது.

தேசியத் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், இந்த மருத்துவமனை, 2.3 லட்சம் மக்கட் தொகைக்குப் பயன்படும் வகையில் நூறு கிராமங்களைக் கவனித்து

கல்கி தீபாவளி மலர் — 1990
தீப ஒளியில் வந்த ஆன்மிக ஒளி!

* தீப ஒளி வீசிய நாளில் ஆன்மிக ஒளியுடன் வந்த கல்கி தீபாவளி மலரைப் பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்திருக்கிறோம்!

திருச்சிராப்பள்ளி. பாக்யமுத்து.

* இந்த வருடத் தீபாவளியில் அதிகமான மகிழ்ச்சியைத் தந்தது கல்கி தீபாவளி மலர்தான். இப்படி ஒரு பயனுள்ள மலரைக் கல்கிதான் வெளியிடவும் முடியும்!

திருவனந்தபுரம். எஸ். எஸ். மணி.

* பக்தி பூர்வமாகத் தயாரிக்கப்பட்டிருந்த தீபாவளி மலரின் ஒவ்வொரு பக்கமும் மனத்திற்கு மகிழ்ச்சியை அளித்தது. காஞ்சிப் பெரியவர்களு டைய அதி அற்புதமான வண்ணப்படங்களும், ஆறுபடை வீடுகள் பற்றிய கட்டுரையும், படங் களும் எண்ணத்தில் நிலைத்து நின்று விட்டன.

அரூர். மு. மதிவாணன்.

* மூன்று பெரியவர்களின் படங்கள் மற்றும் திருநிலை நாயகி அம்மனின் வண்ணப் படங் களுமே கொடுத்த ரூபாய்க்குச் சரியாகி விட்டது!

மேலப்பாளையூர். க. மாலி.

* தீபாவளி மலர் ஒவ்வோர் ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் சிறப்பாக உள்ளது. ஒரே மூச்சில் படித்து முடித்தேன்.

சென்னை — 15, கவிஞர். நெல்லை. ஆ. கணபதி.

* கல்கி தீபாவளி மலர் எப்போதுமே பிரமிக்க வைக்கும் மலர்தான். கதைகளும் கட்டுரைகளும் ஒன்றோடொன்று போட்டியிட, எல்லாவற்றையும் வண்ணப்படங்கள் தூக்கி அடிக்கின்றன! ஒவ்வொரு தீபாவளி மலரும் சென்ற மலரை விடத் தரத்தில் உயர்ந்ததாக அமைய வேண்டும் என்ற கல்கி ஆசிரியர் குழுவின் ஆர்வத்தையும் உழைப்பையும் ஒவ்வோர் ஆண்டும் உணர முடிகிறது.

வடுகவிருட்சியூர். ஆர். அமுதா.

* பெண்களுக்குப் பட்டுச் சேலைகள், சிறுவர் களுக்குப் பட்டாசுகள், மாப்பிள்ளைகளுக்கு மாமனார் வீட்டுப் பரிசுகள், குடும்பத்தினருக்குப் பலகாரங்கள் — எப்படி மகிழ்ச்சியைத் தருமோ, அப்படி ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் ஆனந்தத்தை அளித்தது கல்கி தீபாவளி மலர் தான்.

பாண்டிச்சேரி, எஸ். சதாசிவம்.

* தீபாவளி மலர் கண்டேன். பரவசமடைந் தேன். அருமையான கட்டுரைகள்; அற்புதமான கதைகள்; அழகழகான வண்ணப் படங்கள்; எதைச் சொல்லி எதை விடுவது? பாரம்பரியச் சிறப்பை உணர்த்தும் வண்ணம் மலர் அமைந்திருப் பது பாராட்டுக்குரியது. 'பக்கத்துக்குப் பக்கம் சிறப்பு, வரிக்கு வரி ரசனை' என்ற தங்களது விளம்பர வரிகளின் உண்மையைப் படிக்கும் போது கண்கூடாகவே கண்டேன்.

மங்கைநல்லூர், ஆர். செல்வராணி.



"'படபட'ன்னு வருது, டாக்டர்!"

"அதுக்காக, நான் 'ஃபீஸ்' எவ்வள வு'ன்னு சொல்லாமே, இருக்க முடியுமா, சொல்லுங்க?"

— ஆர். அப்துல் சலாம்.

[redacted]

வருகிறது. தாம்பரம் சுற்றுவட்டாரத்தில் 5,700 நோயாளிகளைக் கண்டறிந்து இவர்களில் 3100 பேருக்குப் பூரண குணம் அளித்துக் கொடுக்கப்பட்டு வந்த மருந்து களையும் நிறுத்தியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒரு சாதனை. இந்தத் துறை யில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர் டாக்டர் வி. எஸ். கங்காதர் சர்மா.

தொழுநோய்க் குறியுள்ளவர்களை மற்ற நோயாளிகளிடமிருந்து பிரித்துத் தனிமைப் படுத்துவதில்லை. 'தொழுநோய் தொற்று நோய் அல்ல' என்பதை உறுதி செய்யும் வகையில் மற்றவர்களோடு சேர்த்தே இவர் களும் கவனிக்கப்படுகிறார்கள். "ஒருங் கிணைந்த மருத்துவக் கவனிப்பு" என்னும் இந்த முறை பாரதத்தில் வெகு சில மருத்துவ மனைகளிலேயே நடைமுறைப்படுத்தப்படு கிறது. அரசு மருத்துவமனைகளில் கூட இந்த வகை நோயாளிகளை ஒதுக்குப்புறமான பகுதிகளில் தனிமைப்படுத்தியே கவனிக் கிறார்கள். "ஆரம்ப நிலையில் குணப்படுத்தி விடக்கூடிய நோயாளிகள் கூட இப்படித் தனிமைப்படுத்தப்படுவதால் அவர்களின் மனநிலையே பாதிக்கப்படுகிறது" என் கிறார் டாக்டர் சர்மா. எந்தக் கட்டத்திலும் தகுந்த மருந்துகளின் மூலம் குணப்படுத்தி விடக்கூடிய நோய் இது என்பது பலரால் இன்னும் சரிவர உணரப்படவே இல்லை.

இந்த மருத்துவமனைக்கு என் னென்ன வகையில் எல்லாமோ உதவுகிறவர் களின் பட்டியல் வித்தியாசமானது. ஒரு துணிக்கடைக்காரர், கண் சிகிச்சை முடிந்த பின்னர் ஒளி படாமல் தடுக்கும் பச்சை நிறத் துணிப் பட்டையைத் தைத்து வழங்குகிறார், கண் நோயாளிகளுக்கு. அவர்கள் மருத்துவ மனையில் இருக்கும் மூன்று நாட்களுக்கும் காலைக் காப்பி வழங்குவது ஓர் அன்பரின் உபயம். பள்ளி மாணவிகளும், பணி ஓய்வு பெற்றவர்களும் ஒவ்வொரு சனி, ஞாயிற் றுக் கிழமைகளிலும் இங்கு சமூகப் பணிக்கு என்று வந்து விடுகிறார்கள். இப்படி ஓர் ஆர்வமுள்ள சமுதாயப் பணிக்கு வித்திட்டு வளர்கிறது இந்த மருத்துவமனை.

மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் ஒன்றை எழுப்ப அருகிலேயே 1.5 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார்கள். புதிய கட்டடங்களுக்காக இருபது லட்ச ரூபாய்க் குத் திட்டமிட்டு இப்போது கட்டடப் பணி யைத் தொடங்கியிருக்கிறார்கள்.

தொண்டுள்ளமும் தூய்மையான மனமும் கொடையுள்ளமும் இணைந்து இங்கே ஒரு சாதனையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது!

கட்டுரை, படங்கள்: **யெஸ்பால்**

தங்கம் பெறத் தங்கமான யோசனைகள்!

இந்தியா இவ்வளவு பெரிய நாடாக இருந்தும் விளையாட்டுத் துறையில் மிகவும் பின்தங்கியிருப்பது ஏன்? முன்னேற்றத்துக்கு என்ன யோசனைகள்? — கல்லூரி விலாசம் குறிப்பிட்டு ஒரு பக்கக் கட்டுரையை மாண வர்களே எழுதலாம். அல்லது, கருத்துக்கள் தெரிவிக்கத் தகுதியான நபர்களைப் பேட்டி கண்டும் மாணவர்கள் எழுதலாம்.

முதல் பரிசு ரூ. 50. பிரசுரமாகும் சிந்தனைச் சிதறல்களுக்கு ஆறுதல் பரிசு. அதிகபட்ச முதல் பரிசுகள் பெற்ற மாணவ ருக்குக் கல்கி பொன்விழா மேடையில் சிறப்புப் பரிசு ரூ. 2500!

முடிவு தேதி: 10.11.90

மாணவர் போட்டிக்கு யோசனை வழங்கிய கல்கி வாசகர்: இல. மணிமூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

கல்கி பொன்விழாப் பரிசுத் திட்டம் — மாணவர் போட்டி!

50

கர்நாடக இசையைச் சாதாரண மக்கள் கூட ரசிக்கிற மாதிரி, குட்டித் திரையில் வழங்க முடியும் என்று பம்பாயிலிருந்து ஓர் இளைஞர் நிரூபித்து வருகிறார்.
பெயர்: முரளி நல்லப்பா.



* டி.வி. தொடரில் ஒரு காட்சி.

சின்னத் திரையில் ஒரு சீரிய முயற்சி!

''நீங்கள் இளைஞர். இந்தித் திரையுலகிலும், நவீன விளம்பரப் படங்களிலும் ஈடுபட்டவர். உங்களுக்கு எப்படி கர்நாடக இசையில் ஆர்வம் ஏற்பட்டது?''

முரளி சொன்னார்: ''என் அப்பா, அம்மா இருவருமே இசையில் ஈடுபாடு உள்ளவர்கள். தமிழகத்திலிருந்து பம்பாய்க்கு வரும் வித்துவான்கள் பலர் எங்கள் வீட்டில் தங்குவதுண்டு. பாலமுரளி கிருஷ்ணா என் அப்பாவுக்கு நெருங்கிய, நெடு நாளைய நண்பர். 'லால்குடியும் அப்படியே. சில காலம் முன்பு வானொலியில் 'சங்கீத சரிதா' என்ற நிகழ்ச்சியைக் கேட்டேன். இந்துஸ்தானி இசையையும் அந்தக் குறிப்பிட்ட ராகத்திலிருந்து மெட்டமைக்கப்பட்ட இந்தி சினிமாப் பாட்டையும் ஒன்றன் பின் ஒன்றாக வழங்கும் நிகழ்ச்சி அது. இந்த ஐடியாவைத்தான் கர்நாடக சங்கீதத்துக்கு மாற்றி, பாலமுரளி ஒத்துழைப்போடு டி.வி.யில் 'சுவர ராக சுதா'வில் வெளிப்படுத்தினோம். அது ரசிகர்களிடம் வரவேற்பும், பாராட்டும் பெற்றதும், 'சப்த சுவரா'வில் வாத்தியங்களைப் பற்றி அறிமுகப்படுத்துகிற மாதிரி, பிரபல இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை வழங்கினோம். இதற்கும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்தது.''

''இப்போது நீங்கள் தயாரித்துள்ள சுவர பூஷணியில் தீட்சிதர், தியாகராஜர், புரந்தர தாஸர் போன்ற வாக்கேயக்காரர்களின் வாழ்க்கையை, அல்லது அவர்கள் பாடலில் இடம்பெறும் ஒரு தல புராணத்தை ஹரி கதை பாணியில் வழங்கியிருக்கிறீர்கள். கூடவே நடிக — நடிகையரைக் கொண்டு நாடகம் மாதிரியும் தயாரித்திருக்கிறீர்கள். ஏன் இந்த உத்தி?''

''ஒருமுறை, பாலகிருஷ்ண சாஸ்திரிகளின் கதா காலட்சேப நிகழ்ச்சிக்குப் போன போது, எல்லோருமே அவர் கதை சொல்லும் பாணியில் ஒன்றிப் போய் ரசித்ததைப் பார்த்தோம். அவர் சொல்லுவதைக் கேட்பவர்கள் தங்கள் மனத்துக்குள் விஷுவலைஸ் பண்ணித்தான் ரசிக்கிறார்கள் என்பது புரிந்தது. மனசுக்குள் பார்ப்பதைப் புறக் கண்களும் காணக் கொடுத்தால் சிறப்பாக இருக்குமே என்று தோன்றியது.



• முரளி நல்லப்பா

அவரையே முன் பாதியில், அவர் பாணியிலேயே கதையைச் சொல்லும்படி கேட்டுக் கொண்டோம்.''

''ஒரு சிறிய தகவல் —'' என்று குறுக்கிட்டார், தயாரிப்பாளர் கோவிந்த் நல்லப்பா:

''தியாகராஜராக பாலமுரளியே நடிப்பதாக ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால், ஒருநாள் அவரிடமிருந்து போன் வந்தது. உடனே வரச் சொல்லி, அவர் வீட்டு மாடியில் உட்கார்ந்து பேசினோம். 'திரையில் என்னைப் பார்ப்பவர்கள், தியாகராஜரை விட என் 'இமேஜைத்தான் நினைவில் வைத்துக் கொண்டு பார்ப்பார்கள். கீழே ஹாலில் உட்கார்ந்திருக்கிறாரே ஒரு பெரியவர்? அவர் ஸ்ரீவாஞ்சியம் ராமச் சந்திர பாகவதர். தியாகராஜ சுவாமிகளின் சிஷ்ய பரம்பரையிலேயே வந்தவர். அவர் நடித்தால் இன்னும் பொருத்தமாக இருக்கும்' என்றார் பாலமுரளி, தம்முடைய வாய்ப்புப் போவதைப் பற்றிக் கவலைப்படாமல்.. நாங்கள் பெரியவரைப் பார்த்தோம். வேஷப் பொருத்தம் சரியாகவே இருக்கும்... ஆனால் நாங்கள் கேட்டுக் கொண்ட போது அவர் திடுக்கிட்டார். 'எனக்கு நடிக்கவே தெரியாதே. நீங்கள் என்னைப் போய்க் கேட்கிறீர்களே?' என்றார். 'நாங்கள் சொல்லுகிறபடி மட்டும் செய்தால் போதும். அதிக சிரமம் இல்லை' என்றோம். பாலமுரளி கூடவே இருப்பதாக ஒப்புக் கொண்டார். அவர் விருப்பம் நிறைவேறியது.''

இரண்டு வருடங்களாக, 'சுவர பூஷணி'க்கான ஆராய்ச்சிகள் நடைபெற்றன. பாலகிருஷ்ண சாஸ்திரிகளோடு, வித்துவான் பி. ராஜமய்யர் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு ஆராய்ச்சியில் ஒத்துழைத்தார்.

திருவானைக்காவல், திருவண்ணாமலை, காளஹஸ்தி, சிதம்பரம், திருவையாறு, லால்குடி, ஸ்ரீரங்கம், கோவூர், திருவொற்றியூர் என்று தியாகராஜர், முத்துசாமி தீட்சிதரின் க்ஷேத்திர பஞ்ச ரத்தின கிருதிகளும், பஞ்ச பூதலிங்க கிருதிகளும் அந்தந்த இடங்களிலேயே படமாக்கப்பட்டிருக்கின்றன. காமிராமேன், சோட்டா நாயுடு.

அடுத்த முயற்சி என்ன?

இருபத்தாறு வாரங்களுக்கு, 'கர்—சங்கம்' எடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார் முரளி. வடக்கேயிருந்து தெற்கே வந்த ராகங்கள், தெற்கேயிருந்து வடக்கே போன ராகங்கள் பற்றிய, வரலாற்றோடு கலந்த சுவையான நிகழ்ச்சிகளாம். நௌஷாதும், பாலமுரளியும் இசை இயக்குநர்களாக இருக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்களாம்.

பேட்டி, கட்டுரை: **சாருகேசி.**
வண்ணப்படமும் படமும்:
கோவிந்த நல்லப்பா.

''ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தாலும் அந்தக் கட்சிக்குப் போக மாட்டேன்னு சொன்ன நீங்க எப்படி அந்தக் கட்சிக்குப் போனீங்க?''

''கூட ஒரு ரூபாய் போட்டு ஐந்து லட்சத்து ஒரு ரூபாயாக் கொடுத்தாங்க!''

— ஞா. ஞானமுத்து.





போலீஸ்காரர் 1: ஏன் பிரதர், கேடி கண்ணாயிரத்துக்கு நாலு வருஷம் கிடைச்சதுக்கு நீங்க ஏன் இப்படிக் கண் கலங்கறீங்க...?

போலீஸ்காரர் 2: ஒழுங்கா மாமூல் தர்ற ஆளுய்யா... அவனுக்கா இந்தக் கதி!

— என். நாகராஜன்.

●● பொதுவாகச் சினிமா உலகில் முதல் படம் தோல்வியடைந்தால் அடுத்த பட வாய்ப்புக் கிடைப்பது பெரும் கஷ்டம். இதையுணர்ந்ததால்தான் 'என் உயிர்த் தோழன்' பாபு அந்தப் படத்திற்குப் பிறகு நடிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டு, டைரக்ஷனுக்கான வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தார். அப்படித் தேடியவருக்கு இப்போது கையில் பதினான்கு படங்கள்! டைரக்ட் செய்யவா? இல்லை, நடிப்பதற்கு. இதுதான் சினிமா உலகம்!

●● முழு ஆக்ஷன் படம், அல்லது முழு குடும்பக் கதை என்றே டைரக்ட் செய்து கொண்டிருந்த டி. பி. கஜேந்திரன் இப்போது திடீரெனத் தம் பார்முலாவை மாற்றிக் கொண்டு, 'கொஞ்சும் கிளி' என்று முழுக்க முழுக்கக் காதல் கதையைப் படமாக்கிக் கொண்டிருக்கிறார். இதன் ஹீரோ யார் தெரியுமா? ஊர்வசியின் தம்பி நந்து. இவர் தமது பதினைந்தாவது வயதிலேயே 'லயனம்' என்ற மலையாளப் படத்தில் சில்க்குக்கு ஜோடியாக நடித்தவர். இப்போது புதுமுகம் சாரதா ப்ரீதாவுக்கு ஜோடியாக நடிக்கிறார்!

குன்னக்குடியின் த்ரில் படம்!



• நந்து: சாரதாப்ரீதா



• பாபு: அதிர்ஷ்டம் அடிச்சிருச்சு

●● 'தோடி ராகம்' தயாரித்த குன்னக்குடி இப்போது 'உலா வந்த நிலா' என்று டைரக்ட் செய்ய ஆரம்பித்திருக்கிறார். குன்னக்குடி படமாச்சே... அத்தனையும் சங்கீதமாகத்தான் இருக்கும் என்று யாராவது எதிர்பார்த்தால் ஏமாந்து போவீர்கள். இது ஒரு திரில்லர் படமாம்.



• குன்னக்குடி: த்ரில்லில் இறங்கினார்!

●● 'ரோஜாவைத் தாலாட்டும் தென்றல்' படத்தில் டெக்னீஷியன்கள் அனைவரும் புதுசு. ஆர். செல்வராஜிடம் உதவியாக இருந்த பால்ராஜ் டைரக்டர். ஒளிப்பதிவைக் கவனிக்கும் கோபிநாத்தும் புதுசு. செந்தாமரையின் மகன் வள்ளுவனும் இதில் எடிட்டராக அறிமுகம். தயாரிப்பாளர் கூடப் புதுசுதான். முகமது யூனுஸ். இவர் பத்து வருடங்களுக்கு முன்பே சினிமா எடுக்கும் ஆசையில் சென்னைக்கு வந்து, பல லட்சங்களை இழந்து கண்ணீருடன் சொந்த ஊருக்குத் திரும்பியவர். இப்போது தொலைத்ததைத் தொலைத்த இடத்திலேயே தேட புதுத் தெம்புடன் வந்திருக்கிறார்!

— எஸ். பாலு.

ஊன்றுகோல்

போட்டிக் கதை — 7

வேதாந்தம், சீதா கொண்டு வந்து கொடுத்த காப்பியை ருசித்துப் பருகினார். சீதா எல்லா வகையிலும் நல்ல பெண். குணத்தில், கை மணத்தில், திறமையில், உரிமையில், அழகில், பழகும் நேர்த்தியில், எல்லாவற்றிலுமே. 'என் மகன் சீனிவாசன் அதிர்ஷ்டசாலி. அதனால்தான் இப்படி ஒரு மனைவி அவனுக்குக் கிடைத்திருக்கிறாள்; சீனிவாசன் என்ன? நானும்தான், மற்றவர்களின் மாட்டுப் பெண்களைப் போல், குதர்க்கம், குரோதம், கொனஷ்டை, துர்க்குணம், அலட்டல் எதுவுமே இல்லாத நல்ல, அறிவுள்ள புத்திசாலிப் பெண்.. அதனால்தான் எனக்கு மனைவி இல்லாத போதும் வாழ்க்கை அமைதியாகச் செல்கிறது' என்று எண்ணிக் கொண்டார்.

திடீரென்று அவருக்குத் தன் மனைவி சீதாவின் நினைவு வந்தது. சீதா அவரை விட்டுப் போய்க் கிட்டத்தட்ட இருபத்தி ஐந்து வருடங்களாகி விட்டன. சீனு இஞ்சினியரிங் முடித்து அமெரிக்கா செல்ல ஏற்பாடு நடந்து கொண்டிருந்த போது சீதா இறந்தாள். நோயில்லை; நொடியில்லை. 'ஹார்ட் அட்டாக்' என்ற மாயம் அவளை நொடிப் பொழுதில் அவரிடமிருந்து கவர்ந்து சென்றது. அவருக்கு அப்போது நாற்பத்தி ஐந்து வயது. சீனுவும் மிகவும் நல்ல பையன்தான். தந்தையின் தனிமையையும், அதிர்ச்சியையும் எண்ணிப் பயந்து, தன்னுடைய பிரயாணத்தை ரத்து செய்து விடவா என்று கூடக் கேட்டான். அவனுக்குச் சென்னையிலேயே இரண்டு வேலைகள் கிடைக்க இருந்தது. வேதாந்தத்தின் அதிர்ச்சி, சோகம் எல்லாம் சில மணி நேரங்களுக்குத்தான். பின்னர் தெளிந்து விட்டார்.

சீனுவுக்குத் தைரியம் சொல்லி யு. எஸ். அனுப்பினார். 'நீ பயப்படாதேடா... எனக்கு மனசு ஒடிஞ்சு போற அளவுக்கு அத்தனை கிழவனாகி விடவில்லை. தைரியமாக இருப்பேன். தவிர ஆபீஸ் இருக்கிறது. என்னுடைய நண்பர்களே இந்தத் தெருவில், ஊரில் எத்தனை பேர் இருக்கிறார்கள்...? இந்த வீடு என்னுடைய மிகப் பெரிய நண்பன்... போதாதா? கவலைப்படாமல் போய் வா...' என்று வழியனுப்பி வைத்தார்.

அதற்குப் பின்னர் அவருக்கு அடைநடைய மனைவி சீதாவைப் போல் நெருங்கிய உறவாக அமைந்தது அந்த வீடுதான். அடையாறின் அந்த அமைதியான தெருவில் கிட்டத்தட்ட இரண்டு கிரெளண்ட் நிலத்தில் அவர் சம்பாத்தியத்தையும், அவர் தந்தை அவருக்கு விட்டுச் சென்ற பணத்தையும் சேர்த்து எழுப்பியது. இந்தக் காலத்தின் அளவுகோலோடு 'சீதா' என்ற பெயர் வாசலில் பொறிக்கப்பட்ட அது ஒரு பங்களா. கீழே மூன்று அறைகள், ஹால், சமையலறை, பாத்ரூம், கக்கூஸ் என்றும் வீட்டைச் சுற்றி ஓடிய வெளித்தாழ்வாரமும், மாடியில் ஓர் அறையும், அதை ஒட்டிய மொட்டை மாடியும், வீட்டைச் சுற்றிலுமுள்ள மா, பலா, வாழை, தென்னை மரங்களும், செடிகளும்... எல்லாமே அவருக்கு மிகவும் நெருக்கமானவை...

அந்தத் தெருவிலுள்ள எல்லா வீடுகளுமே அவருடைய வீட்டைப் போன்றும், அதை விடப் பெரியதாகவுமுள்ளவைதான். ஆனால் சமீப காலமாகத்தான் ஏகப்பட்ட மாற்றங்கள்...

'**கி**ரீச்' சென்று கேட் சப்தமிட நிமிர்ந்து பார்த்தார் வேதாந்தம். இரண்டு வீடு தள்ளியிருக்கும் அவர் நண்பர் சாம்பசிவம்தான் வந்து கொண்டிருந்தார். சாம்பசிவத்திற்கும் வேதாந்தத்தின் வயசுதானிருக்கும். ஆனால், வேதாந்தத்தை விடப் பார்க்க இன்னும் வயதானவர் போல் தோன்றினார்.

"என்னடா வேதாந்தம்... காப்பி சாப்டாச்சா..." என்றபடி தடியை ஊன்றியபடி வராந்தாவின் படியேறி வந்தார்.

"வா... வா... உட்கார்" என்று எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டினார் வேதாந்தம். அவர் உட்காருவதற்குள் அதே தெருவின் கோடியிலிருக்கும் பரமசிவம் பிள்ளையும் வந்து சேர்ந்தார்.

சீதா வெளியே வந்து காப்பி தம்ளரை எடுத்தபடி, "என்ன மாமா... செளக்யமா... காப்பி குடிக்கிறீர்களா?" என்று கேட்டவள், பரமசிவம் பிள்ளை வருவதைப் பார்த்தவுடன் —

"அடடே... பரமசிவம் தாத்தாவும் வரு

தேவவிரதன்

கிறார். அவருக்கும் சேர்த்துக் கொண்டு வருகிறேன்...'' என்று உள்ளே சென்றாள்.

''என்ன பிள்ளைவாள்... உங்க கிராண்ட் டாட்டர் ஆஸ்திரேலியாவிலேயிருந்து வந்தாச்சா...?'' என்றார் வேதாந்தம்.


அங்கிருந்த கூடை நாற்காலியில் அமர்ந்த பிள்ளை, ''உம்... வந்தாச்சு... வந்ததிலிருந்து அவளுக்கு ஏகப்பட்ட எங்கேஜ்மெண்ட். டாக்டர் இல்லையா... விஸிட்டர்ஸ் வேற...'' என்றார்.

அவருடைய மகன், மருமகள் இருவருமே டாக்டர்கள். பேத்தியும், மருமகனும் மீண்டும் மருத்துவர்கள். ஆனால் அவர்கள் இங்கு இல்லை. ஆஸ்திரேலியாவில் — ஸிட்னியிலிருக்கிறார்கள். இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை சென்னை வருவதுண்டு. பேரன் அமெரிக்காவில். அவர்களது வீடு வேதாந்தத்தின் வீட்டை விடப் பெரியது. ஆனால் தற்சமயம் அது இடிக்கப்பட்டு, கிட்டத்தட்ட முப்பது ப்ளாட்கள் எழும்பி விட்டன. பரமசிவத்திற்குக் கையில் ரொக்கமும் இரண்டு ஃப்ளாட்களும் கிடைத்தன.

சாம்பசிவத்திற்கும் ப்ளாட் வாழ்க்கை தான். அவர் வீடும் இடிக்கப்பட்டு ஆறு பெரிய பிளாட்கள் கட்டப்பட்டு விட்டன.

மாற்றங்கள் என்று வேதாந்தம் நினைத்து இதைத்தான். சென்னையில், குறிப்பாக பிரபலமான இடங்களில் தனி வீடுகளே இல்லாமல் போய்க் கொண்டிருந்தன. தோட்டங்கள் மறைந்து கொண்டிருந்தன.

தனி வீடுகள் உதிர்ந்த இடங்களில், கொத்துக் கொத்தாகக் கூடுகள்...! அசக்கித்



இருப்ப முடியாமல்; காற்றோட்டமில்லாமல், தோட்டமில்லாமல்... கூடுகள்தாம். அழகான கூண்டுகள். ஸ்நோஸெமும், வால் பேப்பரும், அலங்கார விளக்குகளும், ஏர் கண்டிஷனரும், அட்டாச்ட் டாய்லெட்டும்...

பணம் என்னும் மந்திரக்காரன் காட்டும் வித்தை இது. கையில் ரொக்கம், கூட ஒரு கூடு என்கிறபோது ஆசை அதிகரிக்கிறது. அந்த விளக்கில் ஒவ்வொரு விட்டிலாக விழுந்து கொண்டிருக்கிறது... வேதாந்தத்தின் எண்ண ஓட்டம் தடைப்பட்டது. சாம்பசிவத்தின் உரத்த குரலில்.

"ஏம்மா சீதா... நீதான் சொல்ல மாட்டியா.. இந்த வீட்டை ஒரு நல்ல விலைக்கு விற்று விட்டு எங்களைப் போல் பணத்துடன் ஒரு ஃப்ளாட்டும் வாங்கிக்கலாமே.. வேதாந்தம் தான் சொன்னதைக் கேட்க மாட்டேன் என்கிறான். நீயாவது சீனுவுடன் பேசக் கூடாதோ..." என்றபடி காப்பியைப் பருகியவர், "பேஷ்... காப்பி ரொம்ப நன்னாயிருக்கு. உன் பில்டர் காப்பிக்கு இணை ஏது...?" என்றார்.

பரமசிவம் காப்பியை ருசித்து விட்டு, "எங்க வீட்டில் இன்ஸ்டண்ட் காப்பிதான் அதுவும் நல்லாத்தானிருக்கு!" என்றார்.

சீதா எல்லாவற்றையும் புன்னகையோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா பதிலே சொல்லலை...?" என்றார் பரமசிவம்.

"நீங்க தினம் கேக்கிற கேள்விதானே. இந்த வீடு நன்றாகத்தானே மாமா இருக்கு. இதை ஏன் விக்கணும்?" என்றாள்.

"நன்னாச் சொன்னே போ... நாளைக்கே உன் பிள்ளை ரமேஷ் கல்யாணமாகி அவன் குழந்தைகளுடன் வந்தானானால் இடம் போறுமா...? அப்புறம் உஷா இருக்கிறாள். அவளுக்குக் கல்யாணம் பண்ணணும். அவள் குடும்பம் வரும்.. என்ன ?"என்றவர், "கையில் ரொக்கமாக நிச்சயம் ஒரு லட்சத்திற்கு மேலேயே வரும். ஆயிரத்து இருநூறு சதுர அடியில் வீடும் கிடைக்கும். அதோ பார்... எப்படி பழசாகிப் போயிடுத்து... நீங்களே சொல்லுங்கள் பிள்ளை. நான் சொல்வது சரிதானே...?" என்று பரமசிவம் பிள்ளையையும் சாட்சிக்கு இழுத்தார் சாம்பசிவம்.

பரமசிவம் பிள்ளை தம்முடைய நரைத்த மீசையைத் தடவிக் கொண்டார்.

"காலத்தோட நாமும் ஒத்துப்போகணும், வேதாந்தம்... இந்தத் தெருவில் இன்னும் ஃப்ளாட்டாகாமல் இருப்பது உம்முடைய வீடுதான். சீக்கிரம் நீங்களும் புத்திசாலித்தனமாக எல்லோரையும் போல் வர ஆளிடம் விலை பேசி முடியும்..." என்றார்.

வேதாந்தம் பதில் சொல்லாமல் புன்னகை செய்தார். பிள்ளையும், சாம்பசிவமும் சொல்வது வாஸ்தவம்தான். இன்னும் அந்தத் தெருவின் பழைய நினைவாக நின்று கொண்டிருப்பது அவர் வீடுதான். அக்கம் பக்கத்திலிருக்கும் கிழவர்கள் எல்லாம் கூடிப் பேசுவது அவர் வீட்டில்தான். அதிலும் ஓரிருவர் இறந்து விட்டனர். வீட்டை விற்று ஊரை விட்டுச் சென்ற சில குடும்பங்களுடன் அந்தப் பெற்றோரும் சென்று விட்டனர். இன்னும் இங்கே இருப்பது இந்த மூவர்தான்.

சற்று நேரம் அரசியல், நாட்டு நடப்பு என்று பேசிக் கொண்டிருந்தபின், சாம்பசிவமும், பிள்ளையும் கிளம்பிச் சென்றனர்.

தோட்டத்தில் ஈஸிசேரைப் போட்டுக் கொண்டு வானத்தை பார்த்தபடி யோசனையில் ஆழ்ந்தார் வேதாந்தம். அவருக்குக் குழப்பமேற்பட்டது. 'ஒருவேளை நாம் செய்வதும் பைத்தியக்காரத்தனமோ... வீட்டை விற்க வேண்டுமென்ற எண்ணம் சீனுவுக்கும், சீதாவுக்கும் இல்லாமலிருக்குமா? சீதா மற்றவர்கள் எடுத்துக் கொடுத்தாலும் சிரித்து மழுப்புகிறாளோ... இந்தக் கிழவனின் பிடிவாதம் என்று... சே... சே. அப்படியிருக்காது.. உண்மையில் பலர் இந்த வீட்டை விலை பேச வந்தனர்... சீனுதான் ஒன்றுமே பேசாமல் தந்தையைக் கை காட்டி விட்டான். வேதாந்தம் மறுத்து அனுப்பி விடுவது வழக்கம். ஏன்... என்னுடைய பழைய நினைவுகளுக்குத் துணையாகப் பழையதாக இருப்பதாலா...?' வேதாந்தம் குழம்பிப் போனார்.

அவருக்கு ஏனோ அடுக்கு மாடி வீடுகள் ரசிக்கவில்லை. கூண்டுகள் போல் தோன்றின.

கேட் 'க்ரீச்'சென்றது. வேதாந்தம் தலைநிமிர்ந்து பார்த்தார். சீனிதான்... சற்று பரபரப்பாக அவர் அருகே வந்து நின்றான்.

"அப்பா..."

வேதாந்தம் மெல்ல நிமிர்ந்து பார்த்தார்.

"பரமசிவம் தாத்தா... இறந்து விட்டார்...!" சீனுவின் குரல் திடீரென்று ஆழத்திலிருந்து ஒலிப்பது போல் தோன்றியது.

"என்னது?"

ஒரு மணி நேரம் முன்பு பேசிக் கொண்டிருந்தவர். 'இன்ஸ்டண்ட் காப்பி பில்டர் காப்பி போல நன்றாக இருக்கிறது' என்றவர். பேத்தியைப் பற்றிப் பெருமை பேசி வீட்டை விற்கச் சொன்னவர்...

"என்ன ஆச்சு...?"

சீதாவும் வாசலுக்கு வந்து விட்டாள். சீனு உதட்டைப் பிதுக்கினான். "ஹார்ட் ஃபெயிலியர். வீட்டிலேயே நான்கு மருத்துவர்கள்...

உங்கள் பால்காரர் ரயிலில் பால் கொண்டு தருவாரா?



என் பால்காரர் தருவார்.

பிரயாணத்தின் போது சாப்பாடு மற்றும் பானங்கள் விஷயத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பால் திரிந்து விடும் அல்லது விரைவில் புளித்துப் போய் விடும். இது போன்ற சமயங்களில் அமுல் மில்க் பவுடர் டின் கையோடு கொண்டு செல்லுங்கள்.

அமுல் மில்க் பவுடர் கொண்டு நீங்கள் தூய்மையான, ஆடை நிறைந்த பாலை நொடியில் தயாரித்து விடலாம். அப்படியே அருந்தலாம். தேனீர், காப்பி, தயிர், மோர், பாயசம், கஸ்டர்ட், கேக், ரஸகுல்லா எது வேண்டுமோ தயாரிக்கலாம்.



அமுல் மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும் ஒரு பால்பண்ணை.

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!

குபீர்ச் சிரிப்பை வரவழைக்கும் ஜோக் அல்லது ஓர் அனுபவத் துணுக்கைக் கீழேயுள்ள வெற்றிடத்தில் பால்பாயிண்ட் பேனாவைக் கொண்டு எழுதுங்கள். அடுத்த ஆகஸ்டு இறுதிவரை நடக்கும் இப் போட்டியில், பிரசுரமாகும் ஒவ்வொன்றுக்கும் பரிசு. யாருடைய ஜோக் அல்லது துணுக்கு அதிக அளவில் பிரசுரமாகிறதோ அவர் ஜோடியாகச் சிங்கப்பூர் சென்று வந்து பேட்டி தரும் வாய்ப்புக் காத்திருக்கிறது! உறையின் மேல் 'சிரிப்பு-சிங்கப்பூர்' – 12.11.90 என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

முடிவு தேதி: 12. 11. 90

ஜோக்/துணுக்கு:

என் பெயர் : ....

விலாசம் : ....

....

....

....

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம்

எதுவுமே உதவவில்லை... கூட்டிலிருந்து ஒரு உயிர் பறந்து விட்டது.''

வேதாந்தம் எழுந்து கொண்டார். ''வா... போகலாம்...'' என்றார் சீனுவிடம்.

அன்று இரவு மிகவும் கனமானதாகவும், இறுக்கமாகவுமிருந்தது. சாம்பசிவம் கதறினார். அவர் அழுத அளவு கொஞ்சம் விகல்பமாகவேயிருந்தது. ஏனெனில் பிள்ளையின் குடும்பத்தில் எவரும் அந்த அளவு அழவில்லை. இறுக்கமான சோகந்தான்.

வேதாந்தத்தின் மனமும் மிகவும் இளகியிருந்தது. ஆனால் வெளிப்படையாக அழ முடியவில்லை. தொண்டைக் குழியில் ஏதோ அடைத்துக் கொண்டது போல் ஓர் உணர்வு. விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல்.

சாம்பசிவம் ''நான் இன்று உன்னோடு உன் வீட்டிலேயே இருக்கிறேன்'' என்று வேதாந்தத்தின் வீட்டிலேயே பரமசிவம் பிள்ளையின் இறுதிப் பயணத்தில் பங்கேற்ற பின் தங்கி விட்டார்.

வேதாந்தம் பதில் சொல்லாத போதிலும் கூட சாம்பசிவம் தானே ஏதேதோ பழங் கதை பேசினார். பின் மெல்ல உறங்கிப் போனார்.

வேதாந்தம் வெகு நேரம் உறங்காமல் யோசித்தபடி படுத்துக் கொண்டிருந்தார்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை.

சாப்பிட்ட பின் பேப்பரைப் படித்தபடி அமர்ந்திருந்த மகனைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார் வேதாந்தம். சீதாவும் வேலையை முடித்துக் கொண்டு வந்து டீ.வி.யை ஆன் செய்தபடி அமர்ந்தாள்.

வேதாந்தம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''சீனு... சீதா... உங்களண்டை நான் முக்கியமா ஒண்ணு பேசணும்.''

சீதா 'டக்' கென்று டீவியை நிறுத்தினாள். சீனு பேப்பரைத் தழைத்து. ''என்னப்பா...?' என்றான்.

சற்று மௌனமாக இருந்த வேதாந்தம், ''உனக்கு இந்த வீட்டை விற்று ஃப்ளாட் வாங்க விருப்பமா சீனு...?'' என்றார்.

சீனு புருவத்தை உயர்த்தினான். ''அதுக்கென்னப்பா இப்ப... இல்லையே..?'' என்றான்.

வேதாந்தம் சற்றுத் தயங்கினார். ''இல்ல... உங்களுக்கு அப்படியொரு எண்ணமோ, ஆசையோ இருந்தால் செய்யலாம். எனக்கு ஆட்சேபணையில்லை...'' என்றார்.

''இப்ப ஏம்பா.. திடீர்னு?''

''பிள்ளை தேத்துப் போயிட்டார்.

இடீர்னு... நானும் எத்தனை நாளோ... நான் இருக்கும்போதே எல்லாம் பண்ணிவிடறது நல்லதில்லையா...?''

''ஏம்பா.. இப்படிப் பேசறேள்...?'' என்றான் சீனு வருத்தத்துடன்.


சீதா மென்மையாகக் குறுக்கிட்டாள்.

''இல்லப்பா... இந்த வீடு இப்படியே இருக்கட்டும். அதுதான் எங்க ஆசை... உங்க ஆசையும் அதுதானே அப்பா...?'' என்றாள்.

''ஏம்மா...?''

சீதா புன்னகை செய்தாள்.

''எனக்குத் தெரியும்ப்பா.. உங்க நண்பர்கள் ஒவ்வொருத்தரும் உங்களை, வீட்டை விற்கச் சொல்லும்போதெல்லாம் அவா மனசிலே என்ன இருக்குன்னு. அவா ஏன் நம்ப வீட்டுக்கு அடிக்கடி வரான்னும் எனக்குத் தெரியும். வயசானா நிறைய ஊன்றுகோல் வேணும். பழைய நினைவும், வாசனையும், ஞாபகங்களும் கூட ஊன்றுகோல்கள்தான். சாம்பசிவ மாமா அதனாலேதான் நேற்று ராத்திரி இங்கே தங்கினார். வீடு பறவைகள் தங்கற கூடு மாதிரியில்லப்பா... உங்களுக்காகவும், உங்க நண்பர்களுக்காகவும்தான் இந்த வீட்டை நாங்க விக்க விரும்பலை. இப்பவும் சொல்றேன். உங்க காலம் வரை இந்த வீடு இப்படித்தான் இருக்கும். அதற்கப்புறம்... பார்க்கலாம். அப்பவும்தான் ஏன் மாற்றனும்... எனக்குக் கிட்டத்தட்ட இருபது வருஷமாகப் பழகின வீடாச்சே. அப்படியே இருந்துட்டுப் போகட்டுமே. வேணும்னா இதையே உஷாவோ, ரமேஷோ விஸ்தரிச்சுக் கட்டிக்கட்டும். இடிக்க வேண்டாம். இடிக்க விட மாட்டேன். எனக்குப் பிடிக்கலை...'' என்றாள் சீதா.



வேதாந்தமும், சீனுவும் அவளை ஆச்சர்யத்துடன் பார்த்தனர்.

வேதாந்தத்திற்குப் பேச்சு வரவில்லை. கண்கள் நிரம்பின. ஒரு பெண்ணால் தன் மனதிலிருப்பதை இவ்வளவு துல்லியமாகப் படம் பிடித்துப் படித்துப் பார்த்துச் சொல்ல முடியும் என்பதை நினைத்த போது நெஞ்சு விம்மியது.

குடை அழுக்கடைந்து போனதா? நவசாரக் கரைசலை ஒரு பிரஷ்ஷினால் எடுத்து, குடைத் துணியில் தேய்த்தால் அதில் பற்றியுள்ள அழுக்கு நீங்கிச் சுத்தமாகிவிடும். இதற்குப் பழைய டூத் பிரஷ்ஷை உபயோகிக்கலாம்!

— குடந்தை எல். ராம்பிரபு.

வாசல் தேடும் வசந்தங்கள்

வசந்தாவுக்கு, வரன் தேடும் விஷயமாயிற்றே! மங்களத்தின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைப் பிரயோகங்களுக்குக் கேட்கவா வேண்டும். எட்டரைக் கட்டையில் ஆரம்பித்தாள்.

''உங்களுக்குக் கொஞ்சமாவது பொறுப்பிருக்கா? இன்னிக்கு என்ன கிழமை?''

''தெரியுமே!... வெள்ளிக்கிழமை...''

''காலையிலே எட்டு மணிக்கெல்லாம் கல்யாணத் தரகர் வைத்தி வரச் சொல்லியிருக்கார். அதுவும் தெரியுமில்லே?''

''நல்லா ஞாபகமிருக்கு!

'' என்ன சொன்னீங்க? ஞாபகமிருக்கா? சரிதான்... எங்கே போய் முட்டிக்கிறதுன்னு தான் தெரியலே. ஞாபகமிருந்தவருக்கு இத்தனை நாழி, கும்பகர்ணனாட்டம் தூங்கத் தோணுமா? மணி ஏழாகப் போறது... நீங்க இன்னும் ரெடியாகலே...''

''பத்து நிமிஷத்திலே ரெடியாயிடறேன். போதுமா?''

வார்த்தைகள் நகங்கி வெளிப்பட, 'சட்' டென்று குளியலறைக்கதவைச் சாத்திக் கொண்டு அவசரமாகக் குளித்து விட்டுத் தலையைக் கூடத் துவட்டாமல், ஈரம் சொட்டச் சொட்ட வந்து வழக்கம் போல் பூஜையறைக்குள் நுழைந்து கொண்டார்.

அனேகமாய் இந்த விரட்டல்களெல்லாம் தினசரி நடப்பதுதான். இன்று கொஞ்சம் அதிகம். அவர் இதையெல்லாம் சட்டை செய்யாமல், எப்பவும் போல் பூஜையை முடித்து விட்டுத்தான் வெளியே வந்தார்.

மங்களம், எரிச்சலுடன் காப்பியை நீட்டினாள்.

''இந்தாங்க காப்பி... குடிச்சுட்டு நேரா நடையைக் கட்டுங்க. டிபனுக்கெல்லாம் காத்திருக்க வேண்டாம். போயி வந்து வயித்தை நெறைச்சுக்கலாம். அது சரி... வசந்தா ஜாதகம் எடுத்துக்கிட்டீங்களா?'

''ப்ச்... நல்லாக் கேட்டே போ... போறதே அதுக்குத்தானே?'

''சொன்னதெல்லாம் நினைப்பிருக்கில்லே?''

''இருக்கு... இருக்கு.''

''கொஞ்சம் பொறுங்க. வைத்திக்குத் தெரியுமோ? தெரியாதோ? வசந்தா, ஒங்க மூத்த தாரத்துப் பொண்ணுங்கறதை மறக்காம சொல்லிடணும்.''

''அதைத்தான் மூச்சுக்கு முந்நூறு தரம் சொல்லிக் குத்திக்காட்டிட்டுத்தானே இருக்கே. கேட்டுக் கேட்டு காதே புளிச்சுப் போச்சு. உம்... அவளைக் கரிக்காமே உன்னாலேயும் இருக்க முடியாது.''

''கரிச்சுக் கொட்டாமே, அவளை நிக்க வெச்சு கல்பூரம் காட்டட்டுமா? மனுஷனுக்கு வர்ற ரோஷத்தைப் பாரு? நான் பெத்ததுங்க ரெண்டும் குதிராட்டமா வளர்ந்து, கல்யாணத்துக்கு நிக்கும் போது, எவளோ பெத்ததைப் போய்ச் சீராட்டவா முடியும்?''

''வேண்டாண்டியம்மா சீராட்டாதே. நீ சீராட்டித்தான் தீரணும்னு நானொண்ணும் நிர்பந்தப்படுத்தலை. பாவம் வசந்தா.. அம்மா முகம் கூட சரியாப் பாக்காதவ. ஒரு வயசுக் குழந்தையாயிருக்கும் போதே பெத்தவளைப் பறிகொடுத்தவ... தாயில்லாத பொண்ணா அவஸ்தைப் படக் கூடாதுன்னு தான் உன்னைப் பண்ணிண்டேன். நீ என்னடான்னா வந்த நாளிலிருந்து அவளை எதிரியாத்தான் பாக்கறே. ஹூம் சீக்கிரமா அவளை ஒருத்தன் கிட்டே பிடிச்சுக் குடுத்தாத்தான் பெரிய தலைவலி தீரும்.''

''நானும் அதைத்தானே செய்யச் சொல்லறேன்... அந்தத் தொட்டது துலங்காத துக்கிரி வீட்டைவிட்டுப் போனாத்தான் நான் பெத்ததுங்க ரெண்டுக்கும் கல்யாணம் கூடிவரும். நொண்டியோ மொடமோ எதையோ ஒண்ணைப் பிடிச்சு அவதலையிலே கட்டறதை விட்டுட்டு மேஷ ரிஷபம் பாத்துட்டிருந்தா ஆகுமா?''

''என்னது?... நொண்டி மொடத்துக்குக் குடுக்கச் சொல்லறியா? எம் பொண்ணு வசந்தாக்கு என்னடி குறை? லட்சணமா பச்சைக் கிளியாட்டம் இருக்காடி.''

''இருக்கட்டுமே... மொண்டி மொடமில்லாமே வேறெ ராஜகுமாரனா பறந்து வரப் போறான் அந்தத் தரித்திரத்துக்கு?''

''ராஜகுமார்னா இல்லாட்டாலும் நாம பாக்கறது ஓரளவுக்கு நல்ல இடமா இருக்கக் கூடாதா?'

''ஓஹோன்னானாம்... அப்படியொரு யோசனை வேறயிருக்கா? வேண்டியதுதான்... எதை வெச்சு இப்படிப் பேசறீங்கன்னு எனக்கும் தெரியாமலில்லை. இதெப் பாருங்க... ஒங்க ரிடையர்மெண்ட் காசிலே ஒத்தப் பைசாக் கூட அவளுக்குக் கிடையாது. எம் பொண்ணுங்க ரெண்டுக்குமே அது பத்தாது. அப்புறமில்லே அந்தத் தண்டச் சோத்துக்குப் பங்கு. அதை நினைச்சு ஆகாசக் கோட்டையெல்லாம் கட்ட வேண்டாம்... இப்பவே சொல்லிட்டேன்.''

அவருக்குச் சுரீரென்று நெஞ்சைச் சுட்டது. அப்படியே உடைந்து போய் விட்டார். மனசுக்குள் பயப்பூச்சிகள் படபடக்க ஆரம்பித்திருந்தன.

''மங்களம், என்ன பேச்சுப் பேசறே நீ... ரிடையர்மெண்ட் பணத்திலே, வசந்தாக்குப் பங்கு கிடையாதா?''

''இல்லே.... சல்லிக்காசு கூடத் தரமாட்



டேன்...''

அவருக்குச் சுறு சுறுவென்று கோபம் வந்தது. அதை வெளிக்காட்ட நெஞ்சு வரைக்கும் எழும்பிய வார்த்தைகள், நீர்க் குமிழியாய் அடங்கிப் போயின. ''நிச்சயமா நீ நரகத்துக்குத்தான் போவே!''

அவரால் மனசுக்குள் முணுமுணுக்கத் தான் முடிந்தது.

மங்களத்துக்கு எக்ஸ்ரே கண்கள். அவரது மன ஓட்டத்தைப் படம் பிடித்துவிட்டாள் போலிருக்கிறது. எந்தச் சாபமும் என்னை ஏதும் செய்யாது என்பது போல், ''என்ன முணு முணுப்பு வேண்டிக்கிடக்கு? புறப்பட வேண்டியதுதானே?'' என்றாள்.

''புறப்படறேன்.. புறப்படறேன். வசந்தா எங்கே காணோம்? அவகிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போகலாம்னு தான் நிக்கறேன்...''

''அவ கிட்டே என்ன கேக்கறது...? நாம பாத்து நீட்டுங்கிற இடத்திலே கழுத்தை நீட்டிட்டுப் போறா! வேண்டாம்னா சொல்லிடுவா?''


''அவளையும் ஒரு வார்த்தை கேட்டிடறது நல்லதில்லையா?''

''அப்படியா? அந்தச் சிறுக்கியைக் கேட்டுத்தான் செய்யணுமாக்கும்... அதுக்கு ஒண்ணு செய்யுங்க. அந்த ஒண்ணுக்கு மத்தவ தெப்பக்குளத்துக்குத்தான் போயிருக்கா. வேணும்னாப் போற வழியிலே அவளையும் கேட்டுக்குங்க.''

''ஆமா. அவ ஏன் தெப்பக்குளம் போனா? வீட்டிலே கிணறிருக்கு. இங்கேயே குளிச்சுக்க வேண்டியதுதானே?''

''நான்தான் போகச் சொன்னேன். ரெண்டு நாளாத் துணியே துவைக்கலே. நானும் அவ தங்கைகளும் அவுத்துப் போட்ட துணி ஒரு மூட்டை சேந்திருக்கு. அத்தனை துணியும் துவைச்சு, அலச எவ்வளவு தண்ணி வேணும்... அதுக்குத்தான்

பாரதி வீரராகவன்



''நேற்று நீயும் உன் மனைவியும் சண்டை போட்டீங்களே, ஏன்?''

''சம்பளக் கவரை என் மனைவி கையில கொடுத்ததுக்கு, சம்பளக் கவர் லாம் வேணாம், லஞ்சக் கவரைக் கொடுங் கன்னு சத்தம் போடறா!''

— எஸ். முகம்மது யூசுப்.

போகச் சொன்னேன்...''

''மங்களம், இனிமேயும் இங்கே நின்னுட்டிருந்தா எனக்கு மண்டை வெடிச்சிடும். நான் புறப்படறேன்'' என்று துண்டை உதறித் தோளில் போட்டுப் புறப்பட்டார். மங்களத்துக்கு என்ன தோன்றியதோ!

''மறுபடியும் சொல்லறேன். ஏடா கூடமா ஏதாவது செஞ்சுட்டு வந்து நின்னீங்க எனக்குக் கெட்ட கோபம் வரும். கையைக் கடிக்கிற சம்பந்தத்தைக் கூட்டி வந்து பஜ்ஜி சொஜ்ஜிக்குத் தண்டம் பண்ண வெச்சிடாதீங்க.

அதைக் கேட்க அவர் அங்கு இருக்கவில்லை. எப்போதோ செருப்பு மாட்டி வாசல் தாண்டியிருந்தார். தெருவில் இறங்கியதும் நடையை வேகமாக்கினார்.

''வசந்தா ஒரு நிறைகுடம். இத்தனை நாளா சித்திக்கிட்டப் படற அவஸ்தைகளை எங்கிட்டே கூட வாய்விட்டுச் சொன்னதில்லே. எல்லாத்தையும் தாங்கிக்கிட்டு, எதுவுமே நடக்காத மாதிரி சிரிச்சுக்கிட்டே இருப்பா. போற இடத்திலேயாவது அவ நிம்மதியா இருக்க நீதான் அருள் புரியணும். வசந்தாவின் வாழ்விலும் வசந்தம் வரணும்'' என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டே நடந்து தெப்பக் குளத்தையடைந்தார்.

அப்போது தான் ஒரு மூட்டைத் துணியையும் துவைத்து எடுத்துக் கொண்டு வசந்தா படியேறத் தொடங்கியிருப்பது தெரிந்தது. ஏறும் போது, கால் தடுக்காமலிருக்க, சரப்புடவையைக் கொஞ்சமாய் தூக்கிச் செருகியிருந்தாள்.

சாம்பசிவம் அவளை ஒரு தரம் முழுசாய் ஏறிட்டார். முகத்திலிருந்து ஆரம்பித்து, முழங்காலை நெருங்கவும் பார்வை நிலைகுத்திச் சிவந்து போனது. வாழைத்தண்டுக் கால்களில் வரி வரியாய்க் கோடு போட்டது போல் சூட்டுத் தழும்புகள்.

சகலமும் மங்களத்தின் கைங்கரியங்கள் தான்.

பொங்கி வந்த துக்கத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். அதற்குள் சுமக்க முடியாத சுமையுடன் வந்த அந்தச் சம்பளமில்லாத வேலைக்காரி அவரைப் பார்த்து விட்டாள்.

''என்னப்பா இங்கே வந்து நிக்கறீங்க. சித்தி சண்டை கட்டினாளா?''

''அவ என்னிக்கு வாழ்ந்தா சொல்லு? அதுதான் தினமும் நடக்கிற தெரிஞ்ச கதையாச்சே... அவளைப்பத்திப்பேசி என்னாகப் போறது? அவளை விடு. இப்பப் பேச வேண்டியது உன்னைப் பத்தித்தான்.''

''சொல்லுங்கப்பா....''

''சீக்கிரமா ஒனக்கொரு கல்யாணத்தைப் பண்ணிவெச்சு இந்த நரகத்திலிருந்து விடுவிக்கலாம்னு இருக்கேன். ஆனா... அதுக்கும் அவ குறுக்கே நிக்கறா. என் சம்பாதியத்திலே ஒனக்குன்னு எதுவுமே தரமாட்டாளாம். ரொம்ப சாதாரண இடமாப் பாக்கச் சொல்றா. செலவெல்லாம் வைக்கக் கூடாதாம்.''

''சிக்கனமா முடிச்சிடுங்கப்பா..''

''எப்படிம்மா முடியும்? அவ சொல்லற மாதிரி பாத்தா ஒரு சாதாரண வேலைக்காரன் கூடக் கிடைக்க மாட்டாம்மா. ஒரு வேளைச் சோத்துக்கு லோல் படற மாதிரியா உன்னை அனுப்பறது?''

'' ....''

''ஏம்மா பேசமாட்டேங்கறே?''

''வரதட்சணையே கேக்காத இடமாப் பாருங்கப்பா!''

''அப்போ அவ சொல்லற மாதிரி நொண்டி, மொடத்தைத்தான் பாக்கணும். இல்லேன்னா ரெண்டாந்தாரமாத் தான் கட்டி வெக்கணும்.''

''இப்ப நீங்க சொன்ன ரெண்டாந்தாரம் பத்தித்தான் நானும் சொல்லவந்தேன். ரெண்டாந்தாரமா வாழ்க்கைப் படணும்னு தான் நான் தினமும் பிரார்த்திக்கறேன்.''

''நிஜமாவா?''

''ஆமாப்பா... ரெண்டாந்தார மாப்பிள்ளையே பாருங்க. சித்திக்கு செலவு வெக்கக் கூடாது. ஆனா ஒரு கண்டிஷன். அப்படிப் பாக்கற ரெண்டாந்தார மாப்பிள்ளைக்கு ஒண்ணோ ரெண்டோ குழந்தைங்க கண்டிப்பா இருக்கணும். அந்தக் குழந்தைகளை நினைச்சுத்தான் ரெண்டாந்தாரம் பண்ணிக்கத் தயார்னு சொல்றேன்.''

''என்னம்மா புதிர் போடறே?''

''சித்தி கிட்டே பட்டுப்பட்டு என் சிந்தனை அந்த ரூபத்திலேயே அமைஞ்சு போச்சுப்பா. நான் அனுபவிச்ச அவஸ்தைகள் அந்தக் குழந்தைகள் படக் கூடாதில்லையா? மூத்த தாரம் பெத்த அந்தக் குழந்தைகளை நான் பெத்ததாப் பாவிச்சு, அவங்களுக்கு நல்ல தாயா இருப்பேன். சத்தியமா சித்தியா மாறிக் கொடுமைப் படுத்த மாட்டேன். இந்த வீட்டு மிதியடியா இருந்த எனக்கு அப்படிப்பட்ட ஒரு வாசப்படியைக் காட்ட வேண்டியது ஒங்க பொறுப்பு.''

சாம்பசிவம், அப்படியே விக்கித்துப் போய் விட்டார். மனம் கொள்ளா மகிழ்ச்சியுடன் மகளை ஏறிட்டார். வசந்தாவின் விழிகளில் அன்பு சொட்டுவது தெரிந்தது.



இருபத்தேழாம் அத்தியாயம்

ஒரு குதிரை

பல்லவ சக்கரவர்த்தியையும் அவருடைய திருக்குமாரரையும் பார்த்தவுடனே, சற்றுத் தூரத்திலேயே சிவிகை தரையில் இறக்கப்பட்டது. ஆயனரும் சிவகாமியும் சிவிகையிலிருந்து இறங்கிப் பயபக்தியுடன் நடந்து வந்தார்கள்.

''ஆயனரே! வாருங்கள்! சிவகாமியையும் அழைத்து வந்தீர்களா? மிகவும் நல்லது. பிரயாணம் சௌக்கியமாயிருந்ததா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''பல்லவேந்திரா! தங்களுடைய குடை நிழலின் கீழ்ப் பிரயாணம் சௌக்கியமாயிருப்பதற்குக் கேட்பானேன்?'' என்று கூறிய வண்ணம் ஆயனர் அருகில் வந்து வணங்கினார்.

அவருக்குப் பின்னால் அடக்கத்துடன் வந்த சிவகாமியும் சக்கரவர்த்திக்கு நமஸ்கரித்தாள். அவளுடைய உள்ளத்தில் சக்கரவர்த்தியிடம் பக்தியும் மரியாதையும் நிறைந்திருந்தன. அதே சமயத்தில் இன்னதென்று தெரியாத ஒருவகைப் பயமும் குடி கொண்டிருந்தது.

''சிவகாமி! உனக்கு மங்களம் உண்டாகட்டும்! உன்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கும் பரத சாஸ்திரக் கலை மேலும் மேலும் வளர்ந்து பூரணம் அடையட்டும்!'' என்று மகேந்திர பல்லவர் ஆசி கூறிவிட்டு, ஆயனரைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

''ஆயனரே! இன்றைக்கு உங்கள் பிரயாணம் சௌகரியமாயிருந்தது என்று சொன்னீரல்லவா? இனி நெடுகிலும் அப்படியே இருக்கும் என்று சொல்வதற்கில்லை. இந்த யுத்தம் முடியும் வரையில் சாலைகளிலே சைன்யங்களின் நடமாட்டம் அதிகமாயிருக்கும். ஆகையால் இன்னும் கொஞ்ச காலத்துக்கு நீர் இங்கேயே வந்து தங்கியிருப்பது நல்லது....''

ஆயனருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அரண்ய வீட்டில் அரைகுறையாகச் செய்யப்பட்டுக் கிடந்த நடன சிற்ப உருவங்கள் எல்லாம் அவருடைய கண் முன்னால் நின்றன.

''பல்லவேந்திரா!....'' என்று ஏதோ சொல்லத் தொடங்கினார்.

மகேந்திரர் தமது குரலைச் சிறிது கடுமைப்படுத்திக் கொண்டு, ''மறு வார்த்தை வேண்டாம். நீரும் உம் புதல்வியும் நாளை முதல் இங்கே வந்து விடவேண்டியது. இது நமது ஆக்ஞை!' என்றார்.

ஆயனர் நடுங்கியவராய், ''பல்லவேந்திரா! தங்கள் ஆக்ஞைக்கு மறு வார்த்தையும் உண்டா? அவ்விதமே செய்கிறேன்'' என்றார்.

''ஆயனரே! இந்தக் கோயில்களை எவ்வளவு சீக்கிரமாக வேலை செய்யலாமோ அவ்வளவு சீக்கிரமாக முடிக்க வேண்டும். கோயில்கள் பூர்த்தியாகும் வரையில் நீர் வேறு எந்த வேலையையும் கவனிக்க வேண்டியதில்லை. இந்த வேலைக்காக நீர் எப்போது எவ்வளவு திரவியம் கேட்டாலும் கொடுக்கும்படியாகத் தனாதிகாரிக்குக் கட்டளையிட்டிருக்கிறேன். இன்னும் உமக்கு வேண்டிய ஆட்களையும் வேறு வசதிகளையும் உடனுக்குடன் அனுப்பும்படி ஏற்பாடு

அமரர் கல்கி

செய்திருக்கிறேன். எந்தக் காரணத்தினாலாவது காரியம் குந்தகப்படுவதாயிருந்தால் நீர் குமார சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்பி வேண்டியதைத் தெரியப்படுத்தலாம்'' என்று சக்கரவர்த்தி கூறியதும், அருகில் நின்ற மாமல்லரை ஆயனர் நோக்கினார். அப்போது அவர் முகபாவமானது ஏதோ கேட்க வேண்டுமென்ற விருப்பத்தைப் புலப்படுத்தியது.

''ஆம், ஆயனரே! இனிச் சில காலத்துக்கு உமக்கு வேண்டியதையெல்லாம் மாமல்லரிடந்தான் தெரியப்படுத்த வேண்டும். நாளைய தினம் பல்லவ சைனியத்துடன் நான் போர்க்களத்துக்குப் புறப்பட்டுச் செல்கிறேன். நான் திரும்பி வரும்வரையில் பல்லவ சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கும் சகல பொறுப்புக்களையும் மந்திரி மண்டலத்தார் மாமல்லருக்கு அளித்திருக்கிறார்கள். நாளை முதல் மாமல்லர்தான் சக்கரவர்த்தி'' என்றார் மகேந்திர பல்லவர்.

க்கரவர்த்தி ஆயனரிடம் சற்றுக் கடுமையான குரலில் கூறி வந்த மொழிகளைக் கேட்டுக் கவலையும் பயமும் கொண்டிருந்த சிவகாமி, அவருடைய கடைசி வார்த்தைகளைக் கேட்டதும் அளவில்லாத குதூகலம் அடைந்தாள். அவளுடைய மனத்தில் பலவித இன்பகரமான எண்ணங்கள் பொங்கித் ததும்பின. அவற்றுள் முக்கியமானது மாமல்லர் இப்போது போர்க்களத்துக்குப் போகவில்லை என்பதுதான். அதனோடு, சக்கரவர்த்தியும் போய் விடுகிறார். மாமல்லர் சக்கரவர்த்திக்குரிய சர்வாதிகாரங்களுடன் இருக்கப் போகிறார். இனி அவரும் தானும் அடிக்கடி சந்திப்பதற்குத் தடையொன்றும் இராது! தாமரைக் குளக் கரையில் மாமல்லரைச் சந்தித்து அளவளாவுவதைப்பற்றிய பகற் கனவுகள் சிவகாமியின் உள்ளத்தில் எழுந்தன. முகத்தில் அவளை அறியாமல் முறுவல் தோன்றியது. ஆசை ததும்பிய கண்களின் ஓரத்தினால் மாமல்லரை அவள் பார்த்தாள். ஆனால், ஐயோ! இதென்ன? அவருடைய கருணை ததும்பும் முகத்தில் இப்போது ஏன் இந்தக் கடுகடுப்பு? தன்னை ஏன் அவர் திரும்பிப் பார்க்கவில்லை? ஒரு வேளை தான் அவ்விடம் வந்ததே அவருக்குப் பிடிக்கவில்லையோ?

பின்னரும் இரண்டு மூன்று தடவை சிவகாமி மாமல்லரின் முகத்தை ஆவலுடன் நோக்கினாள். அவர் அவள் பக்கம் பார்க்கவே இல்லை. நேற்றுத் தாமரைக் குளத்தில் அகன்ற கண்களால் விழுங்கி விடுபவர் போல் தன்னைப் பார்த்தவர், பின்னர் வீட்டிலே சக்கரவர்த்தியும் ஆயனரும் பேசிக் கொண்டிருந்த போது அடிக்கடி கண்களினாலே தன்னுடன் இரகசியம் பேசியவர், இப்போது தன்னைப் பார்க்கவும் விரும்பாதவர் போல் இருப்பதன் காரணம் என்ன? சிவகாமியின் கண்களில் கண்ணீர் ததும்பும் போலிருந்தது. அவள் விரைவாக அங்கிருந்து அப்பால் சென்று ஒரு பாறையின் பின்னால் ஒதுங்கி நின்றாள்.

ஆனால், நரசிம்மருடைய மனநிலை உண்மையில் எவ்வாறு இருந்தது? ஆம்; அவர் கோபம் கொண்டுதானிருந்தார். ஆனால் யார்மீது என்பதை நாம் அறியோம். அது நரசிம்மருக்கே தெரிந்திராத போது நமக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

மாமல்லருடைய உள்ளத்திலே சிவகாமியிடம் பிரேமை பொங்கிக் கொண்டிருந்தது. சிவிகையிலே அவளுடைய திவ்வியவதனத்தைப் பார்த்ததும் அவருக்கு எல்லையில்லாத குதூகலம் ஏற்பட்டது. உடனே ஓடிச் சென்று அவளை வரவேற்க வேண்டுமென்றும், கையைப் பிடித்துச் சிவிகையிலிருந்து இறக்கிவிட வேண்டுமென்றும் ஆவல் பொங்கிற்று. அதெல்லாம் முடியாமற் போகவே, அவரது ஆசை கோபமாக மாறியது. அந்தக் கோபமானது எல்லாவற்றையும் எல்லாரையும் தழுவி நின்றது. பெரிய சாம்ராஜ்யத்துக்கு உரிமையுடன் பிறந்த தமது பிறப்பின் மேலேயே கோபங் கொண்டார். 'எதற்காகச் சக்கரவர்த்தியின் அரண்மனையிலே நாம் பிறந்திருக்க வேண்டும்? ஏழைச் சிற்பியின் மகனாக ஏன் பிறந்திருக்கக் கூடாது?' என்று எண்ணினார்.

தாம் போர்க்களத்துக்குப் போகப்போவதில்லை என்று தந்தை சொன்னதும் சிவகாமியின் முகத்தில் பூத்த புன்முறுவல் அவருடைய கோபத்துக்குத் தூபம் போட்டது போலாயிற்று. போர்க்களத்துக்குப் போகாமல் அரண்மனையில் உட்கார்ந்திருப்பது அவமானம் என்பதை அவள் உணரவில்லை! போர்க்களத்துக்குப் போகாவிட்டாலும் அவளை அடிக்கடி பார்க்கவாவது முடியப்போகிறதா? அதுவும் இல்லை. காஞ்சிக் கோட்டையை விட்டு வெளிக் கிளம்பக்கூடாது என்று தந்தை வாக்குறுதி வாங்கிக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் அறியாமல் சிவகாமி புன்னகை பூத்து மகிழ்கிறாள்!

இம்மாதிரி எண்ணங்களினால் நரசிம்மருடைய கோபம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு வந்தது.

மனோலோகத்தில் இந்த நாடகம் நடந்து கொண்டிருக்கையில், சக்கரவர்த்தியும் ஆயனரும் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

பேசும்போதே தம்முடைய முகத்தையும் மாமல்லருடைய முகத்தையும் ஆயனர் மாறி மாறி ஏறிட்டுப் பார்ப்பதைக் கவனித்த சக்கரவர்த்தி, ''ஆயனரே! ஏதாவது கோரிக்கை உண்டா? என்னிடமோ மாமல்லரிடமோ தெரியப்படுத்த வேண்டியது ஏதாவது இருக்கிறதா?'' என்று வினவினார்.

ஆயனர் தயங்கித் தடுமாறி, ''ஆம் பல்லவேந்திரா! எனக்கு ஒரு பொருள் வேண்டும்! அதைத் தங்களிடம் யாசிப்பதா, குமார சக்கரவர்த்தியிடம் கேட்பதா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்,'' என்றார்.

மகேந்திரவர்மர் புன்னகையுடன், ''இன்றைக்கு என்னையே கேட்கலாம். நாளைக்கு நான் படையுடன் காஞ்சியிலிருந்து கிளம்பிச் சென்ற பிறகு என்ன வேண்டுமோ அதைக் குமாரரிடம் கேட்கலாம்!'' என்றார்.

''பிரபு, எனக்கு ஒரு குதிரை வேண்டும்!''

''ஆ! என்ன கேட்டீர்?''

''நல்ல குதிரையொன்று வேண்டும்!''

''குதிரையா? குதிரை வேண்டும் என்றா கேட்டீர்? ஆயனரே! அதைக் காட்டிலும் என்னுடைய உயிரை நீர் கேட்டிருக்கலாம். இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தையே கேட்டிருக்கலாம்! நன்றாய்க் குதிரை கேட்டீர் ஆயனரே! தென்னாடு என்றும் கண்டிராத மகா பெரிய யுத்தம் வந்திருக்கிறது என்று உமக்குத் தெரியாதா! காஞ்சியிலிருந்து தினந்தோறும் எத்தனை தூதர்கள் நாலா பக்கங்களுக்கும் போக வேண்டியிருக்கும் என்று தெரியாதா? குதிரையைத் தவிர வேறு ஏதாவது கேளும்!'' என்று சக்கரவர்த்தி சரமாரியாகப் பொழிந்து நிறுத்தினார்.

மகேந்திர பல்லவர் இவ்வளவு படபடப்புடன் பேசிக் கேட்டு ஆயனர் அறியாதவராதலால் மிரண்டு ஸ்தம்பித்து நின்றார்.

''ஓஹோ! உமக்கு வேறு ஒன்றும் வேண்டாம்; குதிரைதான் வேண்டும் போலிருக்கிறது. பல்லவ சாம்ராஜ்யத்தின் மகா சிற்பி ஒரு குதிரையை யாசித்தார், அதை மகேந்திர பல்லவன் கொடுக்கவில்லை என்ற பழிச்சொல் எனக்கு வேண்டாம். குதிரை தருகிறேன்; ஆனால், எதற்காக என்று மட்டும் சொல்லும். நீரும் சிவகாமியும் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய சிவிகைகளும் சிவிகை தூக்கும் ஆட்களும் இருக்கிறார்கள் அல்லவா? பின் குதிரை எதற்கு?'' என்று சக்கரவர்த்தி கேட்டு நிறுத்தினார்.

ஆயனர் சற்றுத் தைரியமடைந்து, ''பல்லவேந்திரா! மிகவும் முக்கியமான ஒரு காரியத்தை முன்னிட்டுத்தான் கேட்டேன். ஆனால், அதனாலே யுத்த காரியங்கள் தடைப்படுவதாயிருந்தால்...'' என்று நிறுத்தினார்.

''அந்த முக்கியமான காரியம் என்ன? எனக்குத் தெரியலாமல்லவா? அல்லது ஏதேனும் இரகசியமா, ஆயனரே?''

''பிரபு! இரகசியந்தான்! ஆனால், தாங்கள் அறியக்கூடாத இரகசியம் அல்ல. அஜந்தா வர்ணச் சித்திரங்களின் இரகசியத்தை அறிய வேண்டுமென்று எத்தனையோ தடவை நாம் பேசிக் கொண்டதில்லையா? அந்த வர்ண இரகசியத்தை அறிந்தவர் ஒருவர் நாகார்ஜுன பர்வதத்தில் உள்ள புத்த சங்கிராமத்தில் தற்சமயம் இருக்கிறார்.....''

''இதை முன்னமே ஏன் சொல்லவில்லை, ஆயனரே? அவ்வளவு முக்கியமான காரியமென்று தெரிந்திருந்தால், ஆட்சேபமே சொல்லியிருக்கமாட்டேனே? — அஜந்தாவின் அற்புதச் சித்திரங்களை நேரில் போய்ப் பார்த்து வரவேண்டுமென்ற ஆசையினால் வாதாபி புலிகேசியுடன் சிநேகம் செய்து கொள்ள வேண்டுமென்று கூட ஒரு காலத்தில் எண்ணியிருந்தேன். அதெல்லாம் பகற்கனவாய்ப் போய்விட்டது — போகட்டும், குதிரை அவசியம் தருகிறேன். ஆயனரே! குதிரை மட்டும் போதுமா, இன்னும் ஏதாவது வேண்டுமா?''

''பல்லவேந்திரரின் ரிஷப இலச்சினை பதித்த பிரயாணச் சீட்டும் வேண்டும், இது யுத்த காலமல்லவா?''

''அதுவும் தருகிறேன். இவ்வளவு முக்கியமான காரியத்துக்கு யாரை அனுப்புவதாக உத்தேசம், ஆயனரே? ஒருவேளை நீரே போவதாக உத்தேசமா?''

''எனக்குக் குதிரை ஏறவே தெரியாது, பிரபு! என்னுடைய சீடன் ஒருவனை அனுப்புகிறேன்.''

''பகைவர் படைகள் வரும் வழியிலே அவன் போக வேண்டியிருக்குமே? கையில் நல்ல ஆயுதம் எடுத்துப் போகவேண்டும். இதோ இந்த வேலை அவனிடம் கொடுத்து அனுப்புங்கள்!'' என்று கூறிச் சக்கரவர்த்தி, நரசிம்மரிடமிருந்து தாம் வாங்கி வைத்திருந்த வேலை நீட்டினார்.

ஆயனர் சற்றுத் தயங்கி நிற்கவே, ''ஏன் தயக்கம்? இந்த வேல் நீர் அனுப்பப் போகும் வாலிபனுடைய வேல்தான்! மதயானையின் கோபத்திலிருந்து உம்மையும் சிவகாமியையும் பாதுகாத்த ஆயுதந்தான்; பரஞ்சோதி இதை வாங்கிக்கொள்ள ஆட்சே



பிக்க மாட்டான்'' என்றார் சக்கரவர்த்தி.

இதைக் கேட்ட ஆயனர் மட்டுமல்ல — நரசிம்மரும் சிவகாமியுங்கூட ஆச்சரியக் கடலில் மூழ்கினார்கள்.

ஆயனர் தட்டுத் தடுமாறி, ''பல்லவேந்திரா! தங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்றார்.

''புத்த பகவான் என் கனவிலே வந்து சொன்னார்! அன்று உம் வீட்டில் தம்முடைய சிலைக்குப் பின்னால் ஒளிந்திருந்தவர்களைப் பற்றியும் புத்தர் எனக்குக் கூறினார். ஆயனரே! பல்லவ சக்கரவர்த்தியின் கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டாமல் பல்லவ சாம்ராஜ்யத்தில் எதுவும் நடக்க முடியாது என்று உமக்குத் தெரியாதா?''

உடனே ஆயனர், கைகூப்பி வணங்கி, ''பல்லவேந்திரா! நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் மன்னிக்க வேண்டும். சித்திரக் கலையில் உள்ள ஆசையினால் இந்தக் காரியத்தில் இறங்கினேன்'' என்று தொண்டையடைக்கக் கூறினார்.

''சிற்பியாரே! அஜந்தா இரகசியத்தை அறிவதில் உமக்கு எவ்வளவு ஆசையோ அவ்வளவு எனக்கும் உண்டு. திவ்வியமாய்ப் பரஞ்சோதியை அனுப்பி வையும். ஆனால், இதெல்லாம் எனக்குத் தெரிந்ததாக அந்தப் புத்த பிக்ஷுவிடம் மட்டும் சொல்ல வேண்டாம். ஏனோ தெரியவில்லை; பௌத்தர்களுக்கு என் பேரில் இல்லாத சந்தேகங்கள் எல்லாம் தோன்றுகின்றன. புத்த பகவானிடம் எனக்குள்ள பக்தியை அவர்கள் அறியவில்லை. ஆயனரே! குன்றைக் குடைந்து அமைக்கும் இந்த ஐந்து கோயில்களில் ஒன்றில் புத்த பகவானுடைய பிரம்மாண்ட சிலையொன்று செய்து வைக்கப்போகிறேன். அதைப்பற்றித்தான் நீர் வரும் போது மாமல்லரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்!'' என்றார் சக்கரவர்த்தி.

இவ்விதம் இங்கு ரஸமான சம்பாஷணை நடந்து கொண்டிருந்த போது, பாறை ஓரத்தில் சற்று மறைவாக நின்று இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமியின் உள்ளத்தில்



பலவிதமான எண்ணங்கள் அலையெறிந்து எழுந்தன.

'இந்தச் சக்கரவர்த்திதான் எவ்வளவு சதுரராயிருக்கிறார்! புத்த பிக்ஷுவைப்பற்றி மாமல்லரிடம் நாம் எச்சரிக்கை செய்ய வேண்டுமென்றிருக்க, இவருக்கு ஏற்கெனவே எல்லாம் தெரிந்திருக்கிறதே! இவரிடம் எதையும் மறைத்து வைக்க முடியாது போலிருக்கிறதே! ஒரு வேளை நம்முடைய இரகசியத்தையும் இவர் அறிந்திருப்பாரோ? அதனாலேதான் ஒருவேளை குமார சக்கரவர்த்தி நம்மிடம் இவ்வளவு பாராமுகமாக இருக்கிறாரோ? நாம் ஏதேனும் தவறு செய்து விட்டோமோ?...'

இவ்விதம் எண்ணாததெல்லாம் எண்ணி அவள் உள்ளம் ஏங்கிற்று./ விரைவிலே குமார சக்கரவர்த்தியைத் தனிமையில் பார்த்து அவருடைய கோபத்துக்குக் காரணம் தெரிந்து கொண்டாலன்றி, அவளுக்கு மனச்சாந்தி ஏற்படாதென்று தோன்றியது.

தற்செயலாகச் சிவகாமியின் பார்வை

கீழே தரையில் கிடந்த ஒரு காவிக் கட்டியின் மேல் விழுந்தது. சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று. அந்தக் காவிக் கட்டியைக் குனிந்து எடுத்துக் கொண்டு பாறையில் சித்திரம் வரையலானாள்.

குளத்தின் தண்ணீருக்கு அடையாளமாக அலையைப் போன்ற இரு கோடுகளை இழுத்தாள். அதன்மேல் ஒரு தாமரைப் பூவை வரைந்தாள். பக்கத்தில் இரண்டு தாமரை மொட்டுகளையும் போட்டாள். குளத்தின் கரையிலே ஒரு மான் குட்டியின் சித்திரத்தை எழுதினாள்.

எழுதும்போதே கடைக்கண்ணால் பார்த்து, நரசிம்மவர்மர் தன்னைக் கவனிப்பதைத் தெரிந்து கொண்டாள்.

சித்திரம் எழுதி முடித்ததும் சிவகாமியின் மனத்தில் அமைதி ஏற்பட்டது. அந்தச் சித்திரத்திலடங்கிய செய்தியை நரசிம்மவர்மர் கட்டாயம் தெரிந்து கொள்வார். மற்றவர்களுக்கோ அதில் அர்த்தம் ஒன்றும் இராது. ஏதோ கிறுக்கியிருக்கிறது என்றுதான் எண்ணிக்கொள்வார்கள்! குமார சக்கரவர்த்திக்குத் தன்னிடம் அன்பு உண்டென்பது உண்மையானால், இந்தச் சித்திரத்தைப் பார்த்துவிட்டு அவசியம் அவர் தாமரைக் குளத்துக்கு வந்து சேருவார்.

அன்று மாலை சக்கரவர்த்தியும் குமாரரும் குதிரைகளின் மேல் ஏறிக் காஞ்சிக்கு இராஜபாட்டை வழியாகக் கிளம்பினார்கள். அந்தப் பாதை மத்தியானம் அவர்கள் வந்திருந்த ஐந்து குன்றுகளின் ஓரமாகத்தான் சென்றது. அவ்விடத்திற்கு வந்ததும் நரசிம்மர் சற்றுப் பின் தங்கினார். சிவகாமி சித்திரம் எழுதிய பாறைக்கு அருகில் வந்ததும் குதிரையை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினார். அங்கே எழுதியிருந்த சித்திரத்தைப் பார்த்ததும் அவருடைய முகம் அந்தத் தாமரையைப் போலவே மலர்ச்சியடைந்தது. தரையில் கிடந்த அதே காவிக் கட்டியை அவரும் எடுத்து மானுக்கும் தாமரைக்கும் நடுவில் ஒரு வேலின் சித்திரத்தை எழுதினார்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

மலை வழியில்

சென்ற அத்தியாயத்தில் கூறிய சம்பவம் நிகழ்ந்து, நாலு தினங்களுக்குப் பிறகு பரஞ்சோதி போர் வீரனைப் போல் உடை தரித்து, கையில் வேல் பிடித்து, அழகிய உயர்சாதிப்புரவியின் மேல் அமர்ந்து, மலைப் பாதையில் தன்னந் தனியாகப் போய்க்கொண்டிருந்தான்.

சூரியன் அஸ்தமிக்க இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதுதான் இருந்தது. எனினும், அந்த மலைப் பிரதேசத்து மாலை வெயில் அவனுடைய இடது கன்னத்தில் சுளீரென்று அடித்தது.

பகல் நேரம் எல்லாம் தகிக்கும் வெயிலில் பிரயாணம் செய்து பரஞ்சோதி களைத்துப் போயிருந்தான். குதிரையும் களைப் படைந்திருந்தது. எனவே, குதிரையை மெதுவாகச் செலுத்திக் கொண்டு சென்றான்.

குதிரை மெல்ல மெல்ல அம்மலைப் பாதையில் ஏறி மேலே சென்று கொண்டிருக்கையில், பரஞ்சோதியின் உள்ளம் அடிக்கடி பின்னால் சென்று கொண்டிருந்தது. சென்ற ஒரு வார காலத்தில் அவன் அடைந்த அதிசயமான அனுபவங்கள் எல்லாம் திரும்பத் திரும்ப அவனுக்கு ஞாபகம் வந்து கொண்டிருந்தன.

காஞ்சி நகரில் புத்த பிக்ஷுவுடன் பிரவேசித்த அன்றிரவு நடந்த சம்பவங்கள் நினைவு வந்த போதெல்லாம் அவை உண்மையில் நிகழ்ந்தவைதானா அல்லது கனவிலே நடந்த சம்பவங்களா என்று பரஞ்சோதி அதிசயித்தான். பன்னிரண்டு நாட்களுக்கு முன்னால் திருச்செங்காட்டாங்குடியிலிருந்து கால்நடையாகக் கிளம்பிய பட்டிக்காட்டுச் சிறுவனா இன்று இந்த அழகான புரவியின் மேலே ஏறிச் செல்பவன் என்று கூட அவன் ஆச்சரியப் பட்டான்.

வெயிலின் வேகத்தினால் வியர்வையைத் துடைக்க வேண்டியிருந்த போதெல்லாம் பரஞ்சோதிக்கு தமிழகத்துச் சாலைகளின் அழகும் வசதிகளும் ஞாபகத்துக்கு வந்து கொண்டிருந்தன. சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் சாலை ஓரங்களில் பெரிய விருட்சங்கள் அடர்த்தியாய் வளர்ந்து, குளிர்ந்த நிழல் தந்து கொண்டிருக்கும். சாலைகளின் இருபுறத்திலுமுள்ள வயல்களில் பசுமையான நெற் பயிர் இளந்தென்றலில் அசைந்தாடும். முதிர்ந்த பயிர்கள் கதிரின் பாரம் தாங்க மாட்டாமல் வயல்களில் சாய்ந்து கிடக்கும்.

ஆங்காங்கே பசுமையான தென்னந் தோப்புகளும் மாந்தோப்புகளும் கண்குளிரக் காட்சி தந்து கொண்டிருக்கும். வாழைத் தோட்டங்களையும் கரும்புத் தோட்டங்களையும் கண்ணால் பார்த்தாலே நாவறட்சி தீர்ந்து தணியும்.

ஆம்; வழிப் பிரயாணத்தின் போது தாகம் எடுத்துத் தவிப்பதென்பது அங்கெல்லாம் கிடையவேகிடையாது. தாமரையும், செங்கழு நீரும், நீலோற்பலமும் பூத்த குளங்களுக்குக் கணக்கேயில்லை. ஆறுகளும் சிற்றாறுகளும் சின்னஞ்சிறு வாய்க்கால்களும் அடிக்கொன்றாக வந்து கொண்டிருக்கும். இருபுறமும் பசுமையான செடி கொடிகள் படர்ந்த சிறு வாய்க்கால்களில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தால் அது ஓர் அழகு; தண்ணீர் இன்றி வாய்க்கால் வறண்டிருந்தால் அது இன்னொரு வகை அழகு. வறண்ட வாய்க்கால்களின் சிறு மணலில் நடப்பதைப் போன்ற இன்பம் வேறென்ன உண்டு? அப்படி நடக்கும் போது இரு கரைகளிலும் ஆங்காங்கே படர்ந்துள்ள காட்டு மல்லிகைக் கொடிகளில் பூத்த மலர்களிலிருந்து வரும் நறுமணம் எவ்வளவு மனோகரமாக இருக்கும்?

அதற்கிணையான இன்பம் இன்னொன்று சொல்ல வேண்டுமானால், உச்சி வேளையில் ஆலமரங்களும் வேப்ப மரங்களும் தழைத்து வளர்ந்த இராஜ பாட்டைகளில் பிரயாணம் செய்வதுதான். இந்தப் பங்குனி மாதத்தில் சாலை ஓரத்து ஆலமரங்களிலே புதிய இளந்தளிர்கள் 'பளபள' வென்று மின்னிக் கொண்டிருக்கும். வேப்ப மரங்கள் பூத்துக் குலுங்கும்! மாமரங்கள் புதிய தளிர்விடும் அழகைத்தான் என்னவென்று சொல்ல? ஒரு நாளைக்கு மாமரம் முழுவதும் கருநீல நிறம் பொருந்திய இளந்தளிர்கள் மயமாயிருக்கும்; மறு நாளைக்குப் பார்த்தால், கருநீல நிறம் இளஞ்செந்நிறமாக மாறியிருக்கும். அதற்கு அடுத்த நாள் அவ்வளவு தளிர்களும் தங்கநிறம் பெற்றுத் தகதகவென்று மின்னிக் கொண்டிருக்கும்.

இப்பேர்ப்பட்ட இயற்கை இன்பங்களை அளித்த இறைவனுடைய திருப்புகழை இன்னிசையிலே அமைத்து, மரக் கிளைகளில் ஊஞ்சலாடும் பூங்குயில்கள் இடைவிடாமல் பாடிக் கொண்டிருக்கும்.

திருச்செங்காட்டாங்குடியிலிருந்து காஞ்சிக்கு வரும் வழியில் இம்மாதிரி இன்பக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு வந்த பரஞ்சோதி அச்சமயம் அந்தக் காட்சிகளின் அழகையோ இன்பத்தையோ அவ்வளவாக அனுபவிக்கவில்லை.

இப்போது, எங்கே பார்த்தாலும் மொட்டைக் குன்றுகளே காணப்பட்ட பொட்டைப் பிரதேசத்தில், பசுமை என்பதையே காண முடியாத வறண்ட பாதையில், அவன் பிரயாணம் செய்து கொண்டிருந்த போதுதான், சோழ மண்டலத்து வயல்களும் தோப்புகளும், தொண்டை மண்டலத்து ஏரிகளும் காடுகளும் அவன் மனக்கண்ணின் முன்னால் அடிக்கடி தோன்றி இன்பமளித்தன.

மேற்குத் திசையில் மலைகளுக்குப் பின்னால் சூரியன் மறையத் தொடங்கிய போது பரஞ்சோதி, அந்த மலைப்பாதையில் ஒரு முடுக்கில் திரும்பினான். அன்றைக்கெல்லாம் முட்புதர்களையும் கள்ளிச் செடிகளையும் தவிர வேறு எதையும் காணாமல் வந்த பரஞ்சோதிக்கு எதிரே, அப்போது ஓர் அபூர்வமான காட்சி தென்பட்டது. கண்ணுக்கெட்டிய தூரம் நெட்டையும் குட்டையுமான புரச மரங்கள் – ஆயிரம் பதினாயிரம் மரங்கள் – இலை என்பதே இல்லாமல் ஒரே பூமயமாய்க் காட்சியளித்தன. அவ்வளவும் இரத்தச் சிவப்பு நிறமுள்ள கொத்துக் கொத்தான பூக்கள். மாலைக் கதிரவனின் செங்கிரணங்கள் அந்தப் புரசம் பூக்களின் இரத்தச் செந்நிறத்தை மிகைப் படுத்திக் காட்டின.

அது அபூர்வமான அழகு பொருந்திய காட்சிதான்; ஆனால், ஒருவகை அச்சந் தரும் காட்சியுமாகும். பரஞ்சோதி பிறந்து வளர்ந்த திருச்செங்காட்டாங்குடி கிராமத்தில் தென்மேற்கு மூலையில் இருந்த மயானத்தில் சில புரச மரங்கள் உண்டு. அவை பங்குனி சித்திரையில் இவ்விதம் ஒரே செந்நிறப் பூமயமாயிருப்பதை அவன் பார்த்திருந்தான். எனவே, புரச மரங்கள் பூத்திருக்கும் காட்சியைப் பார்க்கும் போது அவனுக்கு ருத்ர பூமியின் நினைவு வருவது வழக்கம்.

இப்போது அவன் கிராமத்துக்கு எத்தனையோ தூரத்துக்கு அப்பால் தனியாகக் காட்டு வழியில் போய்க் கொண்டிருந்த போது மேற்கூறிய மயானத்தின் ஞாபகம் தோன்றி அவன் மனத்தில் பயங்கரத்தை உண்டு பண்ணிற்று. மயானத்தின் நினைவோடு பேய் பிசாசுகளின் நினைவும் சேர்ந்து வந்தது. மற்ற விஷயங்களில் மகா தைரியசாலியான பரஞ்சோதிக்குப் பேய் பிசாசு என்றால் பயம் அதிகம். 'இன்

றைக்கு இந்தக் காட்டு வழியே இருட்டிய பிறகும்போக வேண்டுமே!' என்று நினைத்த போது அவனுடைய நெஞ்சையும் வயிற்றையும் என்னவோ செய்தது. அதோ அந்த இரண்டு மலைகளும் கூடுகிற இடத்தில் தான் அன்றிரவு தங்க வேண்டிய சத்திரம் இருப்பதாக அவன் அறிந்தான். அங்கே போய்ச் சேருவதற்குள்ளே இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலாகி விடலாம். நிலா வெளிச்சமே இராது. முன்னிருட்டுக் காலம். 'அடடா! வழியிலே ஏன் இவ்வளவு தாமதித்தோம்?' என்று எண்ணியவனாய்ப் பரஞ்சோதி குதிரையை வேகமாய்ச் செலுத்த முயன்றான். ஆனாலும் பகலெல்லாம் பிரயாணம் செய்து களைத்திருந்த குதிரை எவ்வளவுதான் வேகமாய்ப் போய்விடக் கூடும்?

நிர்மானுஷ்யமான அந்தமலைப்பிரதேசம் உண்மையில் அச்சத்தைத் தருவதாய்த்தான் இருந்தது. பட்சிகள் மிருகங்கள் கூட அங்கே காணப்படவில்லை. இருட்டிய பிறகு நரிகள் ஊளையிட ஆரம்பிக்கும்; பயங்கரத்தை அவை இன்னும் அதிகப்படுத்தும்.

நேற்றெல்லாம் பரஞ்சோதி நேர் வடக்கே சென்ற விசாலமான இராஜ பாட்டையில் பிரயாணம் செய்தான். அதன் ஜன நடமாட்டமும், குதிரைகளின் போக்குவரவும் அதிகமாயிருந்தன. பாதையில் பல இடங்களில் அவன் நிறுத்தப்பட்டான். சக்கரவர்த்தி தந்திருந்த பிரயாண இலச்சினையை அவன் அங்கங்கே காட்டிக் கொண்டு போக வேண்டியிருந்தது.

இன்று காலையிலே இராஜபாட்டையை விட்டு மலைப் பாதையில் திரும்பிய பிறகு அத்தகைய தொந்தரவு ஒன்றுமில்லை. ஆனால் இப்போது பரஞ்சோதிக்கு ஒரு பெரிய குதிரைப் படையே அந்த வழியில் வரக் கூடாதா என்று தோன்றியது.

ஆ! அது என்ன சப்தம்! குதிரைக் குளம்படியின் சப்தம் போலிருக்கிறதே! ஆம்; குதிரைதான் பின்னால் வந்து கொண்டிருக்கிறது. வருகிறது யாராயிருக்கும்? யாராயிருந்த போதிலும் நல்லதுதான், இருட்டுக்கு வழித்துணையாயிருக்குமல்லவா?

வருகிறது ஒரே குதிரையா? பல குதிரைகளா? பரஞ்சோதி தன் குதிரையை நிறுத்தி விட்டுக் காது கொடுத்துக் கேட்டான். சட்டென்று சப்தம் நின்றுவிட்டது. ஒருவேளை வெறும் பிரமையோ? யாராவது வரக் கூடாதா என்று அடிக்கடி எண்ணியதன் பயனோ?

பரஞ்சோதி மேலே குதிரையைச் செலுத்தினான். மறுபடியும் பின்னால் குதிரை வரும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை. மலைப்பாதை வளைந்து வளைந்து சென்றதனால் குதிரை சமீபத்தில் வந்தாலும் அதைத் தான் பார்க்க முடியாது.

இதற்குள்ளே சூரியன் அஸ்தமித்து நாலாபுறமும் இருள் சூழ ஆரம்பித்து விட்டது.

அதிகவளைவு இல்லாமல்பாதை நேராகச் சென்ற இடத்துக்கு வந்தபோது பரஞ்சோதி குதிரையைச் சற்று நேரம் வேகமாக விட்டுக் கொண்டுபோய்ச்சட்டென்றுநிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் ஒரு குதிரை வந்து கொண்டிருந்தது. அதன் மேல் ஆள் இருப்பதும் தெரிந்தது. பரஞ்சோதியின் குதிரை நின்றதும் அவனும் தன் குதிரையை நிறுத்தினான்.

பரஞ்சோதிக்குச் சொல்ல முடியாத கோபம் வந்தது. குதிரையை லாகவமாய்த் திருப்பிப் பின்னால் நின்ற குதிரையை நோக்கி விரைவாகச் சென்றான். அப்பொழுது கையெழுத்து மறையும் நேரம்.

(தொடரும்)

பாலைவனச் சுவடுகள்...



ரகு மூட்டுவலியால் அவதிப்படும் தன் தாயை அழைத்துக் கொண்டு மருத்துவ மனைக்குச் சென்று கொண்டிருந்தான்.

பட்டணத்தில் படித்து வளர்ந்த இருபத்தைந்து வயது வாலிபனின் பகட்டு அவன் தோற்றத்திலில்லை. முகத்தைப் பார்த்தவுடன் நம்பச் சொல்லும் அளவுக்குப் பணிவு, தெளிவு, புன்னகை.

பால்கனியில் அமர்ந்து மோகனாவுடன் பேசிக் கொண்டிருந்த ஹேமாவின் பார்வை சட்டென்று அவன் பக்கம் திரும்பியது.

''யாருடி அது?'' — பேச்சை நிறுத்தி விட்டுக் கேட்டாள் ஹேமா.

''ம்... பக்கத்து வீட்டுப் பையன்.'' — அசட்டையுடன் கூறினாள் மோகனா.

''ஏய்... ஆள் பாக்கறதுக்கு அழகாத் தானே இருக்கான், லவ் பண்ண வேண்டியதுதானே?''

''ஹேமா, வாழ்க்கையை ஜாலியா... அனுபவிக்கணும்னு நினைக்கிறேன். என்னைத் துறவியா மாத்தணும்னு தயவு செய்து நினைக்காதே!'' என்று கைகளைக் கூப்பிக் கொண்டு கேலியாக நடித்துக் காட்டினாள்.

''ஏண்டி... ஏன் அப்படிச் சொல்றே?'' சிரிப்பினூடே கேட்டாள் ஹேமா.

''பின்ன என்னடி, இருபத்தைந்து வயசாச்சு. எம்.எஸ்.ஸி., எம்.ஃபில்., பி.எட்... முடிச்சிட்டு இப்ப பி.எச்.டி. பண்றானாம். ஆளப் பாத்தியா பட்டிக்காடு மாதிரி. கதர் வேட்டியும், சட்டையும்! இதை விட்டா இவ

கோ. கவிதாஸ்ரீ

னுக்கு வேற எந்த டிரஸ்ஸும் தெரியாது. அவங்க அம்மாவுக்கு மூட்டுவலி, வீட்டுல பாதி வேலைக்கு மேல இவன்தான் செய்யறான். அவங்க அப்பா தாகூர் மாதிரி இருப்பார். ரிட்டையர்டு டிரைவர். மார் எரிச்சல்னு சொல்லுவார். அது என்ன நோய்னே எனக்குத் தெரியாது. இவனுக்கு ஹைட்ரோசில் கம்ளையிண்ட். நோய் இத்யாதியே இவ்வளவு."

"அப்ப ஒரு ஆஸ்பிட்டலே தேவலைன்னு சொல்லு."

"அது மட்டுமில்லே. இவங்க வீட்ல இருக்கிற இரண்டு அண்ணன் தம்பிகளும் வேலையில்லாப் பட்டதாரிங்க. ஆனா பட்டம் மட்டும் பெரிசா இருக்கும், பட்டத்துக்கு இருக்கற வால் மாதிரி. டியூஷன்ல இவன் ஒரு எழுநூறு. அவனோட தம்பி ஒரு ஐந்நூறு அப்பாவோட பென்ஷன். இதுதான் குடும்ப வருமானம். ஒரு ஸ்கூல் தொடங்கறதுதான் இவங்களோட ஃபியூச்சர் பிளான். இதுக்கு நடுவில ஒன்பதாவது படிக்கற ஒரு தங்கை. இந்தக் குடும்பத்தில வாழ்க்கைப்படறதை விட கல்யாணமே வேணான்னு இருந்துடுவேன்."

"அப்போ நீ வாழப் போற குடும்பம் எப்படி இருக்கணும்னு நினைக்கறே?" — தெரிந்து கொள்ளும் ஆவலில் கேட்டாள் ஹேமா.

"முதல்ல தேவை தனிக் குடும்பம். தனி வீடு, ஒரு கார். அதற்கேற்றாற்போல் வீட்டுல வசதி, கல்யாணமாகி இரண்டு வருஷம் வாழ்க்கையை ஜாலியா எஞ்ஜாய் பண்ணிட்டு, அதற்குப் பிறகு குழந்தையைப் பெத்துக்கிட்டு பிக்கல் பிடுங்கல் இல்லாம வாழணும். இது மாதிரியான வாழ்க்கையைக் குடுக்கிறவனைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன். அதை விட்டுட்டு இவனை மாதிரி ஆளைப் பண்ணிக்கிட்டா இவனோட வீட்டுக்கு நர்ஸ் கம் வேலைக்காரியாத்தான் இருக்கணும். என்னை மனைவியா நடத்தத் தெரியுமா இவனுக்குங்கறதே எனக்குச் சந்தேகம்."

"ஆமா அவனைப் பிடிக்கலேங்கறே, ஆனா இவ்வளவு நியூசும் எப்படித் தெரிஞ்சி வச்சிருக்கே?"

"அதுவா... பொழுது போகலேன்னா மாடியில அவன் வீட்டுப் பக்கமா உட்கார்ந்தேன்னா போதும். லைஃப் பத்தி இவனுங்க தினமும் பேசறதைக் கேட்டுக்கிட்டே பொழுதைக் கழிச்சிடுவேன்."

"லைஃபை ரொம்ப பிராக்டிகலா திங் பண்ணி முடிவு பண்ணி வச்சிருக்கேடி. யூ ஆர் ரியலி கிரேட். சரிசரி, டைம் ஆயிடுச்சி... நான் கிளம்பறேண்டி."

இருவரும் எழுந்தனர்.

"மோகனா..."

"இதோ வந்துட்டேன் டாடி."

தோழியை வழியனுப்பி வைத்து விட்டு வந்து, தந்தையின் முன் நின்றாள்.

"என்ன டாடி?"

செருமிக் கொண்டு ஆரம்பித்தார் —

"உனக்கு இதுநாள் வரைக்கும் வாழ்க்கைல பிரச்னைன்னு ஏதாச்சும் இருந்திருக்காம்மா?"

"பிரச்னையா?! வார்த்தையில மட்டுந்தான் கேள்விப்பட்டிருக்கேன் டாடி. நடைமுறையில இதுவரைக்கும் பிரச்னை இல்லைன்னா, அதுக்கு நீங்கதான் காரணம். அந்த அளவுக்கு என்னை நீங்க வளர்த்திருக்கீங்க டாடி."

"ஏன் அப்படி வளர்த்தேன்னு இப்ப வருத்தப்படறேம்மா."

"ஏன் டாடி?"

பதற்றத்துடன் கேட்டாள்.

"நீ உன்னோட ஃபிரண்ட் கூட பேசிட்டு இருந்ததை நான் கேட்டுக்கிட்டுத்தாம்மா இருந்தேன்."

"நாங்க பேசினதில என்ன டாடி தப்பு?"

"நான் ஒரு காலத்தில படிக்கறதுக்குப் பணமில்லாம அந்த வெங்கடாசலபதியில்ல, அதுதான் நீ கல்யாணம் செஞ்சிக்கணும்னு அபிப்ராயப்பட்டிருக்கியே உன்னோட முறைப் பையன் கிஷோரோட அப்பா, அவர்கிட்டே எத்தனை நாள் கை கட்டி நின்னுருக்கேன்னு தெரியுமாமா? உன்கிட்ட இதுவரைக்கும் ஏன் சொல்லலைன்னு நீ கேக்கலாம். குழந்தைகளை வளர்க்கும் போது பெத்தவங்களோட கஷ்டத்தைச் சொல்லி வளர்க்கக் கூடாதுன்னு நினைச்சேன். அதோடில்லாம, இந்த உலகத்திலே ஒவ்வொருத்தரைப் பத்தியும் நீயே உன்னோட அறிவுபூர்வமாத் தெரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டேன். அதனாலதான் உன்னை இவ்வளவு வசதியாப் படிக்க வச்சேன். கடைசியில நீ வாழ்க்கையோட உண்மையான தத்துவங்களைத் தெரிஞ்சுக்கலை. பிராக்டிகலா வாழணும்ங்கற பேர்ல போலியான விஷயங்களைத் தெரிஞ்சுக்கிட்டிருக்கேன்னு இப்பத்தாம்மா தெரியுது."

"எதைப் போலின்னு சொல்றீங்கன்னு என்னால புரிஞ்சுக்க முடியலை டாடி."

"சொல்றேம்மா. இன்னைக்குப் பக்கத்து வீட்டுப் பையன் தன் தாயை வாரா வாரம் ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிக்கிட்டுப் போறாம்மா. நாளைக்கு அவன் மனைவிக்கு ஏதாவதுன்னா கண்ணுல வச்சிக்காப்பாத்துவான். ஆனா அந்தக் கிஷோர், போன மாசம் அவனோட அம்மா பெட்ல இருந்தப்ப திரும்பிக் கூடப் பார்க்காம வெளியூர்ல வேலைன்னு பத்து நாளும் ஊட்டியில ரூம்

எடுத்துக்கிட்டுத் தங்கியிருக்கான். நாளைக்கு மனைவிக்குப் பிரசவம்னாக்கூட ஆபீஸ் பியூனை அனுப்பிச்சிட்டு எந்த ஓட்டல்ல தங்கியிருப்பான்னு யாருக்குத் தெரியும்மா?

''அவனோட அண்ணன் தன் பெண்டாட்டியை அடிச்சுப் போன வாரம் அம்மா வீட்டுக்கு அனுப்பியிருக்கான். காரணம் கேட்டா, அவனுக்கு பிரமோஷன் ஆகியிருக்காம். அதனால மாமியார் வீட்டை வித்துக் கார் வாங்கிக் கொடுக்கணும்னு அனுப்பியிருக்கானாம்... கல்யாணமாகி நாலு வருஷத்துக்கப்புறம். அதுக்கு அந்தக் குடும்பத்தில எல்லோரும் உடந்தையாம்!''

தந்தை தொடர்ந்தார்.

''பக்கத்து வீட்டு ரகுவுக்கு வாழ்க்கைப் பட்டேன்னா வாழ்க்கையில நிறையப் பொறுப்பிருக்கும். அதுதான் உனக்கு பிரச்னைன்னு நீ நினைக்கறே. அவனோட அம்மா, அப்பாவுக்குப் பணிவிடை, தம்பிக்கு கல்யாணம், தங்கைக்குக் கல்யாணம். பிறகு அவன் வாழ்க்கையில முன்னுக்கு வர்றதுக்கு எடுத்துக்கற முயற்சிக்கு உறுதுணையா இருக்கணும். இதெல்லாம் தான் நீ பிரச்னையா நினைக்கறே! இந்தப் பொறுப்புகள்லாம் நீ சரியாச் செஞ்சு நிறைவேத்தினப்புறம் உம் மனசில ஒரு பெரிய நிறைவு இருக்கும்மா. உன் வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷத்துக்கும் ஒரு பொருள் இருக்கும். அத்தனைக்கும் மேல அந்த வீட்ல, இருக்கற அத்தனை பேருக்கும் உம் மேல ஒரு நன்றி விசுவாசம் இருக்கும்மா... நான் சொல்றது பாலைவனத்தைக் கடக்கிற மாதிரி. கடக்கும் போது கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா அடியெடுத்து வைக்கும் போது ஏற்பட்ட சுவடுகள் அழியாத அர்த்தத்தை உனக்குக் காட்டும். நீ நெனைக்கிறது கடற்கரையில கொஞ்ச தூரம் நடக்கற மாதிரி. நடக்கும் போது இதமாத்தான் இருக்கும். ஆனா சுவடுகள் அடுத்த அலைல மறைஞ்சி போயிடும்மா... அதுக்காக நான் பக்கத்து வீட்டு ரகுவைத் தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்லலை. நீ இந்த உலகத்தைப் பார்க்கற பார்வையை மாத்திக்கணும்னு சொல்றேன்.''

தந்தையின் சொற்கள் அவளின் சிந்தனையைத் தூண்டிவிட்டன. தான் எவ்வளவு மேலோட்டமாகச் சில விஷயங்களைச் சிந்தித்திருக்கிறோம் என்பதை நினைத்து வருத்தப்பட்டாள்.

இரவு சாப்பிட்டு விட்டு மாடியில் தன் அறைக்குச் சென்ற போது பக்கத்து வீட்டு ரகுவைக் கவனிக்க வேண்டும் என்று ஓர் உந்துதல். மெதுவாய் எட்டிப் பார்த்தாள்.

> **ஆரோக்கியமான சமூகத்திற்கு பரஸ்பர நம்பிக்கை மிக அவசியம் என்பது போல, ஒற்றுத் தொழிலின் வெற்றிக்குப் பரஸ்பர சந்தேகம் மிக அவசியமான ஒன்று!**
>
> **— ஹெச். ஹெச். ஏ. கூப்பர்.**

COUNT DOWN — 10

செல்வமணியைத் தேடி...

சாந்தினிக்கு மூச்சுத் திணறியது.

தன்னைப் பற்றியிருந்தது வலுவான கை என்று தெரிந்தும், திமிறினாள். திமிறத் திமிற பிடி இறுகியது. அவளை அந்தக் கை இழுத்தது. தனியே தள்ளிச் செல்லப் பார்த்தது. உச்ச பயம் மின்சார வேகத்தில் சாந்தினியைத் தாக்கியது.

சற்றே முகத்தைத் திமிறி, உதடுகளைப் பிளந்து, தன் கூரிய பற்களால் அவளைப் பற்றியிருந்த உறுதியான விரல்களைக் கடித்தாள். உடனே கை அவளிடமிருந்து உதறியது. "ஓ்ஹா" என்ற ரகசியமான வேதனைக் குரல். நேரத்தை வீணடிக்காமல் சாந்தினி "ஹெல்ப்.. ஹெல்ப்" என்று கூவினாள்.

அவளைப் பிடித்திருந்தவன் தன்னால் தப்பித்து விட முடியாது என்று நினைத்திருக்க வேண்டும். அவளை முற்றிலும் உதறி விட்டு நாலு கால் பாய்ச்சலில் தப்பி ஓடினான்.

சாந்தினியின் அலறலைக் கேட்டு, முண்டாசு பனியன் ஆசாமியும், அவனைத் தொடர்ந்து அச்சுதனும் வெளிப்பட்டார்கள்.

அச்சுதனைப் பார்த்தும் சாந்தினியின் தைரியமெல்லாம் பொடிப் பொடியாய் அவள் காலடியில் சிதற அப்படியே அவன் மார்பில் சரிந்தாள். அழுகை உடைத்துக் கொண்டு கிளம்பியது.

"விக்டர், அவனைப் பிடி" என்றான் அச்சுதன். தாமதமான துவக்கம். விக்டர் ஏமாற்றத்துடன் திரும்பினான். "தப்பி விட்டான்."

"சாந்தினி, நான் இதை எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்திருந்தால் உன்னைத் தனியாக விட்டுப் போயிருக்க மாட்டேன்.. வா." — அவளுடைய கையைப் பற்றி அவன் அழுத்திக் கொடுத்தான். அவளுடைய மார்புச் சட்டையை நனைத்திருந்து அவளுடைய சூடான கண்ணீர். அவனை விட்டு நகர்ந்தால் அவளுடைய பாதுகாப்பு பறிக்கப்பட்டு விடும் என்பது போல அவள் அவனுடன் இழைந்து நடந்தாள். கனவில் பயந்த குழந்தைப் போல அவளுடைய உடல் நினைத்து நினைத்து பூகம்ப அதிர்ச்சி காட்டியது.

கோதுமை மூட்டைகளைத் தாண்டி உள்ளறைக்குள் பிரவேசித்தார்கள்.

சிறிய மர மேஜைக்குப் பின்னே அமர்ந்திருந்த மோகனன் நிமிர்ந்தார். வெளியே நடந்த சலசலப்பு அவரிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. மேஜை மீது இருந்த புதிரை விடுவிக்கும் முனைப்பிலேயே இருந்தார். நெற்றிக் கோடுகள் நெருக்கமாயின.

அவருக்கு எதிரில் இருந்த மரபெஞ்சில் அச்சுதனும், சாந்தினியும் அமர்ந்தனர்.

ஒரு வெள்ளைத் தாளில் எழுத்துக் கிறுக்கல்கள்.

திடீரென மோகனன் துள்ளி நிமிர்ந்தார்.

"யுரேக்கா" என்றார்.

சாந்தினியின் காலடியில் ஒரு கண்டெலி ஓடியது. அவள் பதறி, கால்களை உதறி உடனே தன் அச்சத்தை நினைத்து வெட்கத்துடன் சிரித்தாள்.

மோகனன் பேப்பரை அச்சுதன் புறம் நகர்த்தினார்.

"ஸிம்பிள் கோட்தான்" என்றார், "எப்படி விடுவித்தேன் என்று சொல்கிறேன், கேள். இங்கிலீஷில் மொத்தம் இருபத்தாறு எழுத்துக்கள். A யில் ஆரம்பித்து ஒவ்வோர் எண்ணாகக் கூட்டிக் கொண்டே போனால் Z என்பது இருபத்தாறாவது எழுத்தாக வரும்."

எல். கே. ஜி. மாணவனுக்குக் கூடத் தெரிந்த ஒரு விஷயத்தை ஏன் இவ்வளவு அழுத்தமாகச் சொல்கிறார் என்று அவரை ஆச்சரியமாகப் பார்த்தாள் சாந்தினி.

"அதற்குப் பதிலாக A யை இருபத்தாறாவது எழுத்தாக வைத்துக் கொண்டு ஒவ்வொரு எண்ணாகக் குறைத்துக் கொண்டே போனால் Z ஒன்றாவது எழுத்தாக வரும்."

"ஆமாம்."

"இந்த இரண்டு வரிசைகளையும் சேர்த்து

அஞ்சனா மைக்கேல்ராஜ்

விளையாடும் விளையாட்டு இது. உதாரணத்திற்கு இந்த மெஸேஜில் இருக்கும் முதல் எழுத்தை எடுத்துக் கொள்வோம். N முதல் வகை வரிசையில் இது எத்தனாவது எழுத்து? பதினான்காவது எழுத்து. இப்போது இரண்டாவது வரிசையில் அந்த எண்ணுக்கு உள்ள எழுத்து என்ன என்று பார்க்க வேண்டும்.''

"M" என்றாள் சாந்தினி.

''அதே போல் Z முதல் வகையில் இருபத்தாறாவது எழுத்து. இரண்டாவது வரிசைப்படி இருபத்தாறாவது எண்ணுக்கு எதிரே இருக்கும் எழுத்து A. இதே போல் ஒவ்வோர் எழுத்தையும் கண்டுபிடித்தால்...''

''நான் கண்டுபிடிக்கிறேன். நான் கண்டுபிடிக்கிறேன்!'' – சாந்தினி குழந்தைத்தனமான ஆர்வத்துடன் அந்தக் காரியத்தைத் தன் புறம் இழுத்துக் கொண்டாள்.

இரண்டு நிமிடங்களில் முதல் வார்த்தை கிடைத்தது.

N Z W I Z H

M A D R A S

அடுத்த மூன்று நிமிடங்களில் மூன்று வார்த்தைகளும் அமைந்தன.



NZWIZH – MADRAS
HVOEZNZMR – SELVAMANI
WZMXVI – DANCER

''தாங்க்யூ சார்...'' அச்சுதன் விறைப்பான ஒரு சல்யூட் வைத்து விட்டு, அந்தக் காகிதங்களை அள்ளிக் கொண்டான்.

கேர்னல் அருள்தாஸ் அந்தக் காகிதத்தை வேகமாகப் படித்தார்.

''மெட்ராஸ்... செல்வமணி. பாகிஸ்தான் எல்லையிலிருந்து அருகில் இருக்கும் ஏதாவது இடத்தில்தான் மணிமாறன் ஒளிந்து கொள்ள முயற்சி செய்வான் என்று நினைத்தேன். மெட்ராஸ் என்பது இங்கிருந்தே





இரண்டாயிரம் கிலோ மீட்டர் தள்ளி இருக்கிறது. அங்கிருந்து பாகிஸ்தானுக்கு அந்த டம்மித் துப்பாக்கியைக் கொடுத்தனுப்ப அவனுக்கு வசதியிருக்கும் என்றே என்னால் நம்ப முடியவில்லை.''

''ரயில்வே ஸ்டேஷன்களில் நாம் கெடுபிடி பண்ணியிருக்கும் போது, மணிமாறன் மெட்ராஸ் வரை போய் விட முடியுமா கர்னல்?''

''யூ டோண்ட் நோ. மணிமாறன் புத்திசாலி. தந்திரசாலி. எத்தனை சாமர்த்தியமாக நம் ஆபீஸர்களை ஏய்த்து விட்டுத் தப்பினான் என்பதை மறந்து விட்டாயா?'' கர்னல் அருள்தாஸ் சக்கர நாற்காலியை டெலிபோன் அருகே உருட்டிப் போனார்.

''குட் ஈவினிங் லெப்டினன்ட். அருள்தாஸ் பேசுகிறேன். மெட்ராஸிற்கு ஒரு டிக்கெட் வேண்டும். அர்ஜண்ட். இன்னும் ஒரு மணி நேரத்தில் ரெடியாகி விடுமா? தேங்க்யூ... இன்னொரு விஷயம். மோகனின் ஆஃபீஸை மாற்றி விடுங்கள். கோதுமை கோடவுன் நமக்கு இனிமேல் உபயோகப்படாது.''

''**நா**ன் போகட்டே?'' என்றான் அச்சுதன் உள்ளறையில் புறா போல் ஒடுங்கி அமர்ந்திருந்த சாந்தினியைப் பார்த்து!

''ம்?'' என்றாள், காதணிகள் அழகாகக் குலுங்க.

''நான் மெட்ராஸ் கிளம்புகிறேன். இன்னும் சற்று நேரத்தில்.''

''ம்'' என்றாள் சுரத்தில்லாமல்.

''கர்னலிருக்கும் வரை உனக்கு பயமில்லை. ஆனால் நீ பத்திரமாயிரு. இன்றைக்கு நடந்த நிகழ்ச்சி என்னை உலுக்கி விட்டது.'' அச்சுதனின் குரலில் மெல்லிய கவலை.

''நாங்கள் எப்போது மெட்ராஸ் வருவோம்?''

''இன்னும் ஒன்றிரண்டு நாட்களில், அவசியமிருந்தால்தான். நான் மணிமாறனை மடக்கி விட்டேன் என்றால் எனக்கு மெட்ராஸில் வேலை இல்லை. நானே டில்லி திரும்பி விடுவேன்...''

''மெட்ராஸில் எங்கே தங்குவீர்கள்?''

''எங்கள் உபயோகத்திற்கென்று ஒரு வீடு இருக்கிறது, சாந்தினி.''

சாந்தினி அவன் எதிர்பாராத தருணத்தில் அவனுடைய கையைப் பற்றினாள். தன் இரு கரங்களுக்கிடையில் அழுத்திக் கொண்டாள். ''ஜாக்கிரதை அச்சுதன்'' என்ற போது, அவள் குரல் மீட்டி விடப்பட்ட வீணைத் தந்தி போல் அதிர்ந்தது.

மணிமாறன் ஒரு அகலமான கொட்டாவியுடன் முழங்கால்களை உதறி, கால்களை நீட்டிக் கொண்டான். ரயில் ஜன்னல் வழியே காலைச் சூரியனின் முதல் வெப்ப முத்திரை. தொடைக்கடியில் வைத்திருந்த சின்னத் துணி பார்சலை எடுத்தான்.

அவனைச் சுற்றிலும் நெருக்கமாய்ப் பயணம் செய்து கொண்டிருந்த சக பயணிகளில் இன்னும் சிலர் காலைப் பொழுதின் சுறுசுறுப்பு தொற்றிக் கொள்ள, விழிக்க ஆரம்பித்திருந்தனர்.

தமிழ்நாடு எக்ஸ்பிரஸின் அன்ரிசர்வ்டு கம்பார்ட்மெண்டில் அவனை யாரும் கண்டு பிடித்து விட மாட்டார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

ஜலந்தரிலிருந்து கூட்ஸ் ரயிலில் பயணமானவன் டில்லி ஸ்டேஷனின் அவுட்டரில் இறங்கி சலூனில் தலைமுடி திருத்தியமைத்து சில அவசர மாற்றுடைகளை வாங்கித் துணிப்பையில் அடைத்துக் கொண்டது வரை அவனை யாரும் சந்தேகப்படாதது அவனுள் நம்பிக்கை ஊற்றைக் கிளப்பியிருந்தது.

ஆபத்தான டில்லியிலேயே அவனைக் கண்டுபிடிக்காதவர்கள் பழக்கமில்லாத மெட்ராஸிலா கண்டுபிடித்து விடப் போகிறார்கள்?

இருந்தாலும் மணிமாறன் எதிரிக்கு எந்த வாய்ப்பும் தரத் தயாராயில்லை. ஒருவேளை அவனுடைய ரகசியப் பயணம் கர்னலுக்குத் தெரிந்திருந்தாலும், இந் நேரம் சென்னை சென்ட்ரலில்தான் அவனை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் என்று அவனுக்குத் தோன்றியது. முனைப்பாகத் தேட வேண்டுமென்றால் ரயிலிலேயே தேடியிருக்க வேண்டும். துப்பாக்கியோடு எல்லாக் கம்பார்ட்மெண்ட்களிலும் நடமாடிய செக்யூரிட்டி ஆசாமி கூட அவனை ஒரு பொருட்டாகக் கவனிக்கவில்லை.

மணிமாறன் ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

திருவொற்றியூர்!

இன்னும் பத்து கிலோ மீட்டரில் சென்னை!

பரபரப்பாகத் தயாரானான்.

பேசின் பிரிட்ஜிற்கு முன்னதாகச் சிவப்பு சிக்னலுக்காக ரயில் நின்ற போது, எல்லோரையும் தள்ளிக் கொண்டு கீழே இறங்கினான். ஜல்லிக் கற்களை மிதித்து நடந்து சென்னையின் தார்ச்சாலைக்குள் பிரவேசித்தான்.

சென்னை வெயில் அச்சுதனை வறுத்தது. வியர்வை உடம்பெங்கும் கசகசத்தது. எப்பேர்ப்பட்ட அடர்த்தியான போக்குவரத்தாயிருந்தாலும் மண் புழு போல் நெளிந்து நெளிந்து முன்னேறி விடும் ஆட்டோக்கள் ஆச்சரியமாயிருந்தன.

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ், ஜி.டி. இரண்டு ரயில்களையும் சந்தித்து விட்டான். விமான நிலையத்திலும் ஆள் ஏற்பாடு செய்து கண்காணித்தாயிற்று. விரலிடுக்கு வழியே தப்பித்து விடும் தண்ணீரைப் போல மணிமாறன் எப்படியோ சென்னைக்குள் நுழைந்திருப்பான் என்று அவனுடைய உள் மனசு சொன்னது.

செல்வமணி என்று எந்த டான்ஸரைப் பற்றியும் தூதரகத்தில் குறிப்பு ஏதும் இல்லை என்று கர்னலிடமிருந்து போன் வந்து விட்டது.

அச்சுதன் ஆட்டோவிலிருந்து இறங்கினான்.

அடர்த்தியான வீடுகளுக்கு நடுவே வகிடெடுத்துப் போன சந்திற்குள் நுழைந்தான். கையிலிருந்த விலாசத்தை சரிபார்த்துப் பதினொன்றாம் இலக்க வீட்டில் மணியடித்தான்.

வேட்டியும், கட் பனியனுமாகக் கதவைத் திறந்தவர் அவனை நகரச் சொல்லி விட்டு வெற்றிலைச் சாறை வெளியே துப்பினார்.

''என்ன வேணும்? யாரு நீங்க?'' என்றார்.

''விஷ்ணு கான சபாவின் செக்ரட்டரி நீங்கள்தானே?''

''ஆமாம்.''

''உங்களுடன் இரண்டு நிமிடம் பேசலாமா?''

''உள்ளே வாங்களேன்.''

பென்சிலால் சுவரில் படம் கிறுக்கிக் கொண்டிருந்த ஒரு சிறுமி அவனைப் பார்த்துச் சிரித்தாள். காய் நறுக்கிக் கொண்டிருந்த பெண்மணி, அரிவாள் மணையையும், கத்தரிக் காய்களையும் பொறுக்கிக் கொண்டு உள்ளே போனாள்.

அவர் மடக்கு நாற்காலியைப் பிரித்துப் போட, அச்சுதன் உட்கார்ந்தான்.

''நான் செல்வமணியின் நண்பன்.''

''எந்தச் செல்வமணி?''

''டான்ஸர் செல்வமணி. அவனைப் பார்க்க வேண்டும். ஆனால் அட்ரெஸ் இல்லை. உங்களைக் கேட்டால் தெரியும் என்றார்கள்.''

''டான்ஸரா? நீங்கள் யாரைச் சொல்லுகிறீர்கள்?'' அவர் குழம்பினார் என்பதை முகத்துத் தசைகள் சிக்கலாகிக் காட்டிக் கொடுத்தன.

அழைப்பு மணி மறுபடி அடித்தது.

''ஒரு நிமிஷம்'' என்றார். மலையாளத் துண்டால் உதட்டோரச் சிவப்பைத் துடைத்துக்கொண்டு போய்க் கதவைத் திறந்தார்.

வெளியே நின்றிருந்த வேட்டி கட்டிய இளைஞன் புன்னகை செய்தான்.

''விஷ்ணு கான சபாவின் செக்ரட்டரி?''

''நான்தான்... நீங்க?''

''நான் டான்ஸர் செல்வமணியின் நண்பன். என் பெயர் மணிமாறன்.''

(தொடரும்)



''என்ன திடீர்னு மொட்டையடிச்சுக்கிட்டிருக்கீங்க?''

''தலைதீபாவளிக்கு மாப்பிள்ளை வந்துட்டுப் போனார். அதான்! 'சிம்பாலிக்கா...'!''

''நீங்க சிறுகதைகள்தானே பத்திரிகைகளுக்கு அனுப்பறீங்க... அப்புறம் ஏன் தொடர்கதையாத் திரும்பி வருதுன்னு சொல்றீங்க...?''

''ஒருநாள் கூட இடைவெளி விடாம தொடர்ந்து ஒவ்வொரு கதையாத் திரும்பி வந்துக்கிட்டு இருக்கு... அதைத்தான் சொன்னேன்!''

— ஏ.ஆர். வீரராகவன்





* மலைப்பட்டி மக்கள்: ஆஸ்பத்திரிக்குக் காவல்.

இடிந்து கொண்டிருக்கும் இலவச வீடுகள்!

சாத்தூர்த் தொகுதி எம். எல். ஏ. (தி.மு.க.)வான எஸ். எஸ். கருப்பசாமியைப் பார்ப்பதே கஷ்டம் என்கிறார்கள்...

''நம்முடைய நாட்டில் யாருக்கும் வேலை வாய்ப்புக் குறைந்து போய்விடக் கூடாது என்பதில், நமது அரசும் அரசு அதிகாரிகளும் காட்டுகிற தீவிரத்தை, மற்ற முன்னேறிய நாடுகளில் கூடப் பார்க்க முடியாதுங்க...'' என்று புதிர் போட்டார் ந. முத்துசாமிபுரத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன்.

நாம் ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தோம்.

''ஆமாங்க... உதாரணத்துக்கு எங்க காலனியையே எடுத்துக்கங்களேன்... ஆதிதிராவிடர்களான எங்களுக்கு, ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், மொத்தம் இருபத்து மூன்று வீடுகளைக் கட்டிக் கொடுத்தாங்க. 89 — ஆம் வருஷ ஆரம்பத்தில் நாங்களெல்லாம் வந்து குடியேறினோம். அப்புறம் கொஞ்ச நாளில் மழை பெய்தது. அவ்வளவுதான்! அத்தனை குடும்பங்களும் உயிர் பிழைச்சாப் போதும்னு குழந்தை குட்டிகளை இழுத்துக் கொண்டு வீட்டை விட்டு ஓட வேண்டியதாயிடுச்சு...''

''கொஞ்சம் புரியும்படியாச் சொல்லுங்களேன்...!''

''அந்த வயித்தெரிச்சலை ஏங்க கேட்கறீங்க.. மழை பெஞ்சுதா... அந்த மழையில

* நல்லிமுத்துசாமிபுரம்: இலவச வீடுகளல்ல, இடிந்த வீடுகள்...





* குல்லூர்ச் சந்தை நீர்த்தேக்கம்: பதினைந்து லட்சம் என்னவானது?

* அருப்புக்கோட்டை நகராட்சித் தலைவர்.





* அருப்புக்கோட்டை: கடுமையான குடிநீர்ப் பஞ்சம்.

* இருளாண்டி: "நாங்கள் சரியாத் தூங்கறது கூட இல்லீங்க..."





சுவத்துல இருந்த செங்கல்லெல்லாம் கரைக் கொழஞ்சு போச்சு... சுவரு ஆட்டங்கண்டா கூரை என்ன பண்ணும்? விழ ஆரம்பிச் சுட்டுது... அப்புறம் ஓடாம என்ன செய்யச் சொல்றீங்க? பிறகு ஒரு வழியா மழை விட்ட தும் என்னை மாதிரியுள்ள மூணு குடும்பம் மட்டும்தான் கடனை ஒடனை வாங்கி மறு படியும் வீட்டைக் கட்டித் தைரியமா வந்து குடியேறினோம். மத்தவங்களெல்லாம் வேறு வழியே இல்லாததால மறுபடியும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் வாழ்ந்துக்கிட்டிருக்காங்க.... இப்படி கட்டின ரண்டே வருஷத்தில வீடெல்லாம் இடிஞ்சுக்கிட்டிருந்தாத்தானே கொத் தனாரு, மேஸ்திரி, சித்தாளுங்களுக்கெல் லாம் தொடர்ச்சியா வேலை இருந்துக் கிட்டேயிருக்கும்! அதனாலதாங்க அப்படிச் சொன்னேன்... வாங்க..... எங்க வயிறு பத்திக்கிட்டு எரியறதை நீங்களே வந்து பாருங்க..." என்று காலனியைச் சுற்றிக் காட்டினார் பாலகிருஷ்ணன்.

சுற்றிப் பார்த்தோம்.

நம்முடைய பரம்பரை என்ன லேசுப் பட்டதா? இப்போதும் வெளிநாட்டுக்காரர் களெல்லாம் வந்து பார்த்து, வியந்து, மூக்கின் மேல் விரலை வைக்கிற அளவுக்கு ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியே கல் லணையைக் கட்டிக் காட்டிய கரிகால் சோழன் பரம்பரையாச்சே!

வெட்கக்கேடு! கட்டி இரண்டாண்டுகள் கூட ஆகாத நிலையில், அத்தனை வீடு களும் குட்டிச் சுவராகக் காத்திருக்கும் நிலை. "எங்கே நாங்க அசந்து தூங்கறப்போ இடிஞ்சு விழுந்துடுமோன்னு சரியாத் தூங்கறது கூட இல்லீங்க..." என்றார் இருளாண்டி என்னும் பெரியவர்.

"இது சம்பந்தமா நீங்க யார் கிட்டேயும் புகார் தரலையா பாலகிருஷ்ணன்?"

"கொடுத்தமே. ஒரு முறை எங்க ஊருக்கு

ஆர். டி. ஓ. வந்து, மக்கள் குறைகளைக் கேட்டாரு. எங்க குறைகளை எடுத்துச் சொல்லி, 'ஐயா வந்து எங்க காலனியை நேராப் பார்த்து ஏதாவது செய்யணும்'னு சொன்னோம். அவர் காதிலேயே வாங்கிக் காம போயிட்டாருங்களே....''

''எம். எல். ஏ. கிட்டச் சொன்னீங்களா?''

''அவரைப் பார்க்கறதே கஷ்டம். அப்புறம் எப்பமங்க சொல்றது?''

அடுத்து மலைப்பட்டி.

ஊருக்குள் நமது கார் நுழைந்த போது, கிராமத்து ஆண்களெல்லாம் பரபரப்போடு ஓடிவந்து நம்மைச் சூழ்ந்து கொண்டார்கள். இன்னும் சிலர் ஓடிப்போய் பூட்டிக் கிடக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தின் வாசலில் நின்று வழி மறித்துக் கொண்டார்கள்.

''ஓ.... நீங்க கல்கியிலிருந்து வர்றீங்களா? மன்னிச்சுக்குங்க... நாங்க ஏதோ அரசாங்க ஆட்கள் தான் வர்றாங்கனு நெனைச்சுட்டோம்....'' என்று விஷயத்தை விளக்க ஆரம்பித்தார் கிராம வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தலைவர் ஆர். ஜகந்நாதன்.

''எங்க மலைப்பட்டி கிராமத்தைச் சுத்திலும் சுமார் பதினைஞ்சு கிராமங்களுக்கு வசதியா ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேணும்னு அரசுக்கு மனு கொடுத்தோம். அதன்படி 18. 1. 89 முதல் எங்க கிராமத்தில ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான கட்டட வாடகை, கரண்ட் சார்ஜ் எல்லாத்தையும் கிராமம் தான் கொடுத்துக்கிட்டிருந்தது. பத்தாயிரம் ரூபா பணமும் கட்டினோம். புதுசாக் கட்டடம் கட்ட வேணாமா? அதுக்காக அஞ்சு ஏக்கருக்கும் கொஞ்சம் அதிகமாவே அரசாங்கத்துக்கு நெலத்தையும் கொடுத்தோம். எடத்தைப் பாருங்க... மெயின் ரோட்டை ஒட்டியே இருக்கு. அந்த நெலத்தில இது ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான இடம்னு போர்டு கூட எழுதி வெச்சுட்டாங்க.....

''இந்த நெலைலதான் கடந்த 31. 7. 90 ஆம் தேதி காலைல சுமார் பத்தரை மணிக்கு இரண்டு ஜீப்ல போலீஸ்காரங்களும் மாவட்ட சுகாதார அதிகாரியும் எங்க ஊரு மருத்துவமனைக்கு வந்தாங்க. 'பக்கத்துல இருக்கும் குல்லூர்ச் சந்தையிலுள்ள இலங்கை அகதிகள் முகாம்ல காலரா வந்திருக்கு. அதுக்கு வைத்தியம் பார்க்க இந்த டாக்டருங்களை அவசரமா அழைச்சுக்கிட்டுப் போறோம்'னு சொல்லி, சில பொருள்களையும் எடுத்துக்கிட்டுப் போனாங்க. அவ்வளவுதான். போனவங்க



எஸ். எஸ். கருப்பசாமி
எம். எல். ஏ.: சத்தியமா
சாத்தியமில்லை.

திரும்பி வரவேயில்லை.....

''அப்புறம் பார்த்தா பக்கத்திலிருக்கிற கூத்திப்பாறை கிராமத்தில, அந்த டாக்டருங்களும் நர்ஸுகளும் வேலை செய்யறாங்க... விசாரிச்சப்போ, மலைப்பட்டியிலிருந்து ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கூத்திப்பாறைக்கு மாத்திட்டதாச் சொல்றாங்க.... நாங்க பதறிட்டோம். ஐயாயிரத்துக்கும் மேல மக்கள் இருக்கிற மலைப்பட்டியிலிருந்து ஆயிரம் கூட ஜனத்தொகையில்லாத கூத்திப்பாறைக்கு எப்பமங்க மாத்தறது? இது நியாயமா? நாங்கதானே பணம் கட்டினோம்; நெலம் கொடுத்தோம்னு பெரிய அதிகாரிங்ககிட்டேயெல்லாம் முறையிட்டுப் பார்த்தோம். ஒண்ணும் நடக்கலை. பஸ் மறியல் செஞ்சோம். சமாதானப் படுத்துனாங்களே தவிர, நியாயம் வழங்கலை. எம். எல். ஏ. கிட்டேயும் சொல்லிப் பார்த்தோம். பிரயோஜனமேயில்லை. விசாரிச்சுப் பார்த்ததிலே, எங்க ஊரில் தி.மு.க வுக்கு அதிகமா வோட்டுக் கிடைக்காததுதான் காரணம்னு அரசல் புரசலா சேதி கெடச்சுது. அதுக்காகச் சட்டத்துக்கு விரோதமா அரசாங்கமே நடக்கலாங்களா?

''சரி, போனது போகட்டும்... இன்னும் மிச்சமிருக்கிற மருந்துகள், மருந்துவக் கருவிகளையெல்லாமாவது அவங்கவந்துஎடுத்துக்கிட்டுப் போகாம தடுப்போம்னுதான், இத்தனை உஷாரா... ராப்பகலாக் காவல் காத்துக்கிட்டிருக்கோம். அதோட அரசாங்கத்தின் இந்த அடாவடித்தனத்தை எதிர்த்துக் கோர்ட்டிலும் கேஸ் போட்டிருக்கோம். அரசாங்கத் தரப்புல கோர்ட்டுக்கு வந்து நியாயத்தை எடுத்துச் சொல்ல வழியில்லாததால, வாய்தா வாங்கிக்கிட்டே இருக்காங்க... எப்படியிருந்தாலும் நியாயம்தாங்களே ஜெயிக்க முடியும்!'' என்றார் ஆர். ஜகந்நாதன்.

''எங்க ஊர்ல ஓவர்ஹெட் டாங்க் எல்லாம் இருக்குங்க. ஆனா அதில தண்ணி ஏறித்தான் ஒன்றரை வருஷமாச்சு!'' என்

றார் குண்டலகுத்தூர் பஞ்சாயத்திலுள்ள சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த சீனிவாசன்.

"என்னங்க காரணம்?"

"மோட்டார் ஓடுனாத்தாங்களே தண்ணி ஏறும்...? அது ஒன்றரை வருஷமாகவே ஓடலீங்களே... நல்லவேளையாக் கொஞ்சம் மழை பெஞ்சதால அடிகுழாய்ங்கள்லே தண்ணி வருது. இல்லீன்னா தவிச்ச வாய்க்குத் தண்ணி கெடக்காம துடிச்சுப் போயிருப்போம்.

"இது ஒரு பக்கம்னா, எங்க ஊர்ல இருக்கிற ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை வந்து பாருங்க... ஜன்னல் கதவுங்களெல்லாம் ஒடஞ்சு கெடக்குது. ஒண்ணாங்கிளாஸ், ரெண்டாங்கிளாஸ்னு கிளாஸ் ரூம்களைப் பிரிக்கிற தட்டிங்களும் ஒடஞ்சு போச்சு. யூனியன்ல கேட்டாப் பணமே இல்லேன்றாங்க. அட... படிச்ச பிற்பாடு வேலை கெடக்கிறது ஒரு பக்கமிருக்கட்டுங்க... இங்க படிக்கறதே பெரும்பாடா இருக்கே..." என்றார் அவர்.

அடுத்தது குல்லூர்ச் சந்தை. இது விருது நகரிலிருந்து சுமார் பத்து கி. மீ. தொலைவிலுள்ளது. இங்குள்ள சிறிய அணைக்கு முன்னால் ஓர் அழகிய பூங்கா அமைத்து. அணைக்குள் உல்லாசப் படகுகள் விட்டு. இந்த இடத்தை ஒரு பிக்னிக் ஸ்பாட்டாக ஆக்கினால் மிகவும் அற்புதமாக இருக்கும் என்று பார்த்த நமக்கே தோன்றியது.

"ஆமாங்க. இதை ஒரு பிக்னிக் ஸ்பாட்டாக ஆக்கப் பதினைந்து லட்ச ரூபாய் கூட அரசாங்கத்தில் ஒதுக்கினார்கள். பேப்பர்களிலும் பெரிதாகச் செய்திகள் வந்ததோடு சரி. அதன் பிறகு அத்திட்டம் என்னவானதென்றே தெரியவில்லை. ஒருவேளை எங்கள் எம். எல். ஏ. வுக்குத் தெரிந்திருக்கலாம். நீங்களாவது அவரிடம் கேட்டுச் சொல்லுங்கள், தெரிந்து கொள்கிறோம்..." என்றார் மதுரை மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் சுரேஷ் என்ற அவ்வூர் இளைஞர்.

கடைசியாக அருப்புக்கோட்டை. இடுப்பில் குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொள்கிற மாதிரி, எங்கு பார்த்தாலும் குடங்களைத் தூக்கிக் கொண்டு அலையும் பெண்கள். அந்த அளவுக்கு அருப்புக்கோட்டையில் குடிநீர்ப் பஞ்சம்.

"ஆமாங்க. வாஸ்தவம்தான். எங்கள் ஊருக்குத் திருபுவனத்திலிருந்து வைகையாற்றில் நீரெடுத்துக் குழாய் மூலம் குடிநீர் சப்ளையாகிறது. ஆனால் இப்போது இல்லை. மதுரைக்கே சப்ளை போதவில்லையென்பதால் எங்களுக்கு நிறுத்தி விட்டார்கள். மதுரைக்கு மாற்று ஏற்பாடு நடந்து முடியும் தறுவாயிலுள்ளது. அதன் பிறகாவது எங்களுக்குத் திருபுவனத்திலிருந்து

அருள்வாக்கு

'பாத பங்கேருஹ த்வந்த்வம்:" தாமரை போன்ற பாத இரட்டை. த்வந்த்வம் என்றால் இரட்டை. இரண்டு பேர் சேரும் போது உறவு ஏற்படுவதால் அதைத் தொந்தம் என்று சொல்வது த்வந்தத்திலிருந்துதான். 'பங்கேருஹம்' என்றாலும் 'பங்கஜம்' என்றாலும் ஒரே அர்த்தந்தான். பங்கம் என்றால் சேறு. சேற்றில் முளைப்பது பங்கஜம் அல்லது பங்கேருஹம். அழுக்கேயில்லாமல் பரம நிர்மலமாக, அழகாக உள்ள தாமரை, அழுக்கான சேற்றில் பிறக்கிறது. எங்கே பிறந்தாலும், உயர்வாக, ஸ்ரேஷ்டமாக, உருவாகலாம் என்று ஞாபகப்படுத்துவதற்காக அழகான தாமரைக்குச் 'சேற்றில் பிறந்தது' என்று பேர் வைத்திருக்கிறார்கள். நீரில், நீர்நிலையில் பிறப்பதால் நீரஜம், அம்போருஹம், ஸரஸிஜம். குட்டையைக் குழப்பி உண்டான சேற்றில் உண்டாவதால் பங்கேருஹம். குழம்பிக் கிடக்கிற நம் மனஸிலும் மலர்ந்திருப்பது பகவானின் பாததாமரை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.



குடிநீர் சப்ளை கிடைக்கச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம்.

''அதுவரை மக்கள் என்ன செய்வார்கள்? அதற்காக நகராட்சி, ஒன்பது லாரிகளின் மூலம் பல்வேறு இடங்களிலிருந்தும் குடிநீர் கொண்டு வந்து சப்ளை செய்து வருகிறது. அதற்கு மேலும் செய்ய எங்களிடம் நிதி வசதியில்லை. அதோடு இப்போது வழங்கப்படும் குடிநீர், பாதுகாக்கப்படாத குடிநீர் என்பதால் அங்கங்கே நோய்களும் வருகின்றன. அவற்றையும் நாங்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது.

''அருப்புக்கோட்டை என்பது ஏழை நெசவாளர்கள் அதிகம் வாழும் ஊர். அதனால் நிறைய வரிகளுக்கு வாய்ப்பில்லை என்பதால் நகராட்சி ஊழியர்களுக்குச் சம்பளம் கூடத் தர முடியாத நிலை. அரசிடம் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லி உதவி கேட்டிருக்கிறோம். அரசு உதவினால்தான் உண்டு!'' என்றார் அருப்புக்கோட்டை நகராட்சித் தலைவர் (அ. தி. மு. க.) எஸ். சங்கரபாண்டியன்.

''மக்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதில் உங்கள் எம். எல். ஏ. எந்த அளவுக்கு உங்களுக்கு உதவியாக இருக்கிறார்?''

''அருப்புக்கோட்டை மக்களின் இப்போதைய உடனடிப் பிரச்னை குடிநீர்ப் பிரச்னை. அதற்கு நகராட்சி என்ன செய்து கொண்டுள்ளது. அரசிடமிருந்து என்னென்ன எதிர்பார்க்கிறது என்பதையெல்லாம் அவரிடமும் சொல்லியிருக்கிறேன். அதன் பிறகு அவர் என்ன செய்தார் என்பது எங்களுக்குத் தெரியாது. அவர் சொல்வதும் இல்லை. அதற்காக நாங்கள் அவரிடம் எதையும் சொல்லாமலிருப்பதில்லை. எங்கள் கடமையை நாங்கள் செய்கிறோம். அவருடைய கடமையை அவர் செய்கிறாரா, இல்லையா, என்பது எங்களுக்குத் தெரியாது. நீங்கள் அவரிடம்தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்!'' என்றார் எஸ். சங்கரபாண்டியன்.

எம். எல். ஏ. வான எஸ். எஸ். கருப்பசாமி (தி. மு. க.)யைச் சந்திப்பதற்காக அக்டோபர் 3 ஆம் தேதி மாலை அவருடைய இல்லத்திற்குச் சென்றோம். அவர் தமது வியாபாரம் தொடர்பாக அக்டோபர் முதல் தேதியன்று வட இந்தியா புறப்பட்டுச் சென்று விட்டதாகவும் மீண்டும் தீபாவளிக்கு முதல் நாள்தான் திரும்பி வருவாரென்றும் சொன்னார்கள். நாம் நமது தொகுதிப் பயணத்தைப் பற்றியும் அவரது பேட்டி தொடர்பாகவும் செப்டம்பர் 25—ஆம் தேதியன்றே அவருக்கு ஒரு கடிதம் எழுதி, அதில் அக்டோபர் 3 — ஆம் தேதியன்று நாம் அவரைச் சந்திக்க வரவிருப்பதைத் தெரியப்படுத்தியிருந்தோம். அதற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை. அது பற்றி ஏதாவது சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறாரா என்று விசாரித்த போது ஒன்றும் சொல்லவில்லையென்று கூறினார்கள்.


அதன் பிறகும் நாம் விடவில்லை. சென்னைக்குத் திரும்பிய பிறகு, அவரிடம் விரிவாகக் கேட்க நினைத்த கேள்விகளையெல்லாம் சுருக்கமாக எழுதி, அவற்றுக்கெல்லாம் பதில் எழுதியனுப்புமாறு கடிதம் அனுப்பினோம். ஆனால் இதுவரை (அக்டோபர் 20) அவரிடமிருந்து எந்தவிதமான பதிலும் நமக்கு வந்து சேரவில்லை!

ஆக, தொகுதியில் பிரச்னைகள் என்று சென்றாலே அப்படிச் செல்பவர்களை அவர் சந்திக்கவே மாட்டார் என்று தொகுதி மக்கள் சொன்னது உண்மை என்றே நாமும் நம்ப வேண்டியிருக்கிறது. அப்புறம் எதற்கு எம். எல். ஏ. ஆக வேண்டும்?

— இளங்கோவன்

வண்ணப்படங்கள்: சுபா





நேருஜி செய்த சிரசாசனம்!

28

ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி.



"ஏனய்யா! சிரசாசனம் செய்பவர்களுக்குத்தான் மூளைக்கு ரத்தம் போகுமா? மற்றவர்களெல்லாம் மூளைக்கு ரத்தம் ஏறாமல் வாழ்கிறார்களா?'' என்று குதர்க்கமாகச் சிலர் கேட்பார்கள். சிரத்துக்கு ரத்தம் சென்று கொண்டிருப்பதால்தான் நாம் எல்லோரும் வாழ முடிகிறது. ஆனால் இது ஓர் அளவுக்குத்தான் நடைபெறும். இதயத்தின் வேலை, தன்னிடம் வரும் இரத்தத்தைப் 'பம்ப்' அடித்துச் சரீரம் முழுவதற்கும் அனுப்ப வேண்டியது. அந்த விசையினால் பூமியின் ஆகர்ஷண சக்தியையும் எதிர்த்துக் கொண்டு சிரத்துக்கு ரத்தம் செல்கிறது. ஆனால் சிரசாசனம் செய்யும் போது இயற்கையின் துணை கொண்டு, இயற்கையை வென்றவர்களாகிறோம்! ரத்தம் மூளைக்கு நன்கு பாய்கிறது. அதனால் மூளை பலப்படுத்தப்பட்டு நரம்புத் தளர்ச்சி, பலஹீனம் போன்றவற்றை விரட்டி இளமையை நிலைநிறுத்துகிறது. இதனால் தான் நேருஜி கூட சிரசாசனம் செய்து வந்தார். அவரே சொல்லியிருக்கிறார்: ''நான் வயதானவன் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் என் உள்ளம், உணர்ச்சி எல்லாம் வாலிபர்களைப் போன்றது. என்னால் வாலிபர்களைப் போல வேலை செய்ய முடியும்.'' ஒரு நாளைக்குப் பதினாறு முதல் பதினெட்டு மணி நேரம் வரை நேருஜி வேலை செய்வார் என்று அறிவோம். சோர்வின்றி இயங்க அவருக்கு உதவியது யோகாசனம்தான்.

இந்தத் தொடரில் ஆங்காங்கே நாளமில்லாச் சுரப்பிகள் பற்றிக் கூறி வந்திருக்கிறேன். ஹலாசனம், சர்வாங்காசனம் பற்றி விவரிக்கும் போது தைராய்ட் பற்றியும், பஸ்சிமோத்தானாசனம் பற்றி எழுதும் போது அட்ரீனல் சுரப்பி பற்றியும் கூறியிருக்கிறேன். இவை எல்லாவற்றையும் விடச் சிறந்தது. எல்லா நாளமில்லாச் சுரப்பிகளையும் கட்டி ஆள்வது பிட்யூட்டரி என்னும் கோளமாகும். இந்த முக்கியமான கோளம் ஒரு பெரிய பச்சைப் பட்டாணி அளவே உள்ளது. அதற்குத் துணையாக உள்ள பினியல் பாடி என்ற கோளம், அதிலும் கால் பங்கு அளவே உள்ளது! இவை நமது சிரசில்தான் மிக பத்திரமான இடத்தில் உள்ளன. மூளைக்கு மத்தியில் மூளையின் அடிப் பாகத்தில் இருக்கின்றன. பிட்யூட்டரி கீழேயும் பினியல்பாடி அதற்கு மேலேயும் இரட்டை நெற்றிப் பொட்டுப் போல விளங்குகின்றன. பினியல் பாடியின் பணி பிட்யூட்டரிக்குத் துணைபுரிவதே. ராஜ கோளமான பிட்யூட்டரி, சில அதிகாரங்களை நேரடியாகச் செலுத்துகிறது: சிலவற்றைத் தைராய்ட் என்ற பிரதம மந்திரி மூலம் நிறைவேற்றுகிறது. அது சுமார் இருபது வகையான முக்கிய காரியங்களைச் செய்வதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்!

பிட்யூட்டரி தாறுமாறாக வேலை செய்தால், மனிதன் ராட்சசனைப் போல் பத்தடி உயரம் கூட வளர்ந்து விடுவான்! அல்லது, இரண்டு மூன்று அடிக்குள்ளாக இருந்து விடுவான்! தாய்க்குப் பால் சுரக்கச் செய்வது பிட்யூட்டரியே. பிரசவ வேதனையை உருவாகச் செய்வதும் இதுவே. ஆணுக்கு ஆண்மையையும், பெண்ணுக்குப் பெண்மையையும் அளிக்கிறது. பிட்யூட்டரியில் கோளாறு ஏற்பட்டால், ஆணுக்கு மீசை வளராது. பெண்ணுக்கு வளர ஆரம்பிக்கும்!

குரல் மாறிப் போகும். காலம் தவறாமல் பெண்கள் வீட்டு விலக்காவதற்கு உதவுவதும் பிட்யூட்டரியே.

இப்படிப்பட்ட ஜீவாதாரமான பிட்யூட்டரி கோளம், ஆரோக்கியமாக இருக்க நல்ல ரத்த போஷணை அளித்து, ஊக்கமளிப்பது சிரசாசனமே. நாளமில்லாச் சுரப்பியானதால் இது சுரக்கும் திரவம் நேரடியாக ரத்தத்தில் கலக்கிறது. ரத்தம் அதை உடலின் பல்வேறு இடங்களுக்கும் எடுத்துச் செல்ல. பிட்யூட்டரியின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் உறுப்புக்கள். அதனைப் பெற்றுப் பயன் பெறுகின்றன.

சிரசாசனம் செய்யும் போது சில விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சென்ற இதழின் இறுதியில் குறிப்பிட்டிருந்தேன். அவற்றுள் முக்கியமானது சிரசாசனம் செய்யும் போது மனத்தில் பயமோ பதற்றமோ கூடாது. தைரியமும் அமைதியும் அவசியம். மற்ற ஆசனங்களைச் செய்து உடலையும் உள்ளத்தையும் உறுதிப் படுத்திக் கொண்டு. பிறகு தான் சிரசாசனம் செய்ய வேண்டும். எடுத்த எடுப்பிலேயே சிரசாசனம் பழகக் கூடாது. அவசரப்பட்டு பரபரப்புடன் சிரசாசனம் செய்யக் கூடாது. கால்களை ஊன்றி. உதைத்து மேலே கொண்டு போகும் நிலையைப் பழகவே பல நாட்கள் ஆகலாம். பொறுமை. நிதானம் தேவை. சிறிது சிறிதாக முன்னேற வேண்டும். முரட்டுத்தனமாக சிரசாசனத்தை வெற்றி கொள்ள ஆரம்பித்தால் கழுத்து வளைந்து, உடல் கோணலாகச் சுவரில் சாய்ந்து நிற்கும். சிலர் சரிந்து விழுந்து விட, கழுத்து சுளுக்கிக் கொள்ளவும் செய்யலாம். அப்புறம் சிரசாசனத்தைப் பழித்துப் பயனில்லை. கை விரல்களை உறுதியாகக் கோத்துக் கொண்டு, சரியானபடி தலைக்கு ஆதரவாகப் பின்புறம் தலையைப் பற்றினாற் போல வைத்து, முழங்கை வரை கையைத் தரையில் நன்றாக ஊன்றி, பிறகு மெல்லக் கால்களை முகம் அருகே கொணர்ந்து, உதைத்து மேலெழுந்தால் ஒன்றும் நேராது. எனவே ஒவ்வொரு படியையும் நன்கு படித்து, மனத்தில் வாங்கிக் கொண்டு, பிறகு சிரசாசனம் பழகவும். நண்பர் அல்லது உறவினரை அருகே வைத்துக் கொண்டால் அவர் கிட்ட இருந்து உதவலாம். மனசுக்கும் தெம்பாக இருக்கும். ஆனால் உதவி செய்பவர் எப்போதுமே கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தால் முயற்சிக்கு இடமில்லாமல் போய் விடும். சுவரில் சாய்ந்து நிற்கப் பழகிய பிறகு, கால்களைச் சுயமாக மாறி மாறிச் சுவரிலிருந்து நீக்க முயற்சி செய்து, சிரசாசன நிலைக்கு வரப் பிரயத்தனப்பட வேண்டும். சிலர் சிரசாசன நிலையிலிருந்து இறங்கப் பயப்படுவார்கள். எக்கச் சக்கமாக இறங்கினால் முழங்கால் அல்லது பாதத்துக்கு அடிபடும். சிலர் பக்கவாட்டில் சரிந்தும் விடலாம். உதவி செய்பவர் சில காலத்துக்குக் கால்களைப் பிடித்து நிதானமாக இறக்கி விடலாம்.

ஆரம்பத்தில் சிலருக்கு உச்சி வலிக்கும். அபூர்வமாகச் சிலருக்கு மயக்கம் ஏற்படும். அதனால்தான் தொடக்கத்தில் கால் நிமிடத்துக்கு மேல் சிரசாசன நிலையில் நிற்கக் கூடாது என்பது. அதை விடக் குறைவாகப் பத்து நொடிகள். ஐந்து நொடிகள் இருந்தாலும் போதும். பொறுமையாகவும் படிப்படியாகவும் முன்னேறுவதே முக்கியம். மிருதுவாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தலையணையை உபயோகிக்கக் கூடாது. துணி மடிப்பே நல்லது.

சிரசாசனத்தைத் தனியே சுவர் உதவியின்றி செய்யப் பழகிய பிறகு, நமது கவனம் சிரசில்தான் இருக்க வேண்டும். ரத்தம் மூளைக்குப் பாய்ந்து நமது ஆரோக்கியம் வீரியம் அடைவதாக எண்ண வேண்டும்.

ஆசனங்கள் பழகுகிறவர்கள் ஒரு கடிகாரத்தைப் பக்கத்தில் வைத்துக் கொள்வது நல்லது. சிரசாசனத்தின் போது அது முகத்தின் எதிரே இருக்கலாம். மற்ற ஆசனங்கள் செய்யும் போது வேறு ஒருவர் தான் நேரம் பார்த்துச் சொல்ல முடியும். பழக்கத்தில் நமக்கே நேரத்தைச் சரியாகக் கணிக்க இயலும்.

பெண்கள் சிரசாசனம் செய்யும் போது. கால்சட்டை போட்டுக் கொண்டால் உடை நழுவுவது பற்றிய கவலை இல்லாமல் செய்யலாம். சிரசாசனத்தை சிறுவர் சிறுமியர் அதிகபட்சம் இரு நிமிஷங்கள் மட்டுமே செய்யலாம். வாலிபர்கள் அதிக நேரம் செய்யலாம். கருவுற்ற பெண்கள் சிரசாசனம் செய்யக் கூடாது. குழந்தை பிறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு மறுபடி பழக ஆரம்பிக்கலாம்.

பொதுவாகவே நோயுற்றிருப்பவர்கள் யோகாசனங்களைச் செய்யும் போது நிபுணர்களைக் கலந்தாலோசித்துத்தான் செய்ய வேண்டும். அதிலும் சிரசாசனம் விஷயத்தில், இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இதய நோய். ரத்த அழுத்தம். போன்றவை இருந்தால் மிகுந்த முன்னெச்சரிக்கை தேவை. சுயமாக எதையும் செய்யாமல் யோகாசன நிபுணர்களை அணுகுங்கள்.

(தொடரும்)

ஜி.எம். பிரமிக்கிற மாதிரி ஒரு பெயிண்டிங்...!

தமிழினியன்

இருபத்தெட்டாம் தேதி பூஜை.

அந்த விளம்பர ஏஜென்சியின் மானேஜர் கஜராஜன், திடீரென்று விழித்துக் கொண்டார்.

இடையில் இன்னும் மூன்றே நாட்கள்.

எதை வைத்துப் பூஜை செய்ய முடியும்? நல்லதாக சரஸ்வதி படம் வேண்டுமே? கடையிலிருந்து வாங்கிவரச் செய்யலாம் தான். ஆனால் பம்பாயிலிருந்து ஜி.எம். வேறு இந்தச் சமயம் வருகிறார். அவர் ஒரு வேளை பூஜையில் கலந்து கொள்ளலாம். அவரை ''இம்பிரெஸ்'' பண்ணுகிற மாதிரி ஒரு புது பெய்ண்டிங் வைத்தால் வித்தியாசமாகவும் சிறப்பாகவும் இருக்குமே!

''குருமூர்த்தி.....''

அவர் ஓடி வந்தார். ''என்ன சார்?''

''எப்படி பூஜை பண்ணப் போறீங்க. இந்தத் தடவை ஜி. எம். வேறு பூஜையில் கலந்து கொள்ள வருகிறார். அவர் பிரமிக்கிற மாதிரி ஒரு பெயிண்டிங்....?''

''வரையச் சொல்லட்டுமா, சார்?'' என்றார் குருமூர்த்தி. ''நம்மிடம்தான் நாலைந்து ஆர்டிஸ்டுகள் வேலை பார்க்கிறார்களே....''

''கேட்காதீர்கள். உடனே ஏற்பாடு செய்யுங்கள். நாளைக்குள் படம் முடியவேண்டும்.'' — தன் பதவிக்கான மிடுக்குடன் உத்தரவிட்டார், கஜராஜன்.

மறுநாள்.

''சார், படம் ரெடி.''

கஜராஜனின் முகம் கடுக்காய் தின்றது போல் சுருங்கியது.

''என்ன மேன் படம், இது? சரஸ்வதி, சாதாரணப் பெண் இல்லை. அவள் ஒரு தெய்வம். வரம் தரும் தேவி. கண்ணிலே அருளும், சாந்தமும் வரணும். ஆனால் இந்தக் கண் ரௌத்திரம் பிடிச்ச மாதிரில்ல இருக்கு...''

''சாரி, சார்.''

''சாரியாவது, பூரியாவது. இதை யார் வரைந்தது?''



''ஆறுமுகம்.''

''அந்த ஆளுக்குக் கோயில், குளம் என்றாலே அலர்ஜியாச்சே. எப்படி அவரால் தெய்வப்படம் வரைய முடியும். கடவுளைப் படமா வரைந்தாலும் சரி, சிலையாய் வடித்தாலும் சரி, முதலிலே தெய்வ நம்பிக்கை வேண்டும், ஐயா. தினசரி கோயிலுக்குப் போய், பூஜை புனஸ்காரம் எல்லாம் தவறாமல் செய்கிற ஆசாமியாய் இருந்தால் தான், தெய்வீகத்தை ஆர்ட்டிலே கொண்டு வர முடியும். அப்படி நம்மகிட்டே ஓர் ஆர்ட்டிஸ்டும் இல்லையா?'' சற்று சங்கடத்துடன் கேட்டார், கஜராஜன்.

''சுந்தரேசன் இருக்கிறார், சார். அவர் வாரம் தவறாமல் கோயிலுக்குப் போகக் கூடியவர். வெங்கடாஜலபதி பக்தர். வருஷா வருஷம் திருப்பதி உண்டியிலே காணிக்கைச் செலுத்துவார்....'' — புதிய நம்பிக்கையுடன் பேசினார், குருமூர்த்தி.

''கரெக்ட். சீக்கிரம் அவரை வரையச் சொல்லுங்கள்.''

''மெட்டீரியல்ஸ் எல்லாம் ரெடியாய் இருக்கு. இப்பவே ஆரம்பிக்கச் சொல்லிடறேன். நாளைக்காலையிலே படம் ரெடியாயிடும்.''

''குட்.''

சொன்னபடி படம் தயாராகிவிட்டது.

ஆனால், கஜராஜன் தயாராக இல்லை, அதை ஏற்றுக்கொள்ள.

''இந்த ஆளும் சரியாய்ப் பண்ணவில்லையே...'' என்று உதட்டைப் பிதுக்கினார், அவர்.

''என்ன சார்?'' கவலையுடன் கேட்டார், குருமூர்த்தி.

''கண்ணைப் பார்த்தீரா. காதல் போதையிலே மயங்கின மாதிரி... இப்படியா ஒரு சாமி படத்தைப் போடுவார்கள். ச்சோ.... இந்த ஆள் என்னத்துக்குக் கோயிலுக்குப் போறாரோ...'' ஏமாற்றச் சூள் கொட்டினார், அவர்.

''அப்படின்னா... வேறு யாரையாவது..'' சங்கடத்துடன் குரலை இழுத்தார், குருமூர்த்தி.

''நீங்கள் இப்படி ஒவ்வொரு ஆர்ட்டிஸ்டாகப் பார்த்துப் படம் தயார் பண்ணுவதற்குள் பூஜை போயிடும்.''

''இல்லை, சார். கடைசி சான்சாய் இன்னொரு தரம்...''

''என்னவோ செய்யுங்கள். உம்... இந்த வருஷம் ஜி. எம். வருகிறாரே கொஞ்சம் சிறப்பாய்ப் பூஜை பண்ணலாம் என்று பார்த்தேன். அது என்னடாவென்றால் உள்ளதுக்கே மோசமாயிடும் போலிருக்கு!'' — பெருமூச்சுடன் திரும்பி நடந்தார், கஜராஜன்.

வீட்டுக்குத் திரும்பிய கஜராஜனுக்கு, யாரைப் பார்த்தாலும் சரஸ்வதி படமாகவே தோன்றியது. தூக்கத்தில் கூட 'சரஸ்வதி... சரஸ்வதி...' என்று புலம்பினார்.

பொழுது விடிந்தது.

அன்றுதான் சரஸ்வதி பூஜை.

ஓடாதகுறையாக ஆபீஸுக்குச் சென்றார், கஜராஜன்.

சரஸ்வதியின் உருவப்படம் தயார்.

செந்தாமரையில், வீணை ஏந்திய கைகளுடன், கல்வி, கலை, தொழில் அத்தனைக்கும் ஏகபூஷணியான சரஸ்வதி, அருள் கடாக்ஷத்துடன் காட்சி அளித்தாள். சாந்தம் தவழும் கண்களும், கனிவு நிரம்பிய புன்னகையும் ஒருங்கே அமைந்து அந்தச் சித்திரம், நேரில் வந்த தெய்வமாகவே காட்சியளித்தது.

பார்த்ததும் உண்டான சிலிர்ப்பில், அப்படியே மெய் மறந்து போனார், கஜராஜன். தன்னையும் மறந்து கையெடுத்துக் கும்பிட்ட அவர், ''யார் இந்தத் தெய்வத்தை வரைந்தது?'' என்றார் — ஆவலுடன்.

குருமூர்த்தி, பதில் சொல்லாமல் தயங்கினார்....

மானேஜருக்குச் சந்தேகம். ''யாராவது வெளி ஆர்ட்டிஸ்டை வைத்துப் போட்டீரா என்ன?''

''நம்மிடம் ஐந்து ஆர்ட்டிஸ்டுகள் இருக்கும்போது எதுக்காக வெளி ஆர்ட்டிஸ்டைத் தேட வேண்டும்?''

''பின்னே சொல்லுங்க. இந்தக் கலைவாணிக்கு உயிர் கொடுத்த அந்தக் கலைஞன் யார்...?''

''நம்ம ஆர்ட்டிஸ்ட் ஜோசப்தான் சார்!''

டாக்டர் பதில்கள்:

கனவு காண்பதால் தூக்கம் கெடுகிறதா?



● **மேஜர் தாசன், ஈரோடு:**

● **தூங்கும்போது கனவு காண்கிறோம். சில சமயம் விசித்திரமானவைகளாகவும், சில சமயம் நடந்த நிகழ்ச்சிகளாகவும் வருகின்றன. எதனால் கனவு வருகிறது? இப்படித் தூங்கும் போது கனவு காண்பதால், நாம் தூங்கும் நேரம் பாதிக்கப்படுமா?**

●● **மனநல மருத்துவ நிபுணர் டாக்டர் என். மாத்ருபூதம், சென்னை — 28.**

கனவு என்பது ஒரு வடிகால் மாதிரி. ஆசைகள், விருப்பங்கள் எல்லாம் எல்லாருக்கும் நிறைவேறி விடுவதில்லை. சில விஷயங்கள் வெளிப்படையாகப் பேச முடியாமல் போகின்றன. சில வக்ரமான உணர்வுகள், எண்ணங்கள், நடப்புக்கள் எல்லாம் கனவில் மட்டுமே வரும். அவை நனவில் நடப்பதை, கனவு காண்பவரே விரும்பமாட்டார். நனவில் நடக்க முடியாததை, அதன் அடையாளமாக, கனவில் காண்பதும் உண்டு. முள் நிறைந்த வாழ்க்கையில், இதமாகப் பஞ்சு மேல் நடப்பது போன்று, ஒரு குஷன் மாதிரி கனவுகள் இருக்கின்றன. கனவு காண்பதால், தூங்கும் நேரம் பாதிக்கப்படுவதில்லை. உண்மையில், கனவே வராமல் இருந்தால் வருத்தப்படுபவர்கள் தாம் அதிகம். கனவே வராமல் தூங்கிக் கொண்டிருப்பவருக்கு, மனநிலை கூடப் பாதிக்கப்படலாம்!

● **ஆர். குமரவேல், சாமிநாதபுரம்.**

● **ஒருவருக்கு மறதி அதிகம் ஏற்படும் போது, அதை 'ஹிஸ்டீரியா' என்று சொல்லுகிறார்களே, ஹிஸ்டீரியா என்றால் என்ன? இதைக் குணமாக்க முடியுமா?**

மனத்தில் பதிவு செய்தல் (ரெஜிஸ்ட்ரேஷன்), தங்க வைத்தல் (ரிடென்ஷன்), இரும்ப நினைவுக்குக் கொண்டு வருதல் (ரீகால்) ஆகிய மூன்றும் சேர்ந்து இருந்தால் தான் அது ஞாபக சக்தி. மறதியை 'ஹிஸ்டீரியா' என்று சொல்லுவதற்கில்லை. 'ஹிஸ்டரிகல் அம்னீசியா' என்கிற நிலையில், சில நிகழ்வுகள் நினைவுக்கு வராது போகலாம். எப்போதாவது இப்படி நிகழ்ந்தால் பாதகமில்லை. இந்த நிலை தொடர்ந்தால்தான் அது நோய். அதைக் குணமாக்க முடியும். ஆனால், வேண்டிய சமயத்தில் நினைவுக்கு வராமல் தடுமாறும் நிலைமையிலுள்ள — உண்மையான — மறதிக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

● **முகப்பரு எதனால் வருகிறது? இதற்கு என்ன செய்ய வேண்டும்?**

●● **சரும நோய் மருத்துவர் டாக்டர் வி. ஆர். ஜானகி, சென்னை — 18.**

முகப்பரு இளைய பருவத்தினருக்கு — குறிப்பாகப் பன்னிரண்டு முதல் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவர்களுக்குத்தான் வரும். முகப்பரு வருவதற்குக் காரணங்கள் பல: முதலாவது, செக்ஸ் ஹார்மோன்கள் 12, 13 வயதில்தான் இயங்கத் தொடங்குகின்றன. அதனால் முகப்பரு வரும். இரண்டாவது, எண்ணெய்ச் சுரப்பி (Sebum) சுரக்கும் தன்மையைப் பொறுத்து, அதிகமாகவோ குறைவாகவோ உண்டாகும். எண்ணெய் வடிகிற முகமாயிருந்தால் அதிகமாக வரும். மூன்றாவது, தோலில் உள்ள பாக்டீரியாக்களின் — ஸ்டெப்போ காகஸ், கார்னி பாக்டீரியம் ஆக்னஸ் எனும் இரண்டு பாக்டீரியாக்களின் — செயல்பாடு.

முதலாவது காரணமான செக்ஸ் ஹார்மோன் விஷயத்தில், இயற்கையை அளவுக்கு மீறிக் கட்டுப்படுத்த முடியாது. எனவே ஹார்மோன் தெரபி (சிகிச்சை)யைக் கடைசி பட்சமாகத்தான் கையாள வேண்டும். எண்ணெய் வடிகிற பரு — முகத்தை மிருதுவான சோப்பினால் அடிக்கடி கழுவிக் கொள்ளலாம். மூன்றாவது காரணத்துக்கு, டெட்ராசைக்ளின்

மருந்துகள் அவசியம். இதை வாரக்கணக்கில் சாப்பிட வேண்டியிருக்கும். ஆனால் சரும நோய் மருத்துவரின் ஆலோசனைப் படிதான் உட்கொள்ள வேண்டும்.

மேலுக்குத் தடவ சல்ஃபர் கலந்த க்ரீம்கள், வைட்டமின் – ஏ ஆயின்மெண்ட், எரித்ரோமைசின் க்ரீம் இவற்றை மருத்துவரைக் கேட்டுக் கொண்டு உபயோகிக்கலாம். சிகிச்சையின் அளவு, பருவின் தீவிரத்தைப் பொறுத்தது. சாதாரணமானது என்றால், மேலுக்குத் தடவும் மேற்கூறிய மருந்துகளே போதுமானவை. பெரிய கொப்புளம் போன்ற பருக்களாயிருந்தால், சரும மருத்துவரின் ஆலோசனையும் சிகிச்சையும் அவசியம்.

● **ஜி. நீலா, மன்னார்குடி:**

● கறுப்பு – சிவப்பு என்று நிறம் ஒன்றைச் சருமத்தில் நிர்ணயிப்பது எது? கறுப்பாய் இருப்பவர்களுக்கு 'கலரிங் பிக்மெண்ட்' அதிகமாய் இருப்பதாகவும், சிவப்பாய் இருப்பவர்களுக்குக் 'கலரிங் பிக்மெண்ட்' குறைவாக இருப்பதாகவும்; அதனால் கறுப்பாய் இருப்பவர்களுக்கு வெயிலைத் தாங்கும் சக்தி கூடுதலாக இருப்பதாகச் சொல்லப்படுவதும் உண்மையா?

உடலின் நிறத்தை நிர்ணயிப்பது மெலனின், கெரடின் ஆகிய பிக்மெண்ட்தாம். ரத்தத்தில் ஆக்ஸி – ஹெமகுளோபின் மற்றும் ரெட்யூஸ்ட் ஹெமக்ளோபின் இவை குறையும்போது சோகை காரணமாக சரும நிறம் வெளுப்பாக மாறும். ஆனால் வாசகர் குறிப்பிட்டிருப்பது போல, 'பிக்மென்டேஷன்' தோலின் நிறத்தை மட்டுப்படுத்தவோ அதிகப்படுத்தவோ செய்வது மட்டுமின்றி, தோலின் பாதுகாப்புக்கும் காரணமாயிருக்கிறது. மேலை நாட்டவரை விட, நம் நாட்டவருக்கு இந்த அதிகமான 'பிக் மென்டேஷன்' காரணமாக, சருமப் புற்று நோய் அதிக அளவுக்கு வருவதில்லை என்பதையும் இங்கே ஒரு தகவலாகச் சொல்ல விரும்புகிறேன்.

தொகுப்பு: **எஸ். வி. என்.**

மாதம் ஒரு தொகுதி



நாட்ராம்பள்ளித் தொகுதிக்கு நாங்கள் வருகிறோம்!

கல்கியின் 'மாதம் ஒரு தொகுதி' என்ற திட்டத்தின் கீழ் நடந்த பத்தாவது குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தொகுதி, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள நாட்ராம்பள்ளித் தொகுதி.

இத்தொகுதியில் தமக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெற்ற அ. தி. மு. க. (ஜெ. அணி) வேட்பாளரை விட 9,581 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருப்பவர் தி. மு. க. வைச் சேர்ந்த ஆர். மகேந்திரன்.

நாட்ராம்பள்ளித் தொகுதி மக்கள் எந்த நம்பிக்கையோடு ஆர். மகேந்திரனைத் தேர்ந்தெடுத்தார்களோ, அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில், கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாரா அல்லது சுத்தமாக மறந்து போய் விட்டாரா?

நாட்ராம்பள்ளித் தொகுதியைச் சேர்ந்த அனைவரும் தங்கள் எம். எல். ஏ.வான ஆர். மகேந்திரனிடம் கேட்க நினைக்கும் அத்தனை கேள்விகளையும் எங்களுக்கு எழுதியனுப்பலாம். தொகுதிக்கு அவர் செய்து கொண்டிருக்கும் வளர்ச்சிப் பணிகள் ஏதேனும் இருந்தால் அவற்றையும், கூடவே தொகுதியின் வளர்ச்சிக்கான தங்கள் ஆலோசனைகளையும் எழுதலாம்.

நாட்ராம்பள்ளித் தொகுதி வாக்காளர்களே, நீங்கள் எழுதும் ஒவ்வொரு விஷயத்தையும் உங்கள் எம். எல். ஏ. மகேந்திரனிடம் எடுத்துச் சொல்லி விவாதிப்போம். தொகுதிக்கு நேரடியாக வந்து சுற்றிப் பார்த்தும் உண்மைகளை ஆராய்வோம்.

கடைசியில்எங்கள் அனுபவங்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கல்கியில் கட்டுரையாக வெளியிடுவோம்.

நாட்ராம்பள்ளித் தொகுதியிலுள்ள வாசகர்களின் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: **24.11.90.**

உறையின் மேல், 'மாதம் ஒரு தொகுதி' என்று மறக்காமல் குறிப்பிட்டு உடனடியாக எழுதியனுப்புங்கள்.

— **ஆசிரியர்.**

பாதுகாக்க வேண்டிய அட்டைப்படம்

* தஞ்சையின் தனிச் சிறப்பு மிக்க ஓவியங்கள் நெஞ்சை மட்டுமா அள்ளுகின்றன! அனைவரின் கவனத்தையும் அல்லவா கொள்ளை கொள்ளுகின்றன. என்ன அழகு! எப்படிப்பட்ட வண்ணம்! அட்டைப் படம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம்.

மணத்தங்கரை,
கவி. செங்குட்டுவன்.

* பல இண்டர்வியூக்களைச் சந்திக்கவிருக்கும் என்னைப் போன்ற வேலை இல்லாப் பட்டதாரிகளுக்கு மிகவும் பயனுள்ள குறிப்புகளாயிருந்தது 'இண்டர்வியூவைச் சந்திப்பது எப்படி?' என்ற இணைப்பு.

வேலூர், கே. பி. சாரதி.

* இலவச இணைப்பு இரண்டும் நன்றாக இருந்தன. குறிப்பாக இண்டர்வியூக்குச் செல்லுவோருக்காக வந்த இணைப்பு அதி முக்கியத்துவம் பெறுகிறது. இலவச இணைப்பையும் பயனுள்ள வகையில் அளிப்பதில் 'கல்கி'க்கு நிகர் வேறெதுமில்லை.

நத்கோலம், பு. பாரத்.

* 'சோ'விடம் நான் கேட்க நினைத்ததெல்லாம் எங்கள் சார்பாக நீங்களே கேட்டிருக்கிறீர்கள்; நன்றி.

மேல்பட்டி, எல். மாறன்.

* கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சியும், ஜனதா தளமும் நடந்து கொண்ட முறையைத் தலையங்கம் மூலம் நன்றாகக் கண்டித்துள்ளீர்கள்.

பி. பி. குளம்,
ம. செந்தில் நாதன்.

* **'மக்களின் தீர்ப்பைக் குப்பையிலே போடு' தலையங்கத்தில் நேருஜியும், எம். ஜி. ஆரும் நோயுடன் போராடியபடியே பதவியில் இல்லையா எனக் கேட்டுள்ளீர். அது உண்மை. ஆனால் அவர்களுக்குப் பின்னால் கட்டுக்கோப்பாகக் கட்சிக்காரர்கள் நின்றார்கள். ஆனால், வீரேந்திர பாட்டீலின் பதவிக்குச் சோதனை ஏற்பட்ட மறுநாளே — பின்னால் நின்றவர்கள் கைவிட்டு விட்டார்களே!**

திருச்சி — 14, ராஜேஸ்வரி.

* 'நல்லதுக்குக் காலமில்லை' என்பதை விளக்கியது ஜெ. பாக்யலட்சுமியின் போட்டிக் கதை.

கிடூர், எ. முஹம்மது
ஜெ முஹீன்.

* வெகு நாட்களாகவே மண்டையைக் குடைந்து கொண்டிருந்த **'யார் அந்த மண்டல்!' என்ற கேள்விக்குக் கல்கியில்தான் விடை கிடைத்தது.**

தர்மபுரி — 2, வித்யா.

* நிஜமான படத்தைப் போட்டுக் கார்டுன் வரைந்திருப்பது வித்தியாசமாக இருந்தது.

முத்துப்பேட்டை,
தஞ்சைத் நாஸியன்.


* 'தெற்கேயும் ஒரு திருப்பதி' கட்டுரை உள்ளத்தில் பரவசத்தை ஏற்படுத்தியது. திருமலைவையாவூர் என்ற இந்தப் புகழ் பெற்ற ஸ்தலத்தின் பெருமையைப் பக்தர்கள் உணரும் வண்ணம் படங்களோடு தந்ததற்கு மிக்க நன்றி.

ஈரோடு. ஈ. டி. விஜயகுமார்.

* 21.10.90 'கல்கி'யில் 'பாடு சிகரெட்' என்று வெளியான இதே தகவலை, 17.3.1974 ம் ஆண்டு 'கல்கி'யில் 'பிடிக்கும் சிகரெட்டின் எண்ணிக்கை குறைய' என்ற தலைப்பில் நான் எழுதி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர், அ. பிச்சை.

வட்டமேஜை



* சாயிபாபாவின் மகிமைகளையும், போதனைகளையும் கல்கியில் படிக்கும்போதே பரவசமடைந்தேன் என்றால் நேரில் அவரைத் தரிசித்தால் எத்தனை பரவசம் ஏற்படுமோ... நினைக்கும்போதே ஆனந்தமாக இருக்கிறது!

லால்குடி. எம். இராஜேந்திரன்.

* **ஒரு நாள் முன்னதாகக் கல்கி** வெளிவந்து தீபாவளி நன்னாளின் குதூகலத்தை அதிகப்படுத்தியது! நன்றி!

சென்னை, பா. நாகலெட்சுமி.

* தீபாவளி சிறப்பிதழ் தீபாவளி முடிந்த மறுநாள்தான் கிடைத்தது என்றாலும் பண்டிகை முடிந்த பின்பு ஓய்வாக ரசித்துப் படிக்க வசதியாக இருந்தது!

மதுரை, நாகுவேலன்.

* வாசகருடைய துணுக்கு ஒன்றில் உலகில் அதிகமாக விற்பனையாகும் ஜப்பானியப் பத்திரிகை **'ஆசாஹி ஷிம்பா'வின் ஒருநாள்** விற்பனை 1 கோடியே 20 லட்சம் என்று போட்டுவிட்டு, விற்பனைப் பிரதிகள் 6000 என்கிறீரே! அது விற்பனைப் பிரதிநிதிகள் என்றல்லவா இருக்க வேண்டும்!

நத்கோலம், ஆ. புகாரி.

* இன்றைய சமூகத்தில் தனி மனிதனது உரிமைகள் சில சமூக விரோத சக்திகளால் பறிக்கப்படுவதையும், காவல் துறையில் உள்ள சில பொறுப்பற்றவர்களின் **அநாகரிகச் செயல்களையும் மிக** யதார்த்தமாக, 'இடுக்கண் வருங்கால் நகர்க' சிறுகதையில் வடித்திருக்கும் ஆர்னிகா நாசருக்குப் பாராட்டுக்கள்!

நத்கோலம், எம். வெங்கடேசன்.

* **கேள்வி கேட்கின்ற நிருபர்களிடம் யோசிக்காமல் பதில்களைக் கூறிவிட்டுப் பின் அது அச்சில் வெளிவந்ததும் — மற்றவர் சுட்டிக் காட்டியதும் — நான் அப்படிக் கூறவில்லையென்று அலறிப் புடைத்துக் கொண்டு மறுப்புக் கடிதம் எழுதுவதென்பது சர்வ கட்சி வியாதியா என்ன?**

திருக்குவளை, பவித்ரமரியா.

சிகரங்களை நோக்கி...

3

பசித்தபோது ரசிப்பதேது?

வயிறு காலியாய் இருக்கும்போது இருதயம் நிறையாது.

கதவு பூட்டினான்.

''இந்தக் கதவுதான் மனிதன் மீது நிறைவேற்றப்பட்ட
முதல் நம்பிக்கையில்லாத் தீர்மானம்.''

தலையாட்டிய பூட்டு அதை வழிமொழிந்தது.

வீடு பூட்டியதும் புலன்கள் இறந்து கொண்டன;

நடந்தான்.

தூங்கும் குழந்தை திமர்த் திடீரென்று சிரிப்பது
மாதிரி அவ்வப்போது சுள்ளென்று முகங்காட்டியது
சூரியன்.

காலார நடந்தால் போதும்; நடந்து கொண்டே
கனவு கண்டால் போதும்; கண்களுக்குள்
இந்த ஜீவ சித்திரங்களைச் சேமித்தால் போதும்.

ஆகா! இந்தக் காற்றை அழுந்தச்
சுவாசித்தால் ஆயுள் கூடும்.

இடிமாதிரி தனக்குத்தானே பேசிக் கொண்டு
மின்னல் மாதிரி தனக்குத்தானே சிரித்துக்
கொண்டு காற்றைக் கிழித்து அவன் கைவீசி
நடந்தபோது, அந்த மலைச்சாலையில் எதிரே
வந்தவர்கள் ஓரமாய் ஒதுங்கினார்கள்.

அது ஒரு பயபக்தி என்று கருதிக் கொண்டான்.

ஆனால் அது பக்தி இல்லை — அவன் நிலை
கண்டு கொண்ட பயம் என்று அறியவில்லை
அந்த இளங்கன்று.

●

வைரமுத்து

''சாப்பிட வேண்டும். காய்கறிக் கடை எங்கே
இருக்கிறது?''

அவன் கேள்வி விளங்கவில்லை கிராம
மக்களுக்கு.

எவனடா இவன்...? யானை வேட்டைக்குப்
போகிறேன் — தூண்டில் எங்கே என்கிறவன்!

இருந்தாலும் ஒரே ஒரு கட்டுவிரலுக்கு மட்டும்
இருதயம் இருந்தது.

●

கொட்டி வைத்திருந்த குழந்தைகளாய்க் காய்
கறிகள்.

எல்லாம் முகம்வாடிக் கிடந்தன.

மூர்ச்சை தெளிவிக்க முகத்தில் நீர்தெளித்தான்
கடைக்காரன்.

''இப்படி வாடிக் கிடந்தால் எப்படிச் சத்து
இருக்கும்?''

வாங்கவந்த ஒருவன் கடைக்காரனோடு
கைகலந்தான்.

இருஞானம் ஆளைத்தொடும் தென்றலாய்
அவன் தோளைத் தொட்டான்.

''வாடிப் போனாலே காய்கறியின் சத்தழியும்
என்று வாடுகின்றவரே, அவிக்கிறீர்களே
அப்போது...? சமைக்கிறீர்களே அப்போது...?
சாறு வழியவிட்டுச் சக்கை உண்பீரே
அப்போது...?''

உண்மை சொல்லவா?

நீங்கள் ஒப்புக் கொண்ட சமையல்முறை
தப்பு.

சிறுத்தொண்டர் மட்டும் பிள்ளைக்கறி
சமைக்கவில்லை; நீங்கள் எல்லோருமே
காய்கறி என்ற பிள்ளையைச் சமைத்துத் தான்
சாப்பிடுகிறீர்கள்.

மனிதர்களே!

நீங்கள் இறைச்சியைச் சாகடித்துச்
சமைக்கிறீர்கள்.

காய்கறிகளைச் சமைத்துச் சாகடிக்கிறீர்கள்.

இங்கே சம்சாரத்தில் பாதியும், சத்தில்
பாதியும் சமையலறையிலேயே சமாதியாகி
விடுகிறது.

சமையலறை என்பது பெண்களின் ஆயுள்
சிறை.

இங்கே ஒவ்வொரு சாப்பாட்டு மேஜை

யிலும் பெண்களின் ரத்தம்தான்
மறைமுகமாகப் பரிமாறப்படுகிறது.

உணவில் பிரதானம் ருசியல்ல; பசிதான்.

பசிக்குச் சாப்பிடுவது தர்மம்; ருசிக்குச்
சாப்பிடுவது காமம்.

ருசி என்பது நாவின் மூடநம்பிக்கை.

என் ஜீரண உறுப்புக்களை இனி சிரமப்படுத்த மாட்டேன்.

நான் உணவுமுறை மாறுகிறேன்; உங்களையும் மாற்றுகிறேன்.

நமக்கு சரீரஞானம் வேண்டும்;
சரியான உணவு வேண்டும்.

பகலைப்போல் உள்ளம் வேண்டும்;
பறவைபோல் தேகம் வேண்டும்.

பறக்கும்வரை பறக்க வேண்டும்;
இருக்கும் வரை இன்பம் வேண்டும்.

உணவுமுறை மாற்றுங்கள்.

நாம் சாப்பிடத்தான் உணவு; நம்மைச்
சாப்பிட அல்ல.

●

கேரட், பீட்ரூட், கோஸ் இவற்றைக் கீற்றுகளாய்
அரிந்தான். எலுமிச்சை பிழிந்தான். மிளகு



தூவினான். ஒரு கொய்யாப்பழம்; பாதித்
தேங்காய்;
பிறந்தது முதல் வெட்கப்பட்டுக்
கொண்டிருக்கும்
ஒரு செவ்வாழை.

போதும்! ஒரு மணி வரைக்கும் பசியோடு
ஒரு சமாதான உடன்படிக்கை.

●

பசி அடங்கியது.

மீண்டும் மூங்கில் வீட்டு முற்றத்தில்
நாற்காலி போட்டுத் திசையளந்தான்
திருஞானம்.

பள்ளத்தாக்கில் அந்த நதி ஜனகணமன
பாடிக் கொண்டே ஓடிக் கொண்டிருந்தது.

சரி! இனி என்ன செய்வாய் திருஞானம்?

என் கண்கள் என்ற ஜன்னல் வழியே
இந்தப் பிரபஞ்சத்தின் ரகசியம் பார்ப்பேன்.

''பிறகு?''

இயற்கையின் மர்மங்களில் டார்ச்
அடிப்பேன்.

''அப்புறம்...?''

பறவைகளின் பாஷையை மனிதர்க்குச்
சொல்லிக் கொடுப்பேன்.

''ஆகட்டும்.''

இந்தப் பூமியிலிருந்து மனிதன் அந்நியப்
பட்டுப்
போன அநியாயம் சொல்வேன்.

வாழ்க்கை என்ற கோப்பை அமுதத்தால்
நிரப்பப்பட்டிருந்தாலும் மனித நாவுகள்
கோப்பைக்கு வெளியே அலைந்து கொண்
டிருக்கும் அநாகரிகம் சொல்வேன்.

''அது சரி.''

ஒவ்வொரு மலராய் வலம் வருவேன்.

''ஆகா.''

மகரந்தத்தில் புதைந்து போன வண்டுகளை
விடுவிப்பேன்.

''சபாஷ்''

மழையில் நனைவேன்.

''பலே.''

என் தோல் துளைத்து மழைத்துளி
நரம்பில் விழும் வரை நனைவேன்; பிறகு
நேரம் பார்த்து நிர்வாணமாவேன்.

''ஓகோ!''

சோம்பல் முறிக்கும் குதிரையாய்
மண்ணில் புரள்வேன்.

இந்த உலகம் எனக்கு வைத்த பெயர்
என்னவென்று மறந்து போவேன்.

இந்த ஜீவசமுத்திரத்தில் நானும் ஓர்
உயிர்த்துளி என்ற உண்மை தெளிவேன்.

சிகரம் ஏறுவேன்.

''ஏறி...?''

மனிதர்களை நோக்கிக் கூவுவேன்.

மனிதா!

உன் விஞ்ஞானம் விண்வெளிக்குப்
போகப் போக உன் மனிதாபிமானம்
மண்குழிக்குப் போகிறதே! அது ஏனென்
பேன்.

விலங்கிலிருந்து மனிதன் பிறந்தது
பரிணாமமென்றால் இன்று மனிதனிலிருந்து
விலங்கு பிறக்கிறதே! இதற்கு என்ன
பெயரென்பேன்.

உனக்குத் தொட்டில் கட்டிய இயற்கைக்கு
நீ ஏன் கல்லறைகட்ட ஆசைப்படுகிறாய்
என்பேன்.

இந்தப் பூமிக்கு மூன்று பங்கு நீர் தந்தது
இயற்கை. அதைக் கொண்டு ஒரு பங்கு
தாகத்தைத் தீர்க்க முடியவில்லையே!
என்ன விஞ்ஞானம் உன் விஞ்ஞானம்
என்று எச்சில் துப்புவேன்.''

தங்கள் பொத்தான்களைக் கூடத் தாங்களே
போட்டுக் கொள்ளாத ஒரு வர்க்கமும் —
தங்களின் சவளர்வலச் செலவுக்குக் கூடத்
தாங்களே சம்பாதித்துக் கொண்டிருக்கும்
ஒரு வர்க்கமும் இனிமேலும் இந்த மண்ணில்
இருக்க வேண்டுமா என்பேன்.

வாழ்க்கை என்பது உறக்கத்திற்கும்
மரணத்திற்கும் மத்தியில் கண்டுவரும்
கனவல்ல; வாழச் சொல்லித் தருகிறேன்.
வா மனிதா என்பேன்.
மனிதனுக்குள் இருக்கும் விலங்குத்
தோலை உரித்து மாமனிதனாக்குவேன்.
கவிதை எழுதுவேன்; காற்றை அழைத்து
இசையமைக்கச் சொல்லுவேன்.

''போதும் திருஞானம்; போதும்.
உற்பத்தியில்
ஈடுபடாமல் கவிதை மட்டும் போதுமா?''

உற்பத்தி இல்லையா? கவிதை உற்பத்தி
இல்லையா?

எந்திரங்கள் வாழ்க்கைக்காக உற்பத்திக்
கின்றன.

கவிதைகள் வாழ்க்கையையே உற்பத்திக்
கின்றன.

மானுடப் பயணத்தில் கவிதைக்கு இரண்டு
வேலை. சாலை போடுவதும்;
சக்கரமாவதும்
அதுவே.

என் கவிதைத் திறத்தாலே இந்த ககனத்தை பாதிப்பேன்; என் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தை பாலிப்பேன்.

எனக்குச் சிற்பம் தெரியாது; சித்திரம் வராது; சங்கீதம் முடியாது. ஆனால் உளி, தூரிகை, வயலின் அத்தனை வேலைகளையும் என்பேனா செய்யும்.

வாழ்க்கை எங்கெங்கே தேங்கியிருக்கிறது என்று கண்டறிவேன்.

ஆனால், 'கோபர் நிக்கஸ்' மாதிரி வெளியே சொல்லாமல் உண்மையின் கல்லறையாய் ஒளித்து வைக்க மாட்டேன்.

என் அனுபவங்களை இந்தப் பிரபஞ்சத்தை நோக்கிப் பிரகடனம் செய்வேன்.

பறவைகளைப்பெயர்சொல்லிஅழைப்பேன்.

மொட்டுகள் மலரும் வரை உட்கார்ந்திருப்பேன்.

ஒவ்வொரு பனித்துளியிலும் ஒரு கிரக ஆராய்ச்சி நடத்துவேன்.

நீரோடையின் பாஷைக்கு லிபி கண்டு பிடிப்பேன்.

எத்தனையோ நூற்றாண்டுகளாய் இயற்கைக்கு எதிர்த் திசையில் ஓடிக் கொண்டிருக்கும் மனிதர்களை எந்திரங்களின் பற்சக்கரங்களை விட்டு மீட்டு வருவேன்.

பிறந்தது முதல் புகைமட்டுமே சுவாசித்தவர்களுக்கு பிராணவாயு தருவேன்.

தோட்டத் தொழிலாளிகளோடு பாட்டுப் படிப்பேன்.

என் மகிழ்ச்சியை உலக வானொலியில் ஒலிபரப்புவேன்.

உலகத்தின் சாலைகளை நோக்கி என் பயணம் இந்தத் தொட்டிலிலிருந்தே தொடங்கட்டும்.

முதலில் இந்த கிராமத்தின் பூகோளமறிவேன்.

தோட்டம் — அடுப்பு — படுக்கை என்ற முக்கோணங்களில் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் இந்த மனிதர்களின் மனோநிலை தெளிவேன்.

திருஞானம் எழுந்தான்.

உற்சாகக் காற்றாய் ஊருக்குள் நடந்தான்.

அசையும் கொடிகள் அவனை ஆமோதிப்பதாகவும் —

கடந்துபோகும் மேகம் கவரி வீசுவதாகவும்—

கையேந்தும் கிளைகள், எங்களை ரட்சிப்பாயா



''அதான் தீபாவளி எப்பவோ முடிஞ்சு போச்சே... இன்னைக்கு என்ன ஸ்வீட், வடை, பாயசம் எல்லாம்... பிரமாதமா...?''

''புது மாப்பிள்ளை நேத்துத்தான் ஊருக்குப் போனார். அந்தச் சந்தோஷம்தான்!''

— ஆர். ரத்தினசாமி.

என்று அவனை யாசிப்பதாகவும் அவனுக்குப் பட்டது.

நடந்தான்.

போட்டுக்கொடுத்த பாதைகளில் போகாமல் கால்போகும் போக்கில் காட்டுவழி நடந்தான்.

மனிதர்கள் இல்லாத இடங்களில் பறவைகள் பாடிக் கொண்டிருந்தன.

காட்டுக்குள் ஓர் ஏரி படுத்திருந்தது.

நான்கைந்து இளைஞர்கள் அந்த ஏரியின் தூக்கத்தின்மேல் தூண்டில்வீசிக் கலைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஏரியிலிருந்து நாடு கடத்தப்பட்ட மீன்கள் ஓலைப்பெட்டியில் உயிர் ததும்பின.

பார்த்தான் திருஞானம்.

ஓடோடிச் சென்று ஓலைப்பெட்டியை எடுத்தான்.

உயிர் செலவழிந்து கொண்டிருக்கும் மீன்களை உற்றுப் பார்த்தான்.

அவனிடம் அவைகள் சுதந்திரம் கேட்டன.

மீன்களோடு அவன் ஏதோ பேசினான்.

பிறகு...

எல்லா மீன்களையும் ஏரியில் வீசினான்.

தூண்டிலை எறிந்துவிட்டு இளைஞர்கள் எழுந்தார்கள்; அவர்கள் கண்களின் சிவப்பில் ஏரிக்கரை எரிந்தது.

— இன்னும் செல்வேன்.

ஆறுகளை இணைக்கச் சொல்கிறாரே, கருணாநிதி?




* திருப்புமுனை * இணைக்க யோசனை

° ஆர். ராஜேஸ்வரி, சென்னை — 91.

? பட்டிமன்றங்கள் தேவைதானா?

! ஆஹா! ஒரு பட்டிமன்றம் வைக்க அருமையான தலைப்பு!

° டி. சீனிவாசன், சென்னை — 79.

? தேசிய வளர்ச்சி கவுன்சிலில் இந்தியாவில் உள்ள ஆறுகளை இணைக்கக் கருணாநிதி யோசனை கூறியுள்ளாரே?

! அது ஒன்றும் புதிய யோசனை அல்ல. ஏற்கெனவே பல அறிஞர் பெருமக்கள் கூறி வந்திருப்பதுதான். ஆனால் நிறைவேற்றுவது யார்? நமது அரசியல்வாதிகள் வோட்டு மீதுதான் கண்ணாயிருக்கிறார்களே தவிர, நாட்டின் மீது கண்ணாயில்லையே! ஜப்பானில் கடல் படுகைக்கடியில் டன்னல் சாலை அமைத்துத் தீவுகளை இணைக்கிறார்கள். பிரிட்டனும் பிரான்ஸும் கடல் படுகைக்கடியில் டன்னல் ரயில் விடுகிறார்கள். நாம் என்ன செய்கிறோம்? பந்த் நடத்துகிறோம். அயோத்திக்கு ரதம் விடுகிறோம். மதுக் கடைகளை ஏலம் விடுகிறோம். இந்த நாடு உருப்படவா செய்யும்?

° எஸ். சுந்தரராஜ், பாளையங்கோட்டை.

? 'தே. மு. அரசு கவிழ்ந்த மறுதினமே தி. மு. க. அரசு கவிழும்' என்கிறாரே, ப. சிதம்பரம்?

! அப்படி ஏதும் நேர்ந்து விட வேண்டாம் என்றுதான் முன்னெச்சரிக்கையாகப் பிரதமர் கூட்டிய முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் கழன்று கொண்டாரோ, கருணாநிதி!

° எம். சுப்புலட்சுமி, அருப்புக்கோட்டை.

? 'தமிழ் நாட்டில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது தற்கொலைக்குச் சமம்' என்று வாழப்பாடி கூறியுள்ளாரே?

! தொடர்ந்து ஜெ.யுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது தமிழகக் காங்கிரஸின் தற்கொலை. தனித்துப் போட்டியிடுவது வாழப்பாடியாரின் அரசியல் எதிர்காலத்தின் தற்கொலை. இன்று நாட்டில் சுயநல அரசியல்தானே முக்கியத்துவம் பெறுகிறது!

° த. சத்திய நாராயணன், அயன்புரம்.

? ஹெக்டே என்னவானார்?

! அரசியலில் அவரே நோயாளியாகி விட்டதால் தமக்குத்தாமே வைத்தியம் பார்த்துக் கொண்டிருப்பார் ஹெக்டே.

° கே. வேல்சாமி, மதுரை.

? 'கல்விக் கண் திறந்தவர் காமராஜர்தான் என்றாலும் அதற்கு ஒளி கொடுத்தவர் கலைஞர்தான்' என்று ஜோக்கடிக்கிறாரே பராசக்தி?

! உண்மையை மறைக்கவும் முடியாது; கலைஞரையும் திருப்திப்படுத்த வேண்டும். வேறு எப்படி பதில் சொல்வதாம்?

° லீலா ராம், தக்கலை.

? இந்தியாவில் ஏமாளி யார்? யார்?

! ஒருவரா, இருவரா? இருக்கிறார்களே, எண்பது கோடிக்கும் அதிகமாக!

° வண்ணை கணேசன், சென்னை.

? பணம் பாதாளம் வரை பாயும்... பதவி?

! அயோத்தி வரைதான் போயிருக்கே!

° ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? கலைஞர் ஆட்சியில் வரவேற்கத்தக்க அம்சம் எது?

! சுறுசுறுப்பு.

* **ஜி. அர்ஜுனன், திருப்பூர்.**

? ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் கட்டியவர்களை விட்டு விட்டுக் கழக அரசை மட்டுமே

குறை கூறுகிறதே கல்கி, அது ஏன்?

! கோபுரத்தில் விரிசல் விட்டிருக்கிறது என்ற செய்தியே அதைக் கட்டியவர்களைக் குறைகூறுகிற விஷயம்தானே? அதன் பிறகு அதனைப் பாதுகாக்க அரசாங்கம்தானே நிபுணர் குழு அமைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது. பிறப்பித்த ஆணையை அது சரிவர நிறைவேற்ற வேண்டாமா? அதைத்தான் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. மேலும் கோபுரம் கட்டியதில் தனக்குப் பொறுப்பே கிடையாது என்பது போல் அரசாங்கம் ஒதுங்க முடியாது. எந்தக் கட்டடம் எங்கே கட்டப்பட்டாலும் அரசாங்கம்தான் பிளான்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்து அனுமதி வழங்குகிறது. இனி நடக்க வேண்டிய காரியங்கள் பற்றியும் ஆக்கபூர்வ யோசனைகளைக் கல்கி கட்டுரை வழங்குகிறது. எனவே குறைகூறுவது மட்டுமே கல்கியின் நோக்கமல்ல என்பது தெளிவு.

° அ. கிருஷ்ணமூர்த்தி, நரிப்பாளையம்.

? தீபாவளியன்று திரைக்கு வந்த படங்களில் தங்களின் கவனத்தைக் கவர்ந்தது எது?

! சத்திரியன், மைக்கேல், அவசர போலீஸ்... ஆகியவை கவனத்தைக் கவர்ந்

° ரூ. 20 பரிசு பெறுபவர்:

விஜயலக்ஷ்மி சுவாமிநாதன்,
ஆய்வாளர்,
திருத்துறை மாஜிஸ்திரேட் கோர்ட் நெ. 5,
திருச்சி — 620 001.

தாலும் நெஞ்சில் நிலைக்கப் போவதில்லை.

° மல்லிகை மன்னன், மதுரை.

? மற்றவர் பலத்தையும் பலவீனத்தையும் ஆராய்ச்சி செய்கிறீரே, உமது மிகப் பெரிய பலம் என்ன? பலவீனம் என்ன? சொல்வீரா?

! எல்லா விதங்களிலும் நல்லவனாக இருக்க முயல்வதே பலம். இன்றையச் சூழ்நிலையில் அதுவே பலவீனமும்.

° விஜயலட்சுமி சுவாமிநாதன், மருதவன்சேரி °

? வசதிகள் பெருகினாலும் பண்டிகை நாட்கள் முன்பு போல் உற்சாகமாக இல்லையே, ஏன்?

! முன்பு நமக்கு வசதிகள் குறைவாக இருந்தாலும் நாட்டை நினைத்தால் பெருமையாக இருக்கும். அதனால் சந்தோஷமாக இருந்தது. இன்று தனி நபர்களுக்கு வசதிகள் பெருகினாலும் நாட்டை நினைத்தால் வருத்தமாயிருக்கிறது. அதனால் உள்ளத்தில் உற்சாகம் இல்லை.

° அ. முஸ்தபா, தக்கோலம்.

? அவசர போலீஸ் 100 படம் வெளி வந்ததால் பாக்யராஜுக்கு ஒரு திருப்பு முனை ஏற்படுமா?

! ஏற்பட்டு விட்டது. உபயம்: எம். ஜி. ஆரின் அரை குறைப் படம்.

° கே. பிரபுகுமார், தூத்துக்குடி.

? அபூர்வ சகோதரர்கள், மைக்கேல் மதன காமராஜன் — கமலின் நடிப்பு எதில் டாப்?

! அபூர்வ நடிப்பு அடிக்கடி தோன்றுவது அல்ல!

° கே. ரவி, மதுரை — 20.


? பத்து ஆண்டுக்குள் ஒரு கோடி பேருக்கு வேலை என்று பிரதமர் அறிவித்துள்ளாரே?

! தேர்தலின் போதுதான் வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். வி. பி. சிங் இப்போது தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவே வாக்குறுதிகளை அள்ளி வீச ஆரம்பித்து விட்டார்!

° நற்கோவைக்குச் சமம்!



° அபூர்வ நடிப்பு



° கவி டிம்! கவிழும்!



° அள்ளி வீசுகிறார்!



° மன்னவானார்!



நீங்கள் கேட்டவை — தராசு

கூவத்திலே ஒரு குளியல்!



சர்வர்: உங்க பக்கத்திலே என்ன ஸார் ஒரு பெட்டி?

சாப்பிட வந்தவர்: சாப்பிட்டதுக்கப்புறம் எனக்கு உதவியாக இருக்கட்டும்னு ஒரு வெட் கிரைண்டர் கொண்டாந்திருக்கேன்!

— எஸ். ஆர். பிரேம்குமார், சென்னை.



நுணுக்கமான அறுவைச் சிகிச்சைக்கான லேசர் கத்தி ஒன்றை ரஷ்ய, அமெரிக்க, இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். அதைப் பரிசோதிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பிய போது, ஒரு கொசு பறந்து வந்தது. அமெரிக்க விஞ்ஞானி அதை அந்த லேசர் கத்தியால் ஒரு போடு போட்டார். அது இரண்டு துண்டாக விழுந்தது.

அவரை விடத் தான் திறமைசாலி என்று நிரூபிக்க ரஷ்யர் விரும்பினார். அப்போது மற்றொரு கொசு வந்தது. அதை அவர் வெட்டியதும் அது மூன்று துண்டாக விழுந்தது!

"இந்தியருக்கும் அப்படிச் செய்ய ஆசை. ஒரு கொசு வந்தது. வெட்டினார். ஆனால் அது வெட்டுப்படாமல் பறந்து விட்டது! மற்ற இருவரும் சிரித்தனர்.

இந்திய விஞ்ஞானி அமைதியாகச் சொன்னார். "நாங்கள் உயிர்க் கொலை புரிய மாட்டோம்; நாங்கள் அஹிம்சைவாதிகள். எங்களுக்குத் தேவை குடும்பக் கட்டுப்பாடு! அதை அந்தக் கொசுவுக்குச் செய்து அனுப்பி விட்டேன்!"

— என். ராஜகோபால், சென்னை.



பாங்க் மானேஜர்:

"சார், நீங்க செய்யறது நியாயமில்லை. பெட்ரோலையெல்லாம் சேப்டி லாக்கர்ல வைக்கக் கூடாது!"

— என். வி. ரமேஷ், சேலம்.

தமிழ்நாட்டிலிருந்து என் அத்தையின் மகள் ஆயுர்வேத வைத்தியம் செய்து கொள்ளக் கேரளம் வந்திருந்தாள். வைத்தியர், "குப்பி குலுக்கிச் சேவிக்க



ஜும்மா'' என்றார்.

அவன் குப்பியை நன்றாகக் குலுக்கி, மேசை மீது வைத்து விழுந்து நமஸ்கரிக்கத் தொடங்கினான். எங்களுக்கு அடக்க முடியாத சிரிப்பு. 'சேவிப்பது' என்பது வைத்திய மொழியில் 'மருந்துண்பது' என்றே பொருள் என்று விளக்க பாவம், வெட்கமாகிப் போனான் அவன்.

— வீரா கோபாலன், செகந்திராபாத்.



மனைவி: ''தாய் வீட்டுச் சீதனமா, ஒரு லாரி நிறைய வீட்டுச் சாமான்கள் கொண்டு வந்திருக்கிறார், எங்க அப்பா!''

கணவன்: ''அப்படியா... உங்க அப்பா கிட்டே சொல்லி அந்த லாரியையும் சீதனமாக் கொடுக்கச் சொல்லு!''

— பத்மா ஆனந்தன், சென்னை.



நானும் எனது நண்பனும் ஸ்கூட்டரைப் பார்க் செய்யும் சமயம் லாட்டரிச் சீட்டு விற்கும் சிறுவன் ஓடி வந்து, ''சார், சார், ஒரு டிக்கெட் வாங்குங்க. பரிசு விழுந்தால் இந்த ஸ்கூட்டரை விற்று விட்டு மாருதி காரில் போகலாம்'' என்றான்.

அதற்கு என் நண்பன், ''நான் மாருதி கார்தான் வைத்திருந்தேன். நிறைய லாட்டரி டிக்கெட் வாங்கி போண்டியாகி, காரை விற்று விட்டு இப்போது ஸ்கூட்டரில் வருகிறேன். மறுபடி சீட்டு வாங்கினால் இதையும் விற்று விட்டு சைக்கிளில்தான் போக ணும்'' என்றவுடன் சிறுவன் முகத்தில் ஈயாடவில்லை.

— ஜே. சாயிராம், திருச்சி.

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!

''எதிர் வீட்டுக்கு வந்திருக்கிறவர் மெட்ராஸுக்குப் புதுசுன்னு எப்படிக் கண்டுபிடிச்சே?''

'''பக்கத்துலதான் கூவம் ஆறு ஓடுதாமே, காலாற நடந்து போய்க் குளிச்சிட்டு வந்துடலாமா?'ன்னு கேட்டாரே!''

— க. சம்பத், திருவள்ளூர்.



பட்டி மன்றம் ஒன்றில் ஒரு பேராசிரியர், எதிர் அணியைத் தாக்கும் எண்ணத்தோடு, ''நான் மனைவியோடு இங்கு வந்திருக்கின்றேன். எனவே தெளிவாகப் பேசுகின்றேன். இவர்கள் மனைவியை வீட்டில் விட்டுத் தனியே வந்துள்ளனர். எனவே குழப்புகின்றனர்'' என்றார்.

அவருக்குப் பதிலடி கொடுத்த எதிரணித் தலைவர், ''உண்மைதான்; இனி மேல் இவர் கல்லூரிக்கும் தம் மனைவியோடு செல்லட்டும். அப்பொழுதுதான் மாணவர்களுக்கு இவரால் குழப்பமில்லாமல் பாடம் நடத்த முடியும்'' என்று ஒரு போடு போட்டார். கூட்டத்தில் எல்லோருக்கும் வாயெல்லாம் பல்!

— ச. கதிர்வேல், பட்டி வீரன்பட்டி.





மைக்கேல், மதன. காம, ராஜன்

சின்னஞ்சிறு வயதில் பிரிந்து விடுகிற, நான்கு குழந்தைகள், வளர்ந்த பின், பாட்டுப் பாடாமல் ஒன்று சேர்வது தான் கதை. இதை வைத்துக் கொண்டு, சுவாரசியமான படம் எடுக்க முடியுமா என்றால் 'ஓ எஸ்' என்கிறார்கள் பஞ்சு அருணாசலமும், கமல்ஹாசனும்.

ஃப்ரேமுக்கு ஃப்ரேம் கமல்தான். நாலு ரோல்களில், காமேஸ்வரன் ரோலில் கமல் வித்தியாசமாய்ப் பளிச்சிடுகிறார். பாலக்காட்டுத் தமிழை வெகு கேஷுவலாய்ப் பேசியபடி அவர் வரும் காட்சிகளில் தியேட்டரே கலகலா. அடுத்த இடத்தைப் பிடிப்பவர் தியணைப்புப் படை ராஜு.

ஊர்வசி, நடிப்பில் குஷ்புவையும், ரூபிணியையும் தூக்கிச் சாப்பிட்டு விட்டார். நாகேஷ் நாகேஷ்தான்.

''நான் ஒரு குக். பாலக்காடு சொந்த ஊர். பாலக்காடு என்றால் பாலக்காடு இல்லை. பக்கத்திலே குக் கிராமம்'' என்று காமேஸ்வரன் கூறும்போது, பட்டென்று, ''நீங்களும் 'குக்', உங்க கிராமமும் குக்கா?'' என்று கூறிச் சிரிக்கிறாரே ஊர்வசி — இதுபோல 'களுக்' கென்று சிரிக்க வைக்கும் நகைச்சுவை வசனங்கள் ஏராளம். கிரேஸி மோகன் சினிமாவில் நல்ல ஓர் இடம் பிடித்து விட்டார்.

கண்டதை எல்லாம் திருடும் குணமுடைய ஊர்வசியின் கேரக்டர் புதுமையான ஒன்று. ரசிக்கும்படி இருக்கிறது. ஆனாலும், கடைசியில் அவரைத் தாவித் தாவிச் சண்டையெல்லாம் போட வைத்திருக்க வேண்டுமா?

ஒரு கட்டத்தில், நாலு கமல்களும் மீசையை எடுத்துவிட்டு வரும்போது ஏற்படும் டோட்டல் குழப்பத்தில் தியேட்டரே அதிருகிறது.

'ரம்பம்... பம்...' பாடல் படமாக்கப் பட்டிருக்கும் முறைக்கும், 'சுந்தரி நீயும்' பாடலைக் கமல் பாடியிருக்கும் விதத்துக்கும் ஸ்பெஷல் பாராட்டுக்கள்.

எஸ். பி. பி. நடிக்க வந்து விட்டார். கமல் பாட ஆரம்பித்து விட்டார். எஸ்.பி.பி. யைப் போலவே இரண்டு வேலைகளையும் அழகாய்ச் செய்கிறார்.

இளைமாக்ஸை அனாவசியத்துக்கு நீட்டியிருக்கிறார்கள். மலைஉச்சி பங்களாவில், படத்தில் வரும் எல்லாக் கதாபாத்திரங்களும் கூடி அத்தனை நேரத்துக்கு அடிக்கிற லூட்டி எரிச்சல்தான் ஏற்படுத்துகிறது.

மொத்தத்தில்: ஜாலி.

— ஜூலி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வெ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

இப்போது, விம்
ஏறக்குறைய பாதிவிலையிலே...



பேரச் சலுகை
அளிக்கும் (கேரிபேக்) தூக்குப் பை.

இப்போது ஏறக்குறைய பாதி விலையில் கிடைக்கிறது நீங்கள் விரும்பும் விம் ... பணமிச்சம் தரும் (கேரி பேக்) தூக்குப் பைகளிலே!

ஒப்பிட்டுப் பாருங்களேன்

பேக்	100 கிராம் விலை
500 கிராம் கேனில்	145 பைசா
2.5 கிலோ கேரிபேக்கில்	83 பைசா



உபயோகிப்பிலேயோ மேலும் சிக்கனமாயும் கிடைக்கிறது இதில் உங்களுக்கு ஒரு துளியளவு விம் பாத்திரங்களின் மேல் நுரை கொழித்து பிசுக்குகளை விரைவாக வெளியேற்றுகிறது ... அதிகப் பாத்திரங்களைத் துலக்குகிறது ஒளிமிளிர.

விரைந்தோடி இன்றே வாங்குவீர் புதிய விம் கேரிபேக் உங்கள் தேவைக்குகந்த அளவிலே (தேர்ந்தெடுக்கக் கிடைப்பவை 500 கிராம், 1 கிலோ, அல்லது 2.5 கிலோ பேக்குகள்)

ஒரு துளி விம் தரும் துலக்கம் அதிகப் பாத்திரங்கள் ஒளிமினுக்கும்

LINTAS-VG-482A|2519 TAM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka